# வ. உ. சிதம்பரனார்

மா. ரா. அரசு



இந்திய
இலக்கியச்
சிற்பிகள்

# வ.உ.சி.

(வ. உ. சிதம்பரனார் )

உள் அட்டையில் காணும் சிற்பக் காட்சியில் பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி கண்ட கனவின் பலனை மன்னர் சுத்தோதனருக்கு நிமித்திகர் மூவர் விளக்குகின்றனர். அவர்களுக்குக் கீழே அமர்ந்து அந்த விளக்கத்தை எழுதுகிறார் ஓர் எழுத்தர். எழுதும் கலையைச் சித்திரிக்கும் முதல் இந்தியச் சிற்பம் இதுவாகவே இருக்கலாம்.

நாகார்ஜுன மலைச்சிற்பம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு.( பட உதவி. நேஷனல் மியூசியம், புது தில்லி)

இந்திய இலக்கியச் சிற்பிகள்

# வ.உ.சி.

(வ. உ. சிதம்பரனார் )

மா. ரா. அரசு

சாகித்திய அகாதெமி

*Wa. Woo. Cee* (Va.Woo.Chidhambaranar)Monograph in Tamil by Ma.Ra. Arasu. Sahitya Akademi, New Delhi, 2005, Rs. 25

© சாகித்திய அகாதெமி
முதல் பதிப்பு: 2005

ISBN - 81 - 260 - 1713 - 9

இரவீந்திர பவன், 35, பெரோஸ்ஷா சாலை,
புது தில்லி 110001

விற்பனை

*'ஸ்வாதி' மந்திர் சாலை, புது தில்லி 110 001.*

மத்தியக் கல்லூரி வளாகம், பல்கலைக்கழக நூலகக் கட்டிடம்,
டாக்டர் அம்பேத்கர் வீதி, பெங்களூர் 560 001

443, குணா காம்பளக்ஸ்(பழைய எண் 303 ), அண்ணா சாலை,
தேனாம்பேட்டை, சென்னை 600 018

ஜீவன் தாரா பில்டிங், 4வது மாடி,
டைமண்ட் ஹார்பர் சாலை, கல்கத்தா 700 053

172, மும்பய் மராத்தி கிரந்த சங்கிரகாலய சாலை,
தாதர், மும்பய் 400 014

விலை ரூ 25

*அச்சகம்: சிக்மா கிராப்பிக்ஸ், சென்னை-5*

# பொருளடக்கம்


| | |
|---|---|
| முன்னுரை | 7 |
| வாழ்க்கைச் சுவடுகள் | 9 |
| வ.உ.சி. காலத் தமிழ்ச்சூழல் | 25 |
| கட்டுரைகள் | 31 |
| மொழிபெயர்ப்புகள் | 48 |
| உரைகள் | 64 |
| பதிப்புகள் | 83 |
| சொற்பொழிவுகள் | 93 |
| படைப்பிலக்கியங்கள் | 103 |
| ஆளுமைத் திறன் | 122 |
| பயன்பட்ட நூல்கள் | 125 |
| | |
| இணைப்புகள் | |
| வ.உ.சி.யின் நூல்கள் | 129 |
| வ.உ.சி.யின் கட்டுரைகள் | 130 |
| வாழ்க்கைக் குறிப்புகள் | 131 |

# முன்னுரை

**க**ப்பலோட்டியமையும் செக்கிழுத்தமையும் வ.உ.சி. பொதுவாழ்வின் வீரத் தழும்புகள்; நாடு தழுவிய நிலையில் அன்றைய அரசியல் களத்தில் ஒரு சாதனையாளராக - தன்னேரில்லாத் தலைவராக - தலைவணங்கி ஏற்றுக் கொள்ளப்பெற்ற இந்தியத் தலைவர் அவர். ஆனால், தமிழகம் தனக்கே உரிய 'தனித் தன்மையால்' வ.உ சி.யை - அவருடைய அரும்பெரும் தியாகத்தை வழக்கம்போல் மறந்து போனது; அப்படி ஒரு மனிதர் இருந்ததாகவோ, அப்படியொரு நிகழ்வு நடந்ததாகவோ நினைக்கவும் நேரமில்லாமல் சுய உணர்வுகளில் கரைந்து நின்றது.

வ.உ.சி.யின் வீறார்ந்த அரசியல் சாதனைகளே மறக்கப்படும் நிலையில் அதிகம் அறியப்படாதவையான அவருடைய தமிழ்ப் பணிகளின் நிலை கேள்விக்குறிதான்.

ஆனால் காலம் எதையும் மறப்பதுமில்லை; மறைப்பது மில்லை காலப் பெட்டகத்தில் வரலாற்று ஆவணங்களாகப் பதிவாகியுள்ள வ.உ.சி யின் தமிழ்ப் பணிகளின் ஊடே மறைந்திருக்கும் அவருடைய தமிழ் ஆளுமையை - தமிழ் இலக்கிய வரலாற்றில் இடம்பெறத் தக்கனவாய் அவர் விட்டுச் சென்றிருக்கும் தமிழ் முத்திரைகளை அறிமுக நிலையில் வெளிப்படுத்தும் முயற்சியே இந்நூல்.

இதன் உருவாக்கத்திற்குப் பல நிலைகளிலும் துணை நின்றவரான தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் இ. சுந்தரமூர்த்தி அவர்களுக்கு நன்றி கூறுவதில் நிறைவடைகிறேன்.

கிடைத்தற்கரிய வ.உ.சி நூல்களின் பழைய பதிப்பு களையும் இந்நூலாக்கத்திற்குத் தேவையான வேறுபல நூல்களையும் கொடுத்து உதவிய திரு தேவமணி ரஃபேல், பாரி நிலையம் உரிமையாளர் திரு. க.அ செல்லப்பன், அவர் மகன் திரு. செ. அமர்ஜோதி, அறிஞர் பெ சு.மணி ஆகியோருக்கு நன்றி கூறுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த அரிய வாய்ப்பை எனக்கு வழங்கிய சாகித்திய அகாதெமிக்கும் அதன் உறுப்பினர்கள், பொறுப்பாளர் ஆகியோருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மா.ரா. அரசு**

# 1
# வாழ்க்கைச் சுவடுகள்

## பிறப்பும் கல்வியும்

அன்றைய திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்தது ஓட்டப்பிடாரம். கட்டபொம்மனின் பாஞ்சாலங்குறிச்சிக்கு அருகில் உள்ள அவ்வூர் ஒரு வட்டத்தின் தலைநகராக விளங்கியது. ஆங்கில ஆட்சியின்போது ஓட்டப்பிடாரத்தில் நீதி மன்றங்கள் செயல்பட்டு வந்தன. அந்நீதி மன்றங்களில் இரண்டாம் நிலை வழக்கறிஞராகப் பணியாற்றியவர் உலகநாதர். அவர் மனைவி பரமாயி. அவர்களது மகனாக 5.9.1872 அன்று வ.உ.சி. பிறந்தார்.

உடன்பிறந்தவர் அறுவர். தமக்கை ஒருவர்; பெயர், வள்ளியம்மை. தங்கையர் இருவர்; ஒருவர் சிறுவயதிலேயே மறைந்தார் மாலையம்மை என்பவர் திருமணம் முடித்து நிறைவுடன் வாழ்ந்தார் 'பெருமையும் கல்வியும் பேணுறும் தங்கையென் அருமை மாலையம்மை' என்று தம் சுய சரிதையில் குறிப்பிடுகின்றார் வ.உ.சி. (ப.5). தம்பியர் மூவர் பள்ளிப் பருவத்தில் ஒருவரும் இளமையில் இன்னொருவரும் மறைய, எஞ்சி வாழ்ந்தவர் ஒருவரே. 'அருமையொடு வளர்ந்தோன் எவனுக்கும் இளையான், ஈடில் குணத்தான் மீனாட்சி சுந்தரம்' என்பார் வ.உ.சி. (சுயசரிதை, பக். 4-5). அருமையொடு வளர்ந்த ஈடில் குணத்தவரான மீனாட்சிசுந்தரம், வ.உ.சி.க்கு அளிக்கப்பெற்ற 'இரட்டை ஆயுள் தண்டனை' என்னும் கொடிய தீர்ப்பைக் கேட்டு அறிவு திரிந்து பித்தரானவர்.

ஓட்டப்பிடாரம் திண்ணைப் பள்ளியில் தொடக்கக் கல்வி அமைந்தது. ஆங்கில அறிவின் அவசியத்தை உணர்ந்தவரான அவரது தந்தையார் அதற்கு ஏற்பாடு செய்தார். கிருட்டினன் என்பவரிடம் ஆங்கிலம் பயின்றார். அவர் மாற்றலாகி வேற்றூர் சென்றமையால் வ.உ.சி.யின் ஆங்கிலக் கல்வி தடைப்படுவதை உலகநாதர் விரும்பவில்லை அதனால், ஓட்டப்பிடாரம் சன்னிதித் தெருவில் பள்ளிக்கூடம் ஒன்றை அமைத்தார் அருகிலுள்ள புதியம்புத்தூர் என்னும் ஊரில் இருந்த ஆடம்சன் என்ற கிறித்தவப் பாதிரியாரிடம் அப்பள்ளியின் பொறுப்பை ஒப்படைத்தார்.

அந்தப் பள்ளியில் படிப்பு முடிந்ததும் தூத்துக்குடி சென்று அங்குள்ள புனித சேவியர் பள்ளியிலும் கால்டுவெல் பள்ளியிலும் பயின்று பள்ளி இறுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றார். பிறகு, திருச்சியில் சட்டம் பயின்று 1894இல் வழக்கறிஞரானார் **(Second Grade Pleader).**

**வழக்கறிஞர் பணி**

ஒட்டப்பிடாரத்தில் வழக்கறிஞர் பணியைத் தொடங்கிய வ.உ.சி. குற்றவியல் துறையில் சிறந்த வழக்கறிஞர் என்ற பெயரை வெகு விரைவில் பெற்றார். காவல் துறையினர் தொடுக்கும் தவறான வழக்குகளால் பாதிக்கப்படும் ஏழைகளுக்குக் கட்டணமின்றி வாதாடினார். தவறு செய்தவர் எவராயினும் காவல், நீதித்துறைகளைச் சார்ந்தவராயினும் அவர்களுக்குரிய தண்டனையைப் பெற்றுத் தந்தார் கையூட்டு வாங்குவதை வழக்கமாகக் கொண்டிருந்த ஏகாம்பர ஐயர் என்னும் துணைக் குற்றவியல் நீதிபதி, வாசுதேவராவ், பஞ்சாபகேச ஐயர் ஆகியோர் வ உ.சி.யால் தண்டனைப் பெற்றவர்களுள் குறிப்பிடத்தக்கவர்களாவர். அதிகாரிகளைப் பகைத்துக் கொண்டு உள்ளூரில் வ.உ.சி. வழக்கறிஞர் தொழில் நடத்துவதை அவர் தந்தை விரும்பவில்லை. தூத்துக்குடிக்குச் செல்லுமாறு அறிவுறுத்தினார். தந்தை சொல் ஏற்று, வ.உ சி. 1900 ஆம் ஆண்டில் தூத்துக்குடிக்குச் சென்றார்.

**திருமணம்**

1895 இல் வ.உசி.யின் திருமணம் நடந்தது. வள்ளியம்மை என்பவர் வாழ்க்கைத் துணையானார் தமிழ்ப்பற்று, ஆன்மிகப்பற்று இரண்டிலும் வ.உ.சி.க்கு ஈடுகொடுத்த வள்ளியம்மை அவருடைய சமூகச் சீர்திருத்தச் செயல்களுக்கும் துணைநின்றார் எல்லா நிலைகளிலும் வ.உசி.யின் மனம் ஒத்தவராக வாழ்ந்த அவர் 1901 இல் காலமானார். அவர் மறைவு வ உ.சி.யைப் பெரிதும் பாதித்தது, தம்முள் கலந்து கரைந்து நிறைந்திருந்த வள்ளியம்மை பற்றிய இனிய நினைவுகள் வ.உசி.யை வேதனையில் ஆழ்த்தின. வ.உ.சி யின் கவியுள்ளம் அவற்றைக் கவிதைகளில் பதிவு செய்தது. சுய சரிதையிலும் தனிப்பாடல்களிலும் இடம் பெற்றுள்ள அப்பாடல்களில் வள்ளியம்மை வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

அக்கால வழக்கப்படி வ.உ.சி. இரண்டாம் திருமணம் செய்து கொண்டார். இரண்டாவது மனைவியான மீனாட்சியம்மையும்

வ.உ.சி.யின் இலட்சிய வாழ்க்கைக்கு உற்ற துணையாக விளங்கினார். இவர்களுக்குப் பிறந்த குழந்தைகள் எண்மர். பிள்ளைகள் நால்வர்; பெண்கள் நால்வர் உலகநாதன், ஆறுமுகம், சுப்பிரமணியன், வாலேஸ்வரன்-பிள்ளைகள். ஞானாம்பிகை, வேதவல்லி, ஆனந்தவல்லி, மரகதவல்லி- பெண்கள். முதல் மகனான உலகநாதன் இளம் வயதிலேயே மறைந்து விட்டார். துணைவியார் மீனாட்சியம்மை 1951இல் இறைவனில் கலந்தார் (வ.உ.சி. சுப்பிரமணியன், 'எங்கள் குடும்பம்' சுடர், வ.உ.சி. மலர், தில்லித் தமிழ்ச் சங்கம், பக் 29-32).

## தூத்துக்குடி வாழ்க்கை (1900-1908)

தூத்துக்குடி வாழ்க்கையின் தொடக்க காலத்தில் வ.உ.சி.யின் மனம் ஆன்மிகச் சிந்தனைகளில் தோய்ந்திருந்தது. தனிமனித ஒழுக்கத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர் வ.உ.சி. தனி மனித வாழ்க்கை நெறிப்படும்போது சமுதாயம் மேம்படும் என்பது அவர் நம்பிக்கை. இந்த நம்பிக்கையே ஆன்மிக இதழ் ஒன்றைத் தொடங்கும் விழைவை அவருள் ஏற்படுத்தியது. ஒத்த உணர்வுடைய நண்பர்களோடு இணைந்து அதற்கான முயற்சிகளைத் தொடங்கினார். 18.8.1900 அன்று அறிக்கை ஒன்று வெளியிடப்பெற்றது. 1900 செப்டம்பரில் 'விவேகபாநு' என்ற பெயரில் வ.உ.சி.யும் அவர் நண்பர்களும் விரும்பிய ஆன்மிக இதழ் பிறந்தது. "லௌகிகத்திற்கும் வைதிகத்திற்கும் அவசியமான ஒழுக்கங்களை எடுத்துப் போதிக்கும் பத்திரிகை" என்ற அறிவிப்போடு வெளிவந்த முதல் இதழ், வ.உ.சி.யின் மனநிலையை - நோக்கத்தைத் தெளிவுபடுத்தியது.

வ.உ.சி.யின் ஆன்மிக, இலக்கிய ஈடுபாடுகள் பற்றிய ஆய்வு முழுமையடைய வேண்டுமென்றால், 'விவேக பாநு' இதழின் வரலாறும் அதில் இடம்பெற்றுள்ள வ.உ.சி.யின் படைப்புகளும் அறியப்பட வேண்டும்.

தூத்துக்குடியில் அந்நாளில் புகழ்பெற்று விளங்கிய 'தூத்துக்குடி சைவசித்தாந்த சபை'யின் பணிகளில் தம்மை இணைத்துக் கொண்டார் வ.உ.சி.யின் இலக்கியப் பொழிவுகளின் தொடக்கம் சைவசித்தாந்த சபையில் அமைந்தது. திருக்குறளில் மிகுந்த ஈடுபாடு கொண்டவரான வ.உ.சி.யின் ஆரம்பகால இலக்கியப் பொழிவுகள் திருக்குறள் பற்றியனவாகவே இருந்தன. 'ஒழுக்கம்', 'சிற்றினஞ் சேராமை', 'அருளுடைமை', 'தவம்', 'கள்ளாமை', 'நிலையாமை', 'திருக்குறள் முதலதிகார ஆராய்ச்சி' ஆகிய தலைப்புகளில் ஜூன் 1904

முதல் ஆகஸ்டு 1905 வரையில் சைவசித்தாந்த சபையில் பேசினார்.(தூத்துக்குடி சைவசித்தாந்த சபையின் இருபத்திரண்டாம் வருட அறிக்கைப் பத்திரமும் நிபந்தனைகளும், 1905, ப.9).

**வ.உ.சி.யின் அரசியல் வாழ்க்கை**

ஆன்மிகத்திலும் இலக்கியத்திலும் கவனம் செலுத்திய வ.உ.சி.யைக் காலம், அரசியலை நோக்கித் திருப்பியது. அன்றைய இந்தியாவின் தலைமை ஆளுநராக இருந்த கர்சன், வங்காளத்தை இரண்டாகப் பிரித்தார். அதை எதிர்த்து வங்காளத்தில் உருவான கிளர்ச்சி இந்தியா முழுவதும் பரவியது. சுதேசி இயக்கம் உருவானது. சுயராஜ்யம், சுதேசித் தொழில் முயற்சி, அந்நியப் பொருள் புறக்கணிப்பு, சுதேசிக் கல்வி ஆகியவை அவ்வியக்கத்தின் முதன்மையான குறிக்கோள்களாக அமைந்தன. திலகரின் கோட்பாடுகள் மக்களிடையே செல்வாக்குப் பெற்றன. இவையெல்லாம், வ.உ.சி. யுள்ளும் தாக்கத்தை ஏற்படுத்தின.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலேயே திலகரின் அரசியல் செயற்பாடுகளால் ஈர்க்கப்பெற்று அரசியல் உணர்வு பெற்றிருந்த வ.உ.சி. சுதேசியம் என்னும் புதிய எழுச்சியில் கலந்து கரைந்தார்.

1897இல் சென்னையில் இராமகிருஷ்ணமடம் நிறுவப் பெற்றது. இராமகிருஷ்ணரின் நேர் சீடர்களில் ஒருவரான சுவாமி இராமகிருஷ்ணானந்தர் அதன் தலைவரானார். அவரை வ.உ.சி. சென்னையில் சந்தித்தார். இராமகிருஷ்ணானந்தர், சுதேசியத்தை அவருக்கு அறிவுறுத்தினார். வ.உ.சி.யின் தேசிய உணர்வு எழுச்சி பெறுவதற்கும் சுதேசி இயக்கத்தில் அவர் தீவிரமாக ஈடுபடுவதற்கும் அந்த வழிகாட்டுதலும் ஒரு காரணமாயிற்று.

> *''சுதேசியம் ஒன்றே சுகம்பல அளிக்கும்*
> *இதேஎன் கடைப்பிடி என்றனன். அவனுரை*
> *வித்தென விழுந்தது மெல்லிய என்னுளம்*
> *சித்தம் அதனைச் சிதையாது வைத்தது''*

**(சுயசரிதை, ப. 41)**

என்று வ.உ.சி. குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு, பல நிலைகளிலும் தாக்கம் பெற்றவரான வ.உ.சி. 'கைத் தொழில் வளர்சங்கம்', 'தருமசங்கம்' என்னும் அமைப்புகளை ஏற்படுத்தி, தூத்துக்குடியில் தம்முடைய சுதேசி இயக்கப் பணிகளைத் தொடங்கினார்.

*''தூற்றுக் குடிகைத் தொழில்வளர் சங்கம்*
*சாற்றுதற் கரிய தருமசங்கம்*
*எனவிரண் டிலைகொண் டெழுந்ததவ் வித்து''*

**(சுயசரிதை, ப.42)**

என்பார் வ.உ.சி.

**சுதேசிய நாவாய்ச் சங்கம்**

சுதேசியம் என்னும் கோட்பாட்டைச் செயற்படுத்தும் அடுத்த கட்டப் பணியாக வ.உ.சி சுதேசிக் கப்பல் நிறுவனம் ஒன்றை உருவாக்கினார். 'சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி' என்னும் அந்நிறுவனம் 1882 ஆம் ஆண்டின் இந்தியன் கம்பெனி சட்டப்படி 1906 ஆம் ஆண்டு அக்டோபர் பதினாறாம் தேதியன்று பதிவு செய்யப் பெற்றது. இக்கம்பெனியின் மூலதனம் பத்து இலட்சம் என்று நிருணயிக்கப் பெற்றது. பங்கு ஒன்றுக்கு ரூபாய் 25 வீதம் 40,000 பங்குகளை விற்பனை செய்வதன் மூலம் அம்மூலதனத்தைத் திரட்ட திட்டம் வகுக்கப் பெற்றது.

இதன் இயக்குநர் குழுவில் பதினைந்துபேர் இடம் பெற்றனர். புகழ்பெற்ற வழக்கறிஞரும் தேச பக்தருமான சேலம் சி. விஜயராகவா சாரியார் இயக்குநர் குழுவில் ஒருவராக இருந்தார். பாலவநத்தம் ஜமீன்தாரும் மதுரை நான்காவது தமிழ்ச்சங்கத்தின் நிறுவனருமான பாண்டித்துரைத்தேவர் தலைவராக விளங்கினார். வ.உ.சி. துணைச் செயலாளராகச் செயல்பட்டார்.

வ.உ.சி. காலத்தில் இருந்த மற்ற சுதேசிய கப்பல் போக்குவரத்து நிறுவனங்களுடன் ஒப்பிட்டுப்பார்க்கும்போது வ.உ.சியின் 'சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி' யின் தனிப்பெருஞ்சிறப்பை இனங்காண முடிகிறது. அதுவரையில் எடுக்கப் பெற்ற சுதேசிய கப்பல் முயற்சிகளில் வர்த்தக நோக்கு மேலோங்கியிருந்தது ஆனால், வ.உ.சி.யின் வீறார்ந்த முயற்சியில் பொருளாதாரத் தேசியத்துடன் அந்நிய அரசாங்கத்தின் ஏகபோகத்தை எதிர்த்த ஏகாதிபத்திய எதிர்ப்பும் மேலோங்கியிருந்தது.

வ.உ.சி.யின் இப்புதிய சுதேசிய முயற்சியைத் திலகர் பாராட்டினார். அன்றைய சுதேசமித்திரனில் வெளிவந்துள்ள

அச்செய்தி அறியத் தக்கதாகும். திருநெல்வேலியில் உத்தம தேசாபிமானியாகிய சிதம்பரம் பிள்ளை, தூத்துக்குடிக்கும் சிலோனுக்கும் சுதேசிக் கப்பல் போக்குவரத்து ஸ்தாபித்திருப்பது சுதேசியத்திற்கு அவர் செய்திருக்கும் பெரும் பணிவிடையாகும் (மேற்கோள்: என். சம்பத் - பெ.சு. மணி, வ.உ.சிதம்பரம் பிள்ளை, ப.98).

கப்பல்களை விலைக்கு வாங்கும் வரையில் வ.உ.சி.காத்திருக்க வில்லை. எனவே 'மாங்கு சீட்டன்' என்ற கப்பலை வாடகைக்கு அமர்த்தினார். மே, 1907இல் எஸ்.எஸ். காலியா, எஸ்.எஸ். லாவோ என்ற இரண்டு கப்பல்கள் தூத்துக்குடிக்கு வந்தன.

மக்களிடையே வ.உ.சி.க்கு இருந்த அளவற்ற செல்வாக்கின் காரணமாக, தூத்துக்குடிக்கும் கொழும்புவிற்கும் இடையே சுதேசிக்கப்பல் போக்குவரத்து வெற்றிகரமாக நடந்தது. பி.ஐ.எஸ்.என். என்னும் பிரிட்டிஷ் கம்பெனி கட்டணமே இல்லாமல் பயணிகளை ஏற்றிக் கொள்ள முன்வந்தும் பயனில்லை. அதிகார வர்க்கத்தின் துணையோடு சூழ்ச்சிகள் பல செய்யத்தொடங்கியது பிரிட்டிஷ் நிறுவனம்.

ஆயினும், மக்களிடையே நிலவிய சுதேசி உணர்வின் காரணமாக 1907 ஆம் ஆண்டின் இறுதியிலும் 1908 இன் தொடக்கத்திலும் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 30,000 முதல் 40,000 வரையில் பி.ஐ.எஸ். என். கம்பெனிக்கு இழப்பு ஏற்பட்டது. சுதேசிக்கப்பல் நிறுவனத்தின் கப்பல்களில் பயணம் செய்வோரின் எண்ணிக்கை அதிகரித்துவந்தது(நா. இராஜேந்திரன், தமிழ் நாட்டில் தேசியம் சுதேசியம், ப. 85).

வ.உ.சி.யிடம் நிறைந்திருந்த தேசிய உணர்வு கப்பல் கம்பெனியின் ப்ங்குதாரர்களிடம் வெளிப்படவில்லை. வருவாய் ஒன்றே அவர்கள் நோக்கமாக இருந்தது. இதனால் அவர்கள் அரசியல் நெருக்கடிகள் காரணமாக, கப்பல்வாணிபம் பாதிக்கப்பட அனுமதிக்கக் கூடாதென்றும் அதற்கு வ.உ.சி தம் அரசியல் செயற் பாடுகளை விட்டுவிட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டனர். துணைச் செயலாளர் பொறுப்பில் இருந்து விலகி, சம்பளம் பெறும் ஏஜெண்டாகப் பணியாற்றுமாறும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. கப்பல் கம்பெனியின் வளர்ச்சியைக் கருதி, பங்குதாரர்களின் நிர்ப்பந்தத்திற்கு வ.உ.சி. விட்டுக்கொடுக்க வேண்டியதாயிற்று. இறுதியில் ஏஜெண்ட் என்னும் பொறுப்பில் இருந்தும் வ.உ.சி. விலகினார் (என்.சம்பத் -பெ.சு.மணி, வ.உ.சிதம்பரம் பிள்ளை, பக்.105-106).

**சூரத் காங்கிரசு**

இந்திய விடுதலை இயக்க வரலாற்றில் 1907 ஆம் ஆண்டு ஒரு திருப்பு முனையாகும். 1885 இல் தொடங்கப்பெற்ற காங்கிரசுப் பேரியக்கம் முதன் முறையாக 1907 இல் சூரத் நகரில் நடந்த ஆண்டுக் கூட்டத்தில் பிளவுபட்டது; வேறு வேறு சித்தாந்தங்களின் அடிப்படையில் இரு பிரிவுகளாகத் தனித்தனியே செயல்படத் தொடங்கியது. இந்த வரலாற்று நிகழ்வை,

> ''..........தொன்னெறிக் காங்கிரஸ்
> வீரமற் றழிந்தது, வேறொன் றாயது''
>
> (சுயசரிதை, ப.56)

என்று வ.உ.சி. பதிவு செய்துள்ளார்.

சூரத் காங்கிரசு நடவடிக்கைகள் தம்முள் கொண்ட முரண் பாடுகளால் நகைச்சுவையுணர்வும் நாடகப் பாங்கும் கொண்ட ஒரு நாடகமாக அரவிந்த கோஷ் அவர்களால் சித்திரிக்கப் பட்டுள்ளது (என். சம்பத் - பெ.சு.மணி, வ.உ.சிதம்பரம் பிள்ளை, ப.113).

சூரத் காங்கிரசுக்குப் பிறகு வ.உ.சி. அனைத்திந்திய அளவில் புகழ்பெற்றார். திலகர், அரவிந்தர் போன்ற இந்தியத் தலைவர்களில் ஒருவராக ஏற்றுக்கொள்ளப்பட்டார். வ.உ.சி. பெற்ற தலைமைத் தகுதியைப் புதிய கட்சி(தேசியவாதிகளின் கட்சி)யின் செயலாளர்கள் பற்றிய அறிவிப்பு உணர்த்தியது. பம்பாய் மாநிலத்திற்குத் திலகர், வங்காள மாநிலத்திற்கு அரவிந்தர்,சென்னை மாநிலத்திற்கு வ.உ.சி. ஆகியோர் 'தேசியவாதிகளின் கட்சி' யின் செயலாளர்கள் என்னும் அறிவிப்பு வ.உ.சி.யின் புதிய தலைமைத் தகுதியின் உயர்வை எடுத்துக்காட்டியது.

தெலுங்கு, கன்னடம், மலையாளம் பேசும் பகுதிகளும் அடங்கிய சென்னை மாநிலம் முழுவதற்கும் செயலாளராக வ.உ.சி. நியமிக்கப் பெற்றார் என்பது, அவருடைய அரசியல் தகுதிப்பாட்டை - இன்றியமையாமையைப் புலப்படுத்துகிறது.

திருநெல்வேலியில் அரசியல் பிரசாரத்திற்காகத் 'தேசாபிமான சங்கம்' என்னும் புதியதொரு அரசியல் அமைப்பை 1908 இல்தொடங்கினார் வ.உ.சி. தூத்துக்குடியிலும் திருநெல்வேலி மாவட்டத்தின் பிற பகுதிகளிலும் பொதுக்கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்வதில் தீவிரம் காட்டினார். சுப்பிரமணிய சிவத்துடன் இணைந்து அரசியல் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்.

விடுதலை இயக்கத்தில் தொழிலாளர்கள், விவசாயிகள் முதலானவர்கள் முனைப்பாகப் பங்கேற்காத காலகட்டத்தில், சூரத்தில் தோன்றிய புதிய 'தேசியவாதிகளின் கட்சி'யைச் சார்ந்த சிலர் அதில் கவனம் செலுத்தினர். அந்தக் கட்சியின் சென்னை மாநிலச் செயலாளரான வ.உ.சி. தொழிலாளர் இயக்கத்திற்கான முயற்சிகளில் ஈடுபட்டார்.

### கோரல் ஆலை வேலைநிறுத்தம்

வெள்ளையருக்கு உரிமையான கோரல் நூற்பாலையில் பணிபுரிந்த ஏழைத் தொழிலாளர்களின் நலனுக்காக வ உ.சி. நடத்திய இவ்வேலை நிறுத்தம், அவர் நடத்திய இயக்கங்களில் மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும் இந்த வேலை நிறுத்தத்தில் மட்டுமின்றி, தொழிலாளர் நலனுக்காகப் பல்வேறு தொழிற்சங்கங்களை நிறுவி வளர்ப்பதிலும் அவர் ஆர்வம் கொண்டிருந்தார். தேசியவாதியான வ.உ.சி தொழிற்சங்கவாதியாகவும் விளங்கினார்.

தொழிலாளர் இயக்கத்தின்மீது அவர் கொண்டிருந்த ஈடுபாடும் அதன் வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய அரும்பணியும் அவரது மனித நேயம் - தொலைநோக்கு-சமூகத்தின் விதிகளைப் புரிந்து கொண்டு அதற்கேற்பச் செயல்படும் சிந்தனைத் திறன் ஆகிய மூன்றையும் வெளிப்படுத்தி நிற்கின்றன(ஆ.சிவசுப்பிரமணியன், வ.உ.சி.யும் முதல் தொழிலாளர் வேலைநிறுத்தமும், ப.10).

தூத்துக்குடியில் இருந்த கோரல் ஆலைக்கு என்று தொழிற்சங்கம் எதுவும் கிடையாது. தொழிலாளர்கள், 'கூலிகள்' என்ற பெயராலேயே அழைக்கப்பட்டு, இழிவாக நடத்தப்பட்டனர் குறைந்த ஊதியம், கடுமையான வேலை - இதுதான் அன்றைய நிலை. தொழிலாளர்கள் செய்யும் சிறுசிறு தவறுகளுக்குக்கூட அடியும் உதையும் தண்டனை களாகத் தரப்பெற்றன. பிரம்படி என்பது அவ்வப்போது நிகழும் நடைமுறையாக இருந்தது.

கோரல் ஆலைத் தொழிலாளர்களின் அவல நிலையைக் கண்ணுற்ற வ.உ.சி. அதனைப் போக்குவதற்கு முன்வந்தார் சுப்பிரமணிய சிவமும் பத்மநாப அய்யங்கார் என்பவரும் துணைநின்றனர்.

27-2-1908 அன்று கோரல் ஆலைத் தொழிலாளர்கள் வ.உ.சி., சிவம் ஆகியோரின் தலைமையில் வேலை நிறுத்தத்தைத் தொடங்கினர். ஊதிய உயர்வு, வார விடுமுறை இதர விடுமுறை

வசதிகள் ஆகியவை முதன்மையான கோரிக்கைகளாக முன் வைக்கப்பெற்றன.

தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் ஆலை நிருவாகத்தினரிடம் எவ்வித மாறுதலையும் ஏற்படுத்தவில்லை. தொழிலாளர் மனவுறுதி இழந்து விரைவில் வேலைக்குத் திரும்பி விடுவர் என்று நிருவாகம் கருதியது. ஆங்கில அரசும் வேலை நிறுத்தத்தை முறியடிப்பதில் ஆலை நிருவாகத்திற்கு உறுதுணையாக நின்றது ஆனால் தொழிலாளர்கள் மனவுறுதியுடன் இருந்தனர்.

இந்தியா முழுவதும் அனைவரது கவனத்தையும் கவர்ந்த கோரல் ஆலைத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தை வெறும் ஊதிய உயர்வுப் போராட்டமாக மட்டும் வ.உ.சி. கருதவில்லை. இந்திய விடுதலை இயக்கத்தில் ஒரு திருப்பு முனையாக அமைந்த சுதேசி இயக்கத்துடன் தொழிலாளர் வர்க்கத்தை இணைக்கும் நோக்குடன் அவர் செயல்பட்டார். எனவே, நாள்தோறும் தூத்துக்குடி நகரின் பல பகுதிகளிலும் சுதேசி இயக்கத்தின் கொள்கை விளக்கக் கூட்டங்களை நடத்தி அதில் கோரல் ஆலைத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் குறித்தும் உரையாற்றினார். இதன் விளைவாகத் தொழிலாளர்களின் போராட்ட உணர்வு தீவிரமானதுடன் பொதுமக்களின் ஆதரவும் அவர்களுக்குக் கிடைத்தது

இறுதியில் வேலைநிறுத்தம் வெற்றி பெற்றது ஊதியத்தை அதிகரிக்கவும் வேலை நேரத்தைக் குறைக்கவும் ஞாயிற்றுக் கிழமை விடுமுறை அளிக்கவும் ஆலை நிருவாகம் ஒப்புக்கொண்டது. 7-3-1908 அன்று தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினார்கள். ஒன்பது நாள்கள் தொடர்ச்சியாக நடந்து இறுதியில் வெற்றிகரமாக முடிந்த இந்த வேலை நிறுத்தத்தின் வெற்றி முழக்கம் இந்தியா முழுவதும் எதிரொலித்தது.

வ உ.சி. சோரல் ஆலைத் தொழிலாளர்களைச் 'சுதேசி இயக்கம்' என்ற அரசியல் இயக்கத்துடன் இணையும்படிச் செய்து, வந்தேமாதரம் முழக்கமிடவைத்துள்ளார். பொருளாதாரக் கோரிக்கைகளை முன் வைத்துத் தொடங்கிய ஒரு வேலை நிறுத்தம், அரசியல் வேலைநிறுத்தமாக மாற்றப்பட்டது.

**விபின் சந்திரபால் விடுதலை நாள் விழா**

1907 செப்டம்பரில் 'வந்தேமாதரம்' இதழ் மீது அரச நிந்தனைக் குற்றச்சாட்டு சுமத்தப்பெற்றது. அப்போது அரவிந்தர் அதன் ஆசிரியராகக் கருதப்பெற்றார். அரவிந்தருக்கு எதிராகச் சாட்சி கூற விபின் சந்திரபால் அழைக்கப்பெற்றார். ஆனால் சாட்சி கூற அவர்

மறுத்துவிட்டார் இதனால், நீதிமன்ற அவமதிப்புவழக்கு அவர்மீது தொடரப்பெற்று, ஆறுமாத வெறுங்காவல் தண்டனை விதிக்கப் பெற்றது. இதை எதிர்த்து நாடு முழுவதும் கண்டனம் எழுந்தது தமிழகத்திலும் அது எதிரொலித்தது. பாலின் விடுதலை இன்றியமை யாத ஒரு நிகழ்வாகக் கருதப்பெற்றது. அவர் விடுதலை அடையும் 1908 மார்ச்சு 9 ஆம் நாளைச் சிறப்பாகக் கொண்டாட முடிவு செய்யப் பெற்றது.

வ உ சி அதற்கான விரிவான ஏற்பாடுகளைச் செய்தார். மாவட்ட ஆட்சித் தலைவர் பாலின் விடுதலை நாள் கொண்டாட்டத்திற்குத் தடை விதித்தார். தடை மீறப்பட்டது. வ உ.சி. பொதுக்கூட்டங்களில் பேசினார். திட்டமிட்டவாறு திருநெல்வேலியிலும் தூத்துக்குடியிலும் விபின் சந்திர பாலின் விடுதலை கொண்டாடப் பெற்றது. குற்றவியல் சட்டத்தின் 107 ஆவது பிரிவின் கீழ் வழக்குத் தொடர்வது என மாவட்ட ஆட்சித் தலைவர் முடிவு செய்தார். மார்ச்சு 12ஆம் நாள் வ.உ.சி , சுப்பிரமணிய சிவம், பத்மநாப அய்யங்கார் ஆகிய மூவரும் கைது செய்யப்பெற்றுப் பாளையங்கோட்டைச் சிறைக்கு அழைத்துச் செல்லப் பெற்றனர்.

**மக்கள் எழுச்சி**

வ உ.சி யும் பிறரும் சிறையில் அடைக்கப்பெற்ற செய்தி பரவியதும் திருநெல்வேலி - தூத்துக்குடி மக்கள் ஆவேசம் கொண்டனர்; கிளர்ந்தெழுந்தனர்.

## திருநெல்வேலி

திருநெல்வேலிப் பாலம் என்றழைக்கப்பட்ட வீரராகவபுரம் என்ற இரயில் நிலையத்துக்கு அருகிலுள்ள பகுதியில் கடைகள் மூடப்பட்டன மக்களின் நடமாட்டமும் வண்டிகளின் போக்குவரவும் தடைப்பட்டன. இதற்குள்ளாக மூவாயிரம் நாலாயிரம் பேர் கும்பலாகத் திரண்டு, இந்துக் கல்லூரிக்குள் நுழைந்தனர். கல்லூரி நிர்வாகிகள் எவ்வளவோ தடுத்தும்கூட மாணவர்களையும் தம்முடன் சேர்த்துக் கொண்டனர் கல்லூரி மூடப்பட்டது

சி.எம்.எஸ். கல்லூரி என்ற சர்ச்சு மிஷன் சொசைட்டி காலேஜுக்குக் கும்பல் சென்றது. முதல்வர் ஷாப்டரிடம் (Schaffter) கல்லூரியை மூடுமாறு கூறிற்று. இதை எதிர்த்த உதவிப் பேராசிரியரைக் கும்பல் அடித்தது. கல்லூரியின் பொருள்களும் சாளரங்களும் உடைக்கப்பட்டன. பின்னர் பட்டணத்துக்குள் கூட்டம்

நுழைந்தது நகர் மன்ற அலுவலகக் கட்டடத்துக்குள் சென்று சுவர் ஒன்றை இடித்தது. அலுவலக ஆவணங்கள் மண்ணெண்ணெய் ஊற்றிக் கொளுத்தப்பட்டன கட்டடம் பெரும் சேதத்துக்கு உள்ளானது. அடுத்து, அஞ்சலகத்துக்குச் சென்று தீயிட்டனர். தந்திக்கம்பிகள் அறுக்கப்பட்டன. பிறகு, நகர் மன்றத்துக்குச் சொந்தமான மண்ணெண்ணெய்க் கிடங்கு தீக்கிரையானது. தொடர்ந்து இரண்டு மூன்று நாள்கள் அது எரிந்துகொண்டே இருந்தது

காவல் நிலையம் அடுத்த இலக்காயிற்று கூட்டம் அங்குச் சென்றபோது போலீஸ்காரர் ஒருவர் மட்டுமே இருந்தார். அவர் தாக்கப்பட்டார். அங்கிருந்த ஆவணங்களும் கத்திகளும் ஒரு பெட்டி குண்டுகளும் (catridge) அழிக்கப்பட்டன. காவல் நிலையத்தில் சிறைப்பட்டிருந்த மூன்று கைதிகள் விடுவிக்கப்பட்டனர். காவல் நிலையத்திற்கு எதிரிலிருந்த மருத்துவநிலையத்துக்குத் தீயிடமுயன்ற போது பலர் கைதுசெய்யப்பட்டனர் மாவட்டத் துணை முன்சீபு நீதி மன்றத்தை நடத்திக் கொண்டிருந்தபோது அதுவும் தாக்கப்பட்டது. நகரெங்குமிருந்த தெருவிளக்குகள் பலவும் உடைக்கப்பட்டன. இந்தச் செயல்கள் நெடுகவும் கல் வீச்சுடன் 'வந்தேமாதரம்' முழக்கமும் தொடர்ந்து செய்யப்பட்டது (ஆ.இரா. வேங்கடாசலபதி, வ.உ.சி.யும் திருநெல்வேலி எழுச்சியும், பக் 18-20).

### தூத்துக்குடி

வ.உ.சி.யும் பிறரும் கைது செய்யப்பட்ட அன்று இரவே, தூத்துக்குடியில் மக்கள் பலர் தூங்காமல் தெருக்களில் வந்தேமாதரம் முழக்கமிட்டுக் கொண்டிருந்தனர். மறுநாள் 13 அன்று காலை பெரும் குழப்பம் ஏற்பட்டது சந்தையிலிருந்த கடைகள் மூடப்பட்டன கோரல் ஆலைத்தொழிலாளரும் பெஸ்டு அண்டு கம்பெனியின் தொழிலாளரும் வேலைநிறுத்தம் செய்தனர். நகர்மன்றத் தோட்டித் தொழிலாளரும் பிற தோட்டித் தொழிலாளரும் வேலைக்குப் போகாமல் நின்றனர் கசாப்புக் கடைக்காரரும் குதிரை வண்டிக்காரர்களும் கூட வேலைநிறுத்தம் செய்தனர். தெருக்களில் கூடிய மக்கள் தெருவிளக்குகளை உடைத்தனர்.

பொதுக்கூட்டங்கள் தடைசெய்யப்பட்டிருந்தபோதும்கூட, வண்டிப்பேட்டையில் அன்று மாலை கூட்டம் கூடியது. அடையாளம் கண்டுபிடிக்க முடியாத ஒருவர் பேசினார். இதனை அறிந்த உதவி ஆட்சித் தலைவர் ஆஷும் (R.W.D.E.Ashe) துணை போலீஸ் சூப்பரிண்டன்டும் போலீசாரும் பேட்டைக்குள் நுழைந்தனர். இந்தப்

பேட்டைக்கு ஒரு வழிதான் உண்டு என்பதால் குழப்பம் மிகுந்தது. வீடுகள் மேலிருந்தும்கூடக் கற்கள் வீசப்பட்டன. போலீசார் சுட்டனர். கூட்டத்துக்குள் சிக்கிய ஒரு சப் இன்ஸ்பெக்டர் படுகாயமடைந்தார். அவரிடமிருந்த சுழல் துப்பாக்கியும் ஐந்து சுற்று குண்டுகளும் பறிக்கப்பட்டன. மாலை ஐந்து மணிக்குமேல் தொடங்கிய அமளி முடிவதற்கு இரவு ஒன்பது மணி ஆயிற்று (வ.உ.சி யும் திருநெல்வேலி எழுச்சியும், பக். 20-21).

**தச்ச நல்லூர்**

திருநெல்வேலியிலும் தூத்துக்குடியிலும் எழுச்சி நிகழ்ந்த மறுநாள், அதாவது வ.உ.சி யும் சிவாவும் கைது செய்யப்பட்ட இரண்டாவது நாள், திருநெல்வேலியின் புறத்தே இருந்த தச்ச நல்லூரிலும் மக்கள் எழுச்சி ஏற்பட்டது.

எழுச்சியில் நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டில் நான்குபேர் திருநெல்வேலியில் இறந்து போயினர். தூத்துக்குடியில் நடந்த துப்பாக்கிச்சூட்டில் எவரும் இறந்ததாகத் தெரியவில்லை(வ.உ.சி யும் திருநெல்வேலி எழுச்சியும், பக் 22, 27)

இந்த மக்கள் எழுச்சியில் முதன்மையாகக் குறிப்பிடத்தக்கது, கிளர்ச்சியில் தொழிலாளர்கள் கலந்து கொண்டதாகும் கோரல் ஆலைத் தொழிலாளர்கள் முதல் பலரும் வேலைநிறுத்தம் செய்தனர். இவற்றுள், கோரல் ஆலைத்தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் மார்ச்சு, 14 முதல் 19 ஆம் தேதி வரையில் நடைபெற்றது. தொழிலாளர்களுடைய பொருளாதாரக் கோரிக்கைகளுக்காக அல்லாமல், ஓர் அரசியல் தலைவர் சிறைப்படுத்தப் பெற்றதை எதிர்த்து அரசியல் நோக்கத்துடன் செய்யப்பெற்ற வேலைநிறுத்தம் என்பது இதன் தனிச் சிறப்பாகும் பொதுமக்கள் கிளர்ச்சியில் தொழிலாளர்கள் பங்கேற்பும் இதன் மூலம் முதன் முதலாக நிகழ்ந்தது.

சொந்தக் கோரிக்கைகளுக்காக வேலை நிறுத்தம் செய்து ஊதிய உயர்வு முதலிய நன்மைகளைப் பெற்ற ஆலைத் தொழிலாளர்கள் 1908 மார்ச்சு 7ஆம் நாள் வேலைக்குத் திரும்பினர். மார்ச்சு 13 வரையில் வேலை செய்த அவர்கள் மீண்டும் 14 ஆம் தேதியிலிருந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். மீண்டும் மார்ச்சு 20 ஆம் நாள் வேலைக்குத் திரும்பினர். மார்ச்சு 7 ஆம் நாள் உயர்த்தப் பெற்ற கூலியைக் கூடக் கேட்காமல், அதற்கு முன் வாங்கிய பழைய கூலியின் அடிப்படையில் முழு மன நிறைவுடன் வேலைக்கு வர அவர்கள் ஒப்புக் கொண்டார்கள் என்பது வரலாற்றில் இடம்பெற

வேண்டிய செய்தியாகும் இந்தியாவில் அரசியல் உணர்வுடன் ஓர் அரசியல் தலைவருக்கு ஆதரவாகத் தொழிலாளர்கள் செய்த முதல் வேலை நிறுத்தம் இதுவேயாகும்(ஆ.சிவசுப்பிரமணியன், வ உ.சி.யும் முதல் தொழிலாளர் வேலை நிறுத்தமும், பக் 44, 46, 47).

**வழக்கும் தண்டனையும்**

வ.உ சி மீது 124 A, 109 ஆகிய பிரிவுகளின் கீழ், பிப்பிரவரி 23, 25, 26 மார்ச்சு 5, 1908இல் பேசிய பேச்சுகளுக்காகவும் 153 A பிரிவின் கீழ் சிவத்திற்குத் தங்க இடமும் உணவும் அளித்ததற்காகவும் அரச நிந்தனை வழக்குத் தொடுக்கப்பெற்றது.

திருநெல்வேலி மாவட்டக் கூடுதல் நீதிபதி இ.எச். வாலேஸ் முன்பு, மார்ச்சு 26 இல் விசாரணை தொடங்கியது. விசாரணைக்குப் பிறகு வழக்கை செஷன்ஸ் நீதிமன்றத்திற்கு அனுப்பினார் வாலேஸ்.

செஷன்ஸ் நீதிமன்றத்தில் வழக்கை விசாரித்த நீதிபதி ஏ.எப். பின்ஹே இந்தியாவில் அதுவரையில் எந்த அரசியல் தலைவருக்கும் விதிக்கப்படாத கடுந்தண்டனையை விதித்தார். அரச நிந்தனைக்காக இருபது ஆண்டுகளும் சிவத்திற்கு உதவியதற்காக இருபது ஆண்டு களுமாக நாற்பது ஆண்டுகள் நாடு கடத்தல் தண்டனை வ.உ சி க்கு விதிக்கப்பட்டது இரு வேறு தண்டனைகளையும் ஒன்றன் பின் ஒன்றாக அனுபவிக்கவேண்டும் என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது.

நீதிபதி பின்ஹேயின் தீர்ப்பை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பெற்றது அரச நிந்தனைக் குற்றத்திற்காக விதிக்கப்பெற்ற இருபது ஆண்டுகள் என்னும் ஓர் ஆயுள் தண்டனையை ஆறு ஆண்டுகள் நாடு கடத்தலாகவும் சிவத்திற்கு உதவியதற்காக விதிக்கப்பெற்ற மற்றொரு ஆயுள் தண்டனையாகிய இருபது ஆண்டுகளை நான்கு ஆண்டுகள் நாடுகடத்தல் தண்டனையாகவும் குறைத்து இரண்டு தண்டனைகளையும் ஒரே நேரத்தில் அனுபவிக்கும்படி உயர் நீதிமன்றம் 4-11- 1908 அன்று தீர்ப்பு வழங்கியது இலண்டன் 'பிரீவி கவுன்சில்' நீதிமன்றத்தில் செய்யப் பெற்ற மேல் முறையீட்டில் நாடுகடத்தல், கடுங்காவல் தண்டனையாக மாற்றப்பெற்றது.

அவருடைய சிறைவாழ்க்கை கோவைச்சிறையிலும் கண்ணனூர்ச் சிறையிலும் கழிந்தது. சூலை 9, 1908 முதல் நவம்பர் 30, 1910 முடிய கோவைச்சிறையில் இருந்த வ உ சி 1-12-1910 இல் கண்ணனூர்ச் சிறைக்கு மாற்றப் பெற்றார் பல்வேறு காரணங் களுக்காகச் சிறையில் கிடைத்த தண்டனைக் குறைப்பில் ஏறக்குறைய

18 மாதங்கள் கழிக்கப்பெற்று நான்கு ஆண்டுகளும் ஆறு மாதங்களுமாக வ.உ.சியின் சிறைவாசம் அமைந்தது. 1908 மார்ச்சு 12 இல் சிறை சென்றவர் 24-12-1912 இல் விடுதலையானார்.

வ.உ.சி.யின் சிறையனுபவங்கள் தனி வரலாறாகும். அவற்றுள் முதன்மையாகக் குறிக்கத்தக்கது அவர் செக்கிழுத்த நிகழ்வாகும். கோவைச் சிறையில் இருந்தபோது, வ.உ.சிக்கு ஏற்பட்ட இந்தக் கசப்பான அனுபவம் இந்தியா முழுமையும் மிகப் பெரிய அதிர்வை ஏற்படுத்தியது.

சுட்டெரிக்கும் வெயிலில் இயங்கும் எண்ணெய்ச் செக்கினை எருதுக்குப் பதிலாக இழுக்குமாறு வ.உ.சி. வற்புறுத்தப்பட்டார். ஒரு சிறந்த வழக்கறிஞரும் தேசிய இயக்கத்தலைவருமான அவர் கைகளிலும் கால்களிலும் விலங்குகளோடு ஒரு விலங்கினைப் போல் எண்ணெய்ச் செக்கை இழுக்குமாறு கட்டாயப்படுத்தப் பெற்றார் மனிதப் பண்புகளைக் கீழ்மைப்படுத்தும் இவ்வாறான சூழ்நிலையில் வ.உ.சி.யோடு இருந்த பிற கைதிகள் உதவி செய்து, தொடர்ந்து செக்கிழுப்பதிலிருந்து அவரைக் காப்பாற்றினர்.

*செக்கினை என்னொடு சேர்ந்து தள்ளியோர்*
*'நாங்களே தள்ளுவோம். நமன்கள் போன்ற*
*சுப்பிரண் டெண்டு காட்ஸனும் ஜெயிலரும்*
*வருங்கால் எம்முடன் வந்திது தள்ளுமின்*
*போய்நிழல் இருந்து புசிமின் எள்ளும்*
*வெல்லமும்' என்றே விளம்பினர் அன்பொடு*

**(சுயசரிதை, ப.117)**

சிறையில் உடனிருந்த கைதிகளின் உதவி கிடைத்தமையால்தான் வ.உ.சி. உயிருடன் இருக்க முடிந்தது.

### சென்னை வாழ்க்கை(1913-1920)

விடுதலையான வ.உ.சி 1913 இல் சென்னை சென்றார். வறுமையின் பிடியிலிருந்து விடுபட அரிசி, நெய் வியாபாரம் செய்தார். போதிய வருவாய் அமையவில்லை. திலகர் சுயராஜ்ய நிதியிலிருந்து மாதம் ரூபாய் ஐம்பது அனுப்பினார். வளமாக வாழ்ந்த வ.உ.சி வறுமையைச் சந்திக்க நேர்ந்தபோதும் சோர்வடையாமல் பொதுப்பணியிலும் தமிழ்ப்பணியிலும் தம்மை மறந்தார். பழைமையான தொழிற்சங்கங்களுள் ஒன்றான தபால் ஊழியர் சங்கம் வ.உ.சியின் சென்னை வாழ்க்கையில் உருவான

தாகும்(வ.உ.சி.சுப்பிரமணியன், 'விடுதலைக்குப்பின்' வ.உ.சி. சுயசரிதை- இரண்டாம் பதிப்பு, ப.153).

வ.உ.சி.யின் பல படைப்புகள், அவர் சென்னையில் இருந்த காலத்தில் வெளியானவை. அவற்றுள் **அகமே புறம், வலிமைக்கு மார்க்கம், மெய்யறம், மெய்யறிவு, தனிப்பாடல் திரட்டு, இன்னிலை-பதிப்பு, திருக்குறள் மணக்குடவர் உரை-பதிப்பு** (அறத்துப்பால் மட்டும்) ஆகியன குறிப்பிடத் தக்கன. தமிழறிஞர் திருமணம் செல்வக்கேசவராயரின் நட்பு சென்னை, வ.உ.சி.க்கு வழங்கிய பரிசு.

## கோவை வாழ்க்கை(1920-1924)

'கோயமுத்தூர் தொழிலாளர் பாங்கு ஸ்டோர்ஸ்' மேலாளர் பணி வ.உ.சி.க்கு அமைந்தது. அதன் பொருட்டு அவர் கோவைக்குச் சென்றார் (இன்னிலை, இரண்டாம் பதிப்பின் முன்னுரை, 1930). கோவையிலும் தொழிற்சங்க இயக்கத்தில் பணியாற்றினார்

1921 இல் மலபார் மாப்பிள்ளை முஸ்லீம்களின் எழுச்சியை ஆதரித்து ஆற்றிய உரைக்காக அவர்மீது வழக்குத் தொடுக்கப் பெற்றது இதனால், சொந்த ஜாமீன் கொடுக்க வேண்டியதாயிற்று (ஆ.சிவசுப்பிரமணியன், வ.உ.சி. - ஓர் அறிமுகம்,ப.53)

## கோவில்பட்டி வாழ்க்கை(1924-1932)

மீண்டும் வழக்கறிஞராகப் பணியாற்றும் உரிமையை நீதிபதி இ.எச். வாலேஸின் உதவியால் வ.உ.சி 1924 ஆம் ஆண்டில் பெற்றார். அப்போது, ஓட்டப்பிடாரம் வட்டத்தின் தலைமை இடமாகக் கோயில்பட்டி விளங்கியது அங்கு நீதிமன்றங்கள் இருந்தன. மீண்டும் வழக்கறிஞராகிய வ.உ.சி. கோயில்பட்டியில் குடியேறினார். இக்காலத்தில்தான் தேசபக்தர்களான எம்.எஸ் சுப்பிரமணிய ஐயர். ந.சோமயாஜுலு முதலியோர் மீதிருந்த அரச நிந்தனை வழக்கில் அவர்கள் சார்பில் வாதாடினார் (வ.உ.சி. சுப்பிரமணியன், வ.உ.சி. சுயசரிதை - இரண்டாம் பதிப்பு, ப 156).

## தூத்துக்குடி வாழ்க்கை(1932-1936)

மார்ச்சு,1932இல் வ.உ.சி. கோயில்பட்டியில் இருந்து தூத்துக்குடிக்குச் சென்றார். திருக்குறளுக்கு வ.உ.சி. எழுதிய உரையின் ஒரு பகுதி(அறத்துப்பால் மட்டும்), அவருடைய சிவஞானபோத

உரை முதலியன தூத்துக்குடியிலிருந்து வெளிவந்தன. அத்துடன் இலங்கையிலிருந்து இன்றும் வெளிவரும் 'வீரகேசரி' இதழில் வ.உ.சி. எழுதிய **திலக மகரிஷியின் வரலாறு** (திலகரின் வாழ்க்கை வரலாறு) இந்தக் காலகட்டத்தில்தான் வெளிவந்தது(1933-1934).

முதுமையிலும் தளராது தமிழ்ப்பணியில் மனம் மகிழ்ந்த வ.உ.சி.யின் பெருவாழ்வு 18-11-1936இல் நிறைவுற்றது.

# 2

# வ.உ.சி. காலத் தமிழ்ச் சூழல்

அடிமைப்பட்டிருந்த இந்தியாவில் விடுதலை உணர்வு ஆங்காங்கே கிளர்ந்து கொண்டிருந்த நிலை ஒருபுறம்; ஆங்கிலக் கல்வி என்னும் புதிய வரவின் தொடக்கம் மறுபுறம்; பல்வேறு புதிய இலக்கிய முயற்சிகள் மலரத் தொடங்கிய நிலை இன்னொருபுறம்; புதிய சமுதாய உருவாக்கம் பிறிதொருபுறம் என்று இந்தியா - தமிழகம் புதிய சூழலில் புத்துருவாக்கம் பெறத் தொடங்கிய பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்க்கையைத் தொடங்கியவர் வ.உ.சி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலுமாக (1872-1936) அவர் வாழ்ந்தார். அவர் காலத் தமிழகத்தில் பல்வேறு தமிழ்ப் போக்குகள் - சிந்தனைகள் நிலவின.

1856இல் கால்டுவெல் வெளிக் கொணர்ந்த **திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்** தமிழ் மொழியின் - இனத்தின் தொன்மையை உலகறியச் செய்தது; தமிழின் தனித் தன்மையையும் வடமொழி சாராத் தனிப் பெருமையையும் தமிழர்கள் அறியும் வாய்ப்பும் அமைந்தது. மொழி உணர்வும் இன உணர்வும் கிளர்ந் தெழத் தொடங்கின. ஒத்த உணர்வுடையோர் ஒருங் கிணைந்தனர். **பி. சுந்தரம் பிள்ளை** தலைமையேற்றார்; **ஜே.எம். நல்லசாமி பிள்ளை, சவரிராயர்** முதலியோர் அணி திரண்டனர். தமிழ், தெய்வ நிலைக்கு உயர்த்தப் பெற்றது; சுந்தரம் பிள்ளை தொடங்கி வைத்த அப்புதிய சிந்தனை வளர்ந்து செழித்தது. இது ஒரு புறம்.

1887இல் **உ.வே. சாமிநாதையர்** சிந்தாமணியைப் பதிப்பித்தார்; அதைத் தொடர்ந்து பத்துப்பாட்டும் சிலப்பதிகாரமும் புறநானூறும் வெளிவந்தன. இவையெல்லாம், குறிப்பாகப் புறநானூறு பழந் தமிழரின் பண்பாடு, நாகரிகம் பற்றிய அரிய தகவல் களஞ்சியமாகி, தமிழர்களிடையே வீறார்ந்த உணர்வுகளைத் தோற்றுவித்தது. வி. கனகசபை பிள்ளையின் **ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகம்** போன்ற நூல்கள் பிறந்து தமிழ் உணர்வைத் தூண்டின. இப்பழந்தமிழின் புத்தெழுச்சி, தமிழர்களுக்குப் புத்துணர்ச்சி ஊட்டியது

மெக்காலேயின் திட்டமான ஆங்கிலக் கல்விமுறை 1836 இல் இந்தியாவில் நடைமுறைப்படுத்தப்பெற்றது ஆங்கிலக் கல்வி பல புதிய சாளரங்களைத் திறந்தது. 'மத்திய தர வர்க்கம்' என்னும் புதியதொரு மக்கள் பிரிவு தோன்றியது. ஆங்கிலக் கல்வி ஆங்கில இலக்கியத்தையும் ஆங்கிலம்வழி உலக இலக்கியங்களையும் இந்தியர்களுக்கு அறிமுகம் செய்தது இதன் பயனாய்ப் புதியதொரு வழித்தடம் புலப்பட்டது; புதிய புதிய இலக்கிய வடிவங்கள் தமிழுக்கு வரலாயின, தமிழ் இலக்கியத்தின் எல்லைகள் விரிந்தன.

இவ்வாறு 'தமிழர் என்று சொல்ல'வும் 'தலைநிமிர்ந்து' நிற்கவும் வைத்த சூழல்கள் ஒரு புறம் உருவாகி வளர்ந்தன. இன்னொருபுறம் இவற்றின் மறு தலையான போக்குகள் தலைதூக்கின. ஆங்கிலம் கற்றதும் தம்மை ஆங்கிலேயர்களாகவே பாவித்து, ஆங்கில மோகத்தில் ஆழ்ந்து, 'போலச் செய்யும்' வான்கோழிக் கூட்டம் ஒன்று உருவாகியது. இவர்கள் பார்வையில் தாய்மொழியாகிய தமிழ் கேலிக்குரியதாகவும் ஆங்கிலம் மதிக்கத்தக்கதாகவும் மாறின.

தங்கள் தாய்மொழியாகிய தமிழைப் பயிலாது புறக்கணித்தவரைக் கண்டு மனம் பொறாத **வேதநாயகம் பிள்ளை** ''தமிழ் படிக்காதவர்கள் தமிழ் நாட்டில் வசிக்க யோக்கியதை உடையவர்கள் அல்லர். அவர்கள் எந்த ஊர்ப் பாஷைகளைப் படிக்கிறார்களோ அந்த ஊரே அவர்களுக்குத் தகுந்த இடமாகையால், சுயபாஷையைப் படிக்காமல் இங்கிலீஷ் மட்டும் படிக்கிறவர்களை, இங்கிலீஷ் தேசத்துக்கு அனுப்பி விடுவோம்; பிரஞ்சு மட்டும் படிப்பவர்களைப் பாரீசுப் பட்டணத்துக்கு அனுப்புவோம்''(பிரதாப முதலியார் சரித்திரம், ப.324) என்று தம் சினத்தை - 'சிறுமை கண்டு பொங்கும்' மனத்தை வெளிப்படுத்துகிறார்.

அன்னிய மொழி பயிலும் ஆர்வத்தில், தாய்மொழி புறக்கணிக்கப்பெற்று வேற்றுமொழிப் பயிற்சியும் பண்பாட்டுக் கலப்பும் தமிழ் இனத்தின் ஆன்மாவைச் சீர்குலைத்து மாற்றியதொரு போக்கு அன்று நிலவியது என்பதைப் பின்வரும் செய்தி உணர்த்த வல்லது. ''ஐயோ, அருந்தமிழே, செந்தமிழே, மூவேந்தரால் முச்சங்கத்தால் வளர்க்கப்பட்ட தமிழே; இப்பொழுது உன் பிள்ளைகளால் கைவிடப்பட்ட தமிழே; நூலிழந்த தமிழே, இப்பொழுது உன்னைப் பரிபாலிப்போர் காலத்தில் நீ இன்னமும் என்னென்ன அவமானங்கட்கு ஆளாகப் போகின்றனையோ யாமறியோம். இக்காலத்தில் உன்னைத் தண்ணீருக்குப் பதிலாக வெந்நீர் வார்த்து வளர்க்க முயலுகின்றனர்'' 'இந்து சாதனம்' இதழில்

வெளிவந்த குறிப்பு; 'பத்திரிகாசாரம்' என்ற பகுதியில் 'ஆனந்த குணபோதினி' இதழில் எடுத்தாளப்பெற்றது (செப்டம்பர் 1926,ப.60).

அன்னை மொழியின் அருமை மறந்து அன்னிய மொழியில் தம்மை இழந்து நின்றார்க்குத் தமிழின் - உரிமையும் உறவும் கொண்டதாய தாய்மொழியின் மேன்மைகளை உணர்த்த விழைந்த **ம. கோபாலகிருஷ்ணையர்,**

> நம்மை ஒரு ஜாதியார் என்றும், ஒரு கட்டுக்கடங்கியவர் என்றும், யோக்கியர்கள் என்றும், தேசாபிமானிகள் என்றும் காட்டக் கூடியதும்; நமது முன்னோர்களின் அருமை பெருமைகளை நாம் அறியவும், நமது காரியங்களை நமக்குப் பின்னால் வருபவர் அறியவும் ஏதுவாயுள்ளதும் நமது சொந்த பாஷையே

**(தமிழ் முதுமொழியின் தளர்ச்சியும் வளர்ச்சியும், விவேகபாநு - மதுரை,ஜூலை - ஆகஸ்டு 1907,ப.281)**

என்று நினைவூட்டுகிறார். தம்முடைய அடையாளத்தையே மறந்து, அப்படி மறந்த நினைவே இன்றி, மாறித் திரிந்த தமிழர்களால் நேர்ந்த இடர்களையும் அவலங்களையும் உணர்வுள்ள தமிழர்களும் தமிழ்ச் சமுதாயமும் பல நிலைகளில் எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

ஆங்கில மோகத்தைப் போன்றே, வடமொழிப் பற்றும் மிக்கிருந்தது. உள்ளவை எல்லாம் வடமொழியிலிருந்து பெறப் பெற்றவையே என்று உரத்த குரலில் ஓங்கி ஒலித்தோரும் அன்றைய தமிழகத்தில் வாழ்ந்தனர்

> பண்டிதர் ச.ம. நடேச சாஸ்திரியார் 'தமிழ் மொழிகள் யாவும் நேராகவேனும் சிதைவுற்றேனும் ஸமஸ்கிருதத் தினின்றும் தோன்றியவைகளே, எனப் பொருள்பட 'மெட்ராஸ் மெயில்' வாயிலாய் வெளியிட்டது எவ்வளவு பரிதபிக்கத்தக்கது.

**(தமிழ் முதுமொழியின் தளர்ச்சியும் வளர்ச்சியும், ப.295)**

தமிழால் வாழ்ந்தவரான நடேச சாஸ்திரியார் போன்றோரே இத்தகைய மனநிலையில் இருந்தமை வியப்புக்குரியதாகும் ''மதுரைத் தமிழ்ச் சங்க வித்வான்களில் ஒருவராகிய சாஸ்திரியார் இவ்வணம் உரைப்ப **அ. மாதவையர்** அவர்கள் மட்டுமேயன்றிப் புறபாஷை பேசும் ரெவரண்ட் டாக்டர் **மில்லர்** போன்ற பாதிரிமாரும் அதனை மறுத்துப் பேசியது எவ்வளவு பாராட்டத்தக்கது. அந்நிய பாஷை பேசும் அந்நிய நாட்டாருக்குள்ள தமிழ் அபிமானமும் உண்மையறிவும் நம் நாட்டார் பலர்க்கில்லாமல் போனது வியப்பிற்கும் நகைப்பிற்கும் இடமாகின்றதன்றோ''என்று வருந்துகின்றார் ம. கோபாலகிருஷ்ணையர்.

'ஆங்கில மோகம்', 'வடமொழி மோகம்' - இவை போன்றே 'பண்டித மோகம்' என்ற ஒன்றும் அந்நாளில் இருந்தது. பழந்தமிழ் இலக்கண, இலக்கியங்களில் கற்றுத் தேர்ந்த புலவர் குழாம் கடினமான மொழி நடையே தக்கது என்ற எண்ணத்தில் ஆழ்ந்திருந்தது. கடந்த காலத் தமிழ்ப் புலவர்களின் கடுந்தமிழ் நடையைத் தமது காலத்துப் புலவர்களும் பின்பற்றுவதைப் பற்றிப் பாரதியார் பின்வருமாறு குறித்துள்ளார்.

> *தமிழ்ப் புலவர்களிடம் போனால் நிகண்டுக்குக்கூட அர்த்தம் தட்டும்படியான வார்த்தைகளை எழுதிக் கொடுப்பார்கள். சாமான்ய பாஷையில் எழுதும் தொழில் புலவர்களுக்குத் தெரியாது.*
>
> **( பாரதியார் கட்டுரைகள், ப.57)**

இவ்வாறு பழந்தமிழின் புத்தெழுச்சியும் மொழி, இன உணர்வின் உயர்ந்த வெளிப்பாடுகளும் ஆங்கிலக் கல்வியால் கிடைத்த நன்மைகளும் ஒரு பகுதியாகவும் ஆங்கில, வடமொழி மோகமும் பலருக்கும் விளங்காததொரு கடின நடையில் எழுதுவதே தக்கது என்ற உணர்வில் தோய்ந்திருந்த தமிழ்ப் புலவர் கூட்டமும் இன்னொரு பகுதியாகவும் இருந்த தமிழ்ச் சூழலில் வாழ்ந்தவர் வ.உ.சி.

ஆன்மிக உணர்வும் தமிழ் உணர்வும் வ.உ.சி.யின் குருதியில் கலந்தவை. கவிராயர்கள் பலர் வாழ்ந்த குடும்ப மரபு அவருடைய வாழ்க்கைப் பின்னணி. சுவாமி வள்ளிநாயகம் போன்ற நண்பர்கள் அவருடைய ஆன்மிகத் தேடலின் ஊற்றுக்கண்கள். இடையில் தோன்றிய அரசியல் ஈர்ப்பு அவருடைய வாழ்வின் போக்கையே மாற்றியது. இந்திய விடுதலை இயக்க வரலாற்றில் வ.உ.சி.யின் தடம் அழுந்தப் பதிந்தது.

**தமிழகத்தில் விடுதலை இயக்கத்தின் முதல் மக்கள் தலைவரானார் வ.உ.சி.** விடுதலை இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்றுவதற்குத் தமிழைப் பயன்படுத்தினார். அதுவரையில் தமிழகம் அதிகம் அறிந்திராத மேடைப்பேச்சு என்பதை மக்களுக்கு முறையாக அறிமுகம் செய்தவர் அவர். மக்களை - பாமர மக்களை ஒருங்கிணைத்து அவர்களைச் சிந்திக்கப் பழக்கியவர் வ.உ சி. 'பொதுமக்கள் கருத்து' என்ற ஒன்றை அரசியல் சார்ந்த நிலையில் உருவாக்குதல் என்னும் அரிய சாதனையை இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நிகழ்த்திக் காட்டியவர் அவர் அதற்கு மேடைப்பேச்சு கருவியாகியது. 'மேடைப்பேச்சு' என்பது ஒரு கலையாக, துறையாக, ஆற்றல் மிக்க படைக்கலனாகப் பின்னாளில் தழைத்தோங்கப்

புதுப்பாதை வகுத்தவர் வ.உ.சி. அவருடைய தமிழ்ப் பணிகளின் சிறப்பான தொடக்கமாக மேடைப் பொழிவுகளைக் கொள்ளலாம்.

வ.உ.சி.யின் அரசியல் வாழ்வும் தமிழ் வாழ்வும் ஒன்று கலந்து இணைகோடுகளாக வளரக் களம் அமைத்தது சுதேசி இயக்கம் (1905-1915). சுதேசி இயக்கத்திற்கு முன்பே, வ உ.சி.யின் தமிழ்ப்பணி தொடங்கிவிட்டது (1900). விவேகபாநு (குற்றாலம்) என்னும் இதழில் ஆன்மிகக் கட்டுரைகள் வரத் தொடங்கிவிட்டன. என்றாலும், வ உ.சி.யை மேலும் எளிமையாக்கி அவருடைய படைப்புகள் எளியோர்க்கும் புரியும் தன்மையனவாய் மென்மை அடைய சுதேசி இயக்கம் வழிவகுத்தது. எதுவாயினும் அது மக்களைச் சென்றடைய வேண்டும்; மக்களுக்குப் புரிய வேண்டும்; மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்துவதாகவும் அமைய வேண்டும் என்பனபோன்ற மக்கள் இயக்கப் போக்கு மொழி, இலக்கியம் சார்ந்த நிலையிலும் கிளைத்து வளர இவ்வியக்கம் வழி வகுத்தது. மொழியில் எளிமை, இலக்கியத்தில் எளிமை - என்று அனைத்தும் மக்களை நோக்கித் திரும்ப வேண்டும் என்ற சிந்தனை தனியொரு இயக்கமாக மலர்ந்தது. காலத்துக்கேற்ற மாற்றத்தின் - வளர்ச்சியின் தேவையைப் பின்வருமாறு பாரதியார் சுட்டியுள்ளார்.

> நெடுங்காலத்துக்கு முன்னே எழுதப்பட்ட நூல்கள் அக்காலத்து பாஷையைத் தழுவினவை. காலம் மாற மாற பாஷை மாறிக்கொண்டு போகிறது. பழைய பதங்கள் மாறிப் புதிய பதங்கள் உண்டாகின்றன. புலவர் அந்த அந்த காலத்து ஜனங்களுக்குத் தெளிவாகத் தெரியக்கூடிய பதங்களையே வழங்க வேண்டும்.

**(பாரதியார் கட்டுரைகள், ப.56)**

சுதேசி இயக்கம் தோற்றுவித்த **'தேசாபிமானம், பாஷாபிமானம்'** என்னும் தாரக மந்திரம் நாட்டுணர்வையும் மொழி உணர்வையும் தேசிய உணர்வுகளாக்கியது. நாடெங்கும் இது எதிரொலித்தது. 'மக்கள் இயக்கம்' என்னும் புதிய சிந்தனையை முன்னெடுத்துச் சென்ற மக்கள் தலைவர்களும் இந்த இயக்கத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட இதழாளர்களும் நாட்டுணர்வோடு மொழி உணர்வின் தேவையையும் மக்களுக்குப் புரியவைக்க முற்பட்டனர் மொழியை எளிமைப்படுத்த வேண்டியதன் காலத்தேவையை எதிரொலித்தனர். தமிழகத்திலும் இந்த எழுச்சி விழித்தெழுந்தது. ''எழுதுவன வெல்லாம் எளிய நடையில் இருத்தல் வேண்டும். பொது ஜனங்கள் உபயோகப்படுத்தும் சொற்களை இலக்கியத்தில் எடுத்தாளவேண்டும். ஜீவதாது கொண்ட இலக்கியத்திலேதான் அழகு உண்டு. பொது

ஜனங்களுக்கு அர்த்தமாகும் இலக்கியத்திலேதான் உயிர் உண்டு'' (ஆனந்த குணபோதினி, செப்டம்பர் 1926, ப.65) என்று எஸ்.ஜி. இராமாநுஜலு, 'பண்டிதர் தமிழ்' பொது மக்களைச் சென்றடையும் 'மக்கள் தமிழாய்' மாற வேண்டியதன் இன்றியமையாமையை வலியுறுத்துகிறார் இதற்கு, ''தமிழ்ப்பாஷையின் மதிப்பைக் காக்கும் தமிழ்ச் சத்தியாக்கிரகிகள் தேவை'' என்று அவர் மேலும் வற்புறுத்துகிறார். **தமிழ்ச் சத்தியாக்கிரகிகள்** என்னும் சொல்லாட்சி அரியது; ஆழ நினைக்கத்தக்கது.

நாட்டின் நல்வாழ்விற்குத் தாய்மொழி வளர்ச்சி அடிப்படை யாகும். மக்கள் உயர மொழியும் உயர்கின்றது. அவர்கள் தாழ்வு அதனையும் பாதிக்கின்றது அடிமைப்பட்ட நாளில் தமிழர்கள் தாம் உயரவேண்டும் என்று உழைத்த அளவிற்கு மொழியும் வளர்ந்து உயரவேண்டும் என்று எண்ணவில்லை. உரிமை வாழ்வு பெறத் தாய்மொழி உயர்வு பெறல் மிகவும் இன்றியமையாதது என்று உணர்ந்த நிலையில் அன்றைய தமிழ் இதழ்கள் தாய்மொழி உயர்விற்காகப் போர்க்குரல் கொடுத்தன. வ.உ.சி., பாரதியார் போன்ற விடுதலை இயக்கத் தலைவர்கள் அரசியல் பணிகளுக்கிடையில் மொழிப்பணி ஆற்றியதன் நோக்கமும் இதுவே ஆகும்.

வ.உ.சி.யின் தமிழ்ப்பணி பற்றி அறிவதற்குமுன் அவர் வாழ்ந்த காலத்து மொழிச் சூழலைப் புரிந்து கொண்டால்தான் அவருடைய தமிழ்த் தொண்டின் சீர்மையினைத் தெளிந்தறிய முடியும் என்ற நோக்கத்தின் அடிப்படையிலேயே மேற்கூறிய செய்திகள் விவரிக்கப் பெற்றன.

வ.உ.சி. தமிழின் தொன்மை, இலக்கண இலக்கிய வளங்கள், அற இலக்கியச் சிறப்புகள் ஆகியவற்றை மீண்டும் மக்களுக்கு உணர்த்தி, எண்ணத்தாலும் சொல்லாலும் செயலாலும் தமிழ்ச் சமுதாயம் மறுமலர்ச்சி அடைதல்வேண்டும் என்ற உயர் நோக்கங்களைச் செயல்படுத்த விரும்பினார். அவ்விருப்பம் அவருடைய தமிழ்த் தொண்டாய் மலர்ந்தது, உரைநடைப்பணி, மொழிபெயர்ப்புப்பணி, பதிப்புப்பணி,படைப்பிலக்கியம் எனப் பல்துறை விரிவாக்கப் பணிகளாக வ.உ.சி.யின் தமிழ்ப்பணிகள் விரிந்தன.

# 3
# கட்டுரைகள்

"**க**ட்டுரை என்பது எழுதுபவர் ஆளுமைத் திறத்தின் வெளிப்பாடு. கட்டுரையின் சிறப்பு அதன் பொருண்மையில் இல்லை. எதைப்பற்றி வேண்டுமானாலும் எழுதலாம் ஆனால்,எழுத்தாண்மைத் திறனுடையானின் சிறப்பில்தான் எழுத்துச் சிறப்பு அமைகிறது'' என்று ஏ.வி.பென்ஸன் கட்டுரைக் கலையின் இயல்பினை எடுத்துரைக்கின்றார். செய்யுளைவிடக் கருத்து விரிவிற்கும் தொடர் அமைப்புகளுக்கும் இடம் தந்து உருவாக்கப்படுவது உர்ரை நடையாகிறது.

வ உ.சி.யின் கட்டுரை எழுத்தாண்மைச் சிறப்புகளை அறிவதற்குப் பயன்படும் கட்டுரைகள் கால இடைவெளிகளில் அவரால் எழுதப்பெற்றன. அவருடைய முதல் கட்டுரை, விவேகபாநு என்னும் ஆன்மிக இதழில் வெளிவந்துள்ளது 1900 செப்டம்பரில் வெளிவந்த அந்தக் கட்டுரையின் தலைப்பு **கடவுளும் பக்தியும்** என்பதாகும். 17 1.1936 தினமணியில் வெளியான **உலகமும் கடவுளும்** என்பதே வ.உ.சி. எழுதி வெளிவந்துள்ள கடைசிக் கட்டுரையாகும் (இதுவரையில் கிடைத்துள்ள சான்றுகளின் அடிப்படையில்).

ஏறக்குறைய முப்பத்தேழு ஆண்டுகளில் வ.உ.சி. யின் கட்டுரைகள் இடைவெளிகளுக்கு இடையேயும் சில சமயங்களில் தொடர்ந்துமாக வெளிவந்துள்ளன. பல்வேறு துறைகள் சார்ந்தனவாக அவை அமைந்துள்ளன ஆன்மிகம், அரசியல், வாழ்க்கை வரலாறு, மொழி, இலக்கியம், பொது என்ற தலைப்புகளில் வ.உ.சி.யின் கட்டுரைகளை வகைப்படுத்தலாம். பத்தொன்பது கட்டுரைகள் இந்நூலாசிரியரின் பார்வைக்குக் கிடைத்துள்ளன. இங்கு ஆன்மிகம், அரசியல், வாழ்க்கை வரலாறு பற்றிய வ.உ.சி யின் கட்டுரைகளின் மூலம் அவருடைய கட்டுரைத் திறன் எடுத்துரைக்கப் பெறுகிறது.

## ஆன்மிகக் கட்டுரைகள்

வ உ சி. வேதாந்தத்தில் மிகுந்த ஈடுபாடும் பயிற்சியும் பெற்றவர் வேதாந்தத்தை விளக்கும் **கைவல்யம், விசாரசாகரம்** என்னும் இரு பெரும் தத்துவ நூல்களைக் கசடறக் கற்றுத் தேர்ந்தவர்

**ஞானவாசிட்டம்** எனும் வேதாந்தத் தத்துவ நூலை மதுரை ஸ்ரீ பிரமானந்த சுவாமிகள் மடத்தின் தலைவர் ஸ்ரீ சோமசுந்தர சுவாமிகளிடம் கற்றவர்.

தூத்துக்குடியில் தெய்வப் பேரவையில் இளம் வயதில் சேர்ந்து சமயப் பிரசாரம் செய்தவர். தூத்துக்குடி மேலூர் பகுதியில் திருஞானசம்பந்தர் மடாலயத்தில் சைவசித்தாந்த சபையொன்றைச் சிவகுருநாத பிள்ளை போன்ற நண்பர்களின் துணையோடு நிறுவியவர். **கைவல்யம் கற்பிக்க அங்கு வகுப்புகளை நடத்தியவர்** (என். சம்பத் - பெ சு.மணி, வ.உ.சிதம்பரம் பிள்ளை, ப.57)

இந்த ஆன்மிகப் பின்னணியின் அடிப்படையில் அறியப்பெற வேண்டியவையே வ உ சி.யின் ஆன்மிகக் கட்டுரைகள். எதையும் எளிய முறையில், படிப்பவர் எளிதில் உணர்ந்து பயன் பெறும் விதத்தில் சொல்ல வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தவர் வ உ.சி கடினமான செய்தியையும் எளிதில் புரிந்துகொண்டு நடைமுறைப் படுத்தும் வகையில் தம் படைப்புகள் இருக்க வேண்டும் என்று எண்ணிச் செயல்பட்டவர் அவர்.

கடவுள்பற்றிய சிந்தனையாயினும் வாழ்வியல் பற்றியதாயினும் வேறு எப்பொருள் பற்றியதாயினும் அதில் எளிமையும் தெளிவும் வ உ.சி.யின் தனித்தன்மைகளாக வெளிப்படும் "எல்லா மதத்தவரும் ஒரே கடவுளைத்தான் வணங்குகிறாரென அவர் அறிகின்றிலர். தமது மதத்திற்குரிய கடவுளே உண்மையானவரென்றும் பிற மதத்தவருடைய கடவுள் உண்மையல்லாதவரென்றும் அவர் நினைக்கின்றனர். அவ்வெண்ணந்தான் இவ்வளவு விபரீதங்களையும் விளைவிக்கிறது (**கடவுள் ஒருவரே**, விவேகபாநு, பிப்பிரவரி 1901, ப.126) என்று நூறு ஆண்டுகளுக்கு முன்பு வ.உ.சி கூறியது இன்றைக்கும் என்றைக்கும் பொருந்தும் உண்மையாய் நின்று நிலவுகிறது.

> *ஒவ்வொரு மதமும் ஒவ்வொரு காலத்தில் தோன்றிய ஒவ்வொரு பெரியவருடைய அறிவு விளக்கமேயன்றி வேறன்று. ஒருவர் அறிவுக்கு மற்றொருவர் அறிவு எல்லா விஷயங்களிலும் பொருத்தமுடையதாக இருக்குமா? சில விஷயங்களில் பொருத்தமின்றித்தானே இருக்கக்கூடும். அது பற்றிச் சுதேசத்தாருக்குள் சகோதர வாஞ்சையைக் குறைப்பது நியாயமா?*

**(சுதேசாபிமானம், விவேகபாநு, 1906, ப.47)**

மதங்களுக்கு இடையே நிலவும் சிந்தனை வேறுபாடுகளுக்கான காரணங்களை எடுத்துக்காட்டி, அது இயல்பானதுதானே என்று

சமாதானம் கூறி, இந்த அடிப்படை உண்மையைப் புரிந்து கொள்ளாமல் முரண்படுவது ஏன் என்று வினவுகிறார் வ உ.சி மதத்தை முதன்மைப்படுத்தி, 'சுதேசத்தாருக்குள் சகோதர வாஞ்சையைக் குறைப்பது நியாயமா?' என்று உண்மையான நாட்டுணர்வுச் சிந்தனையோடு வருந்தியது வ உ.சி யின் உள்ளம்

'யான்' என்னும் பற்றிலிருந்து விலகும்போது, மனிதன் தன்னுள்ளேயே இறைவனைக் காண இயலும் என்கிறார் வ உ சி ஒவ்வொரு மனிதனும் தன்னை உணர வேண்டும் என்பதையும் தன்னை உணர்ந்தால் தன்னுள் உறையும் இறை ஆற்றலைக் கண்டறிந்து தன்னைத் தானே அறிதல் இயலும் என்பதையும் அனுபவத்தில் அறிந்தவர் அவர். ஆழ்ந்த வேதாந்தப் பயிற்சியும் ஆன்மிகத் தெளிவும் உடையவரான வ உ.சி., தாம் அறிந்த அந்தப் பேருண்மையைப் பிறரும் அறிந்து பயன்பெற வேண்டும் என்று விரும்பியவர். அந்த விருப்பம் அவருடைய ஆன்மிகக் கட்டுரைகளில் பல இடங்களில் வெளிப்பட்டுள்ளது.

**மனிதனும் அறிவும்** என்னும் கட்டுரையில் 'சிறப்பும் பெருமையும் அருமையும் வாய்ந்தவனான மனிதன் செய்ய வேண்டிய கடமைகள் சிலவுள' என்று கூறும் வ உ சி அவற்றுள் தலையாயது 'மனிதன் தன்னை அறியும் அறிவே' என்று குறிப்பிட்டு அதனைப் பின்வருமாறு விளக்குகின்றார்.

> நாம் 'மனிதன்' என்று சொல்லும்பொருளின்கண் 'அறிவு' என்னும் ஒருபொருளும் 'மனம்' என்னும் ஒரு பொருளும் 'உடம்பு' என்னும் ஒரு பொருளும் ஆகியமூன்றும் விளங்கக் காண்கிறோம்.
>
> 'உடம்பு' என்பது எலும்பு, நரம்பு, தசை, இரத்தம் முதலியவற்றின் சேர்க்கைப் பிண்டமாய்,மனமும் அறிவும் தங்குதற்கு ஒரு களனாய் உடம்பின் புறத்திலுள்ள பொருள் களுடன் மனம் சம்பந்தப்படுவதற்குரிய பொறிவாயில் களைக்கொண்டு நிற்கும் ஒரு கருவி.'மனம்' என்பது நினைத்தல், அறிதல், மறத்தல்,ஆக்கல், அளித்தல், அழித்தல் முதலியவற்றைச்செய்வதாய், அறிவை முதலாகக் கொண்டு உடம்பின்கண் தங்கி, அதன் பொறிவாயில்மூலமாக அதனையும், அதன் அகத்தினும் புறத்தினுமுள்ள பொருள் களையும்தொழில்படுத்தும் ஒரு சூட்சும சக்தி.'அறிவு' என்பது மனதுக்கும் உடம்புக்கும்முதலாக நின்று மனத்தையும் உடம்பையும்தீநெறிகளில் செல்லவிடாது விலக்கி நன்னெறிகளிற்செலுத்தும் சுயம்புப் பொருள்
>
> (ஞானபாநு, ஏப்பிரல் 1913, ப.7)

என்று 'உடம்பு', 'மனம்', 'அறிவு' ஆகியவற்றை விளக்கிய வ.உ.சி., அறிவின் பணி யாது என்பதைத் தெளிவுபடுத்துகிறார்.

> அறிவு, தான் விரும்பிய அறத்தைச் செய்துமுடிக்கும் முன்னர் கவனமின்றி மனத்தை ஆளுந்தொழிலைச் சற்று நழுவவிடு மாயின் மனம் தன்போக்கில் ஓடித் தீ நெறிகளில் பட்டுத் தானும் கெட்டு உடம்பையும் அறத்தையும் கெடுத்துவிடும்.
>
> **(ஞானபாநு, ஏப்பிரல் 1913, ப.9)**

இதில் 'மனத்தை ஆளும் தொழில்' என்பது நினைத்தற்குரியது. அறிவின் கடமை மனத்தை ஆளுதல்; அதாவது, மனத்தைச் செய்யும் பணியில் ஒருமுகப்படுத்துதல் அறிவின் செயல் என்று விளக்குகிறார். **மனத்தை ஆளும் தொழில், நழுவ விடுமாயின்** என்பன எளிய ஆனால் நிறைவான - நுட்பமான சொல்லாட்சிகள்.

அறிவின் வழியே மனத்தை ஆளவேண்டும் என்பதை வற்புறுத்தும் வ.உ.சி., அதன் விளைவாக அமையும் நன்மையையும் மறவாமல் குறிப்பிடுகின்றார்: ''அறிவு அறங்களைக் காட்டும் அறிவு காட்டும் அறங்களையே மனம் நினைக்கும்படி அதனை ஆள வேண்டும். இவ்வாறு அறிவு காட்டும் அறங்களையே மனம் நினைத்தும், உடம்பு செய்தும் வருமாயின் மனிதரெல்லாம் இன்பத்தையே அடைவாரென்பது திண்ணம்'' (ஞானபாநு, ஏப்பிரல் 1913, ப.9)

அறங்களை எண்ணவும் செய்யவும் மனம் நல்ல நிலைமையிலும் உடம்பு ஆரோக்கிய நிலைமையிலும் இருக்க வேண்டும். அதற்கான வழி எதுவாக இருக்க முடியும் என்பதை வ.உ.சி. தெரிவிக்கின்றார் ''மனம் நல்ல நிலைமையில் இருப்பதற்குத் தீயனவற்றை முற்றும் விலக்கி (ஆரோக்கியத்திற்கொத்த) நல்ல (உணவு முதலிய)னவற்றையே, பசித்த பின்னர் அளவறிந்து உட்கொள்ளல் வேண்டும்.''

நல்லோர் இணக்கமும் பசித்துப் புசித்தலுமே மனமும் உடம்பும் நன்னிலையில் இருத்தற்கும் இயங்குதற்கும் ஏற்ற வழி என்று வ.உ.சி. கூறுவது எத்துணைப் பொருத்தமானது என்பதை அவ்விரண்டையும் நடைமுறையில் கடைப்பிடிப்பவர்கள் தம் அனுபவத்தால் உணர முடியும்

'வினை' என்பதையும் 'விதி' என்பதையும் பற்றி எண்ணிப் பார்க்கும் வ.உ.சி. இரண்டையும் வரையறுத்து, இரண்டின் செயற்பாடுகளையும் விவரிக்கிறார். ''மனம், நா, உடம்பு இம்மூன்றன்

தொழிலுக்கும் வினையென்று பெயர். அதாவது, நினைத்தலும் சொல்லலும் செய்தலும் வினையாம். நினைக்க வேண்டியதை நினையாது விடுதலும் சொல்ல வேண்டியதைச் சொல்லாது விடுதலும் செய்ய வேண்டியதைச் செய்யாது விடுதலும் வினையென்றே கொள்ளப்படும்'' **(வினையும் விதியும்,** ஞானபாநு, சூன் 1913, ப.52) என்று வினையையும், ''நினைப்பும் சொல்லும் செயலும் முதிர்ச்சியடைந்து அதனதன் பயனை அளிக்கும்பொழுது விதியென்னும் பெயரைப் பெறுகின்றது'' (மேலது, ப. 53) என்று விதியையும் விளக்குகின்றார்.

செய்யாது தவிர்த்தால் தீவிதி எப்படி அழிந்து போகும் என்பதையும் தொடர்ந்து செய்தால் நல்விதி எப்படி வளரும் என்பதையும் எளிய - அழகிய உவமைகளின் மூலம் பிறிதோர் இடத்தில் கூறிச் செல்லுகிறார். ''தீவினையைச் செய்யாதிருப்பின் தீவிதி அழிந்தே போகும், வரவில்லாத முதல் உண்ண உண்ணக் குறைந்து அழிதல் போல; நல்வினையைச் செய்யச் செய்ய நல்விதி வளர்ந்து கொண்டேயிருக்கும், ஈட்ட ஈட்டப் பொருள் வளர்தல் போல.''

'வரவில்லாத முதல் உண்ண உண்ணக் குறைந்து அழிதல் போல' என்றும் 'ஈட்ட ஈட்டப் பொருள் வளர்தல் போல' என்றும் வ.உ.சி. பயன்படுத்தியுள்ள உவமைகள் அவருக்கே உரித்தான எளிமையும் செறிவும் நிறைந்த வெளிப்பாட்டுத் திறனைப் புலப்படுத்துகின்றன.

**அரசியலைப் போலவே ஆன்மிகத்திலும் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர் வ.உ.சி. நாட்டுணர்வு எந்த அளவிற்கு இன்றியமையாதது என்று கருதினாரோ, அதே அளவு தனிமனித ஒழுக்க மேம்பாடு தேவை என்று கருதினார்.**

**அவருடைய ஆன்மிகச் சிந்தனைகள் எல்லாம் பெரும்பாலும் தனிமனித ஒழுக்கம் பற்றியனவாகவே - தனிமனித மேம்பாடு பற்றியனவாகவே அமைந்தன. மனிதன் அறிவின் துணையோடு தன் மனத்தை ஆளும் வல்லமையைப் பெற வேண்டும் என்பதே அவருடைய எதிர்பார்ப்பாக இருந்தது. தனிமனிதன் தன்னை எவ்வாறெல்லாம் உயர்த்திக் கொள்ள முடியும் என்று நம்பினாரோ, உயர்த்திக் கொள்ள வேண்டும் என்று விரும்பினாரோ அவற்றையெல்லாம் தம் ஆன்மிகக் கட்டுரைகளில் பதிவு செய்துள்ளார்.**

வ.உ.சி.யின் கட்டுரைகளில் (இதுவரையில் கிடைத்த சான்றுகளின் அடிப்படையில்) ஆன்மிகம் பற்றியனவே மிகுதி. இந்நூலாசிரியரின் பார்வைக்குக் கிடைத்த பத்தொன்பது கட்டுரைகளில் எட்டு

ஆன்மிகம் பற்றியவை என்பது ஒன்றே ஒழுக்க நெறிகளில் - தனிமனித ஆளுமை வளர்ச்சியில் வ.உ.சி.க்கு இருந்த ஈடுபாட்டைப் புலப்படுத்தும் வ.உ.சி.யின் முதல் கட்டுரை, 'கடவுளும் பக்தியும்' (செப்டம்பர் 1900); அவர் எழுதி வெளிவந்த கடைசிக் கட்டுரை 'உலகமும் கடவுளும்' (சனவரி 1936). 'மதம்' பற்றியும் 'கடவுள்' பற்றியும் அவர் எழுதியுள்ள கட்டுரைகளும்கூட, தனிமனிதர்கள் தம்மை நெறிப்படுத்திக் கொள்ளவும் உண்மை வாழ்க்கை எது என்பது பற்றிய தெளிவைப் பெறவும் பயன்படும் நோக்கில் எழுதப் பெற்றவையேயாகும்.

**அரசியல் கட்டுரைகள்**

**சுதேசாபிமானம், சுதேச ஸ்டீமர் விக்ஞாபனம்** இவையே இதுவரையில் கிடைத்துள்ள வ.உ.சி யின் அரசியல் கட்டுரைகளுள் தனித்தன்மை வாய்ந்தவை. வ.உ.சி.யின் முதல் அரசியல் கட்டுரையான 'சுதேசாபிமானம்' ஆரம்ப அரசியல் அறிவைப் புகட்டுவதற்காக எழுதப் பெற்ற ஒன்றாகும்.

வ.உ.சி.யின் சீரிய சிந்தனைகளுள் ஒரு பகுதியாகத் திகழ்பவை நாட்டொருமைச் சிந்தனைகள். அவற்றின் சாரமாக அமைந்ததே 'சுதேசாபிமானம்.' அவரது நாட்டொருமைச் சிந்தனை அறிவார்ந்தது; காரணகாரியத் தெளிவுடையது.

தாய்நாட்டின் பெருமை உரியவாறு உணரப் பெற வேண்டும் என்று கருதியவர் வ.உ.சி. அதனால்தான்,

> *ஒருவர் பிறப்பதற்கு ஆதாரமாயிருந்தவள் அவருக்குத் தாயென்றால் அவரும் அவருடைய முன்னோரும் பிறப்பதற்கு ஆதாரமாயிருந்த தேசம் அவரைப் பெற்ற தாயினும் மேலென்பதற்குத் தடையென்னை?*

**(சுதேசாபிமானம், விவேகபாநு, பிப்பிரவரி 1906, ப.45)**

என்று வினவுகிறார். தாயினும் மேலானதாக வ.உ.சி. கருதிய நாடு அடிமைப்பட்டிருந்த நிலை அவரைப் பெரிதும் வருத்தியதும் அந்நிலையை நீக்க அவர் மேற்கொண்ட முயற்சிகளும் சந்திக்க நேர்ந்த இன்னல்களும் வரலாற்றுப் பதிவுகள். அவருடைய அனுபவங்களே,

> *வறுமையினும் வியாதியினும் சகிக்கொணாக்*
> *கொடியது அடிமைத்தனமே*

**(சுதேசாபிமானம், ப.49)**

என்று அடிமைத்தனத்தின் கொடுமையைத் துல்லியமாகப் படம் பிடித்துக்காட்டச் செய்தன அடிமைத்தனத்தின் கடுமையை நுணமையாகப் புலப்படுத்துவதற்கு - படிப்பவர் மனத்தில் நேரடியான பாதிப்பை ஏற்படுத்துவதற்கு வ உ சி. கையாண்டுள்ள 'வறுமையினும் வியாதியினும் சகிக்க வொண்ணாதது' என்னும் சொல்லாட்சி அழுத்தமானது; பொருளாழம் மிக்கது.

அரசியல் தெளிவைப் போன்றே, இலக்கியப் புலமையைப் போன்றே, வ.உ.சி யின் பொருளியல் சிந்தனையும் தனித்துவம் வாயந்தது. அன்னியரான ஆங்கிலேயருக்கு எதிராக அவர் கப்பல் கம்பெனி தொடங்கியதும் தூத்துக்குடிக்கும் கொழும்பிற்கும் இடையே கப்பல் ஓட்டியதும் வரலாற்று நிகழ்வுகள். வ.உ.சி யின் பொருளியல் சிந்தனையின் ஒரு தெறிப்பே கப்பல் ஓட்டியமை. கப்பல் கம்பெனி தொடங்கவும் அதை நடத்தவும் வாணிபத்தில் ஆங்கிலேயரை வென்று நிற்கவும் அவர் உழைத்த உழைப்பும் மேற்கொண்ட பயணங்களும் நிகழ்த்திய சொற்பொழிவுகளும் அவற்றின் விளைவாக இந்தியத் திருநாடே வ உ.சி என்னும் மனிதரை ஓர் இயக்கமாகவே வியப்போடு நிமிர்ந்து நோக்கியமையும் இந்திய விடுதலை இயக்க வரலாற்றில் தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்த்த நிகழ்வுகள்

அந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க காலகட்டத்தில் வ உ சி எழுதிய கட்டுரைதான், 'சுதேச ஸ்டீமர் விக்ஞாபனம்' என்பதாகும். "அந்நிய நாட்டார் பிரவேசித்த காரணத்தால் சகல கைத்தொழில்களையும் வியாபாரங்களையுமிழந்து மிக்க வறுமையுற்றுப் பசியால் வருந்தி இறந்து கஷ்டப்படுவதைக் கண்ணுற்ற சர்வ இரக்ஷகராகிய கடவுளானவர் சென்ற 1905ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 7ஆம் தேதி முதல் நம் சுதேசத் தாயின்மீது கருணைகூர்ந்து 'சுதேசக் கிளர்ச்சி'யை உண்டாக்கி நாம் நீடித்த நாளாக இழந்திருந்த ஒற்றுமையையும் ஊக்கத்தையும் கைத்தொழில்களையும் வியாபாரங் களையும் நம்மைக் கைக்கொள்ளும்படிச் செய்து நன்மை புரிந்து வருகின்றதை நாமெல்லோரும் அறிந்திருக்கின்றோம்" (**சுதேச ஸ்டீமர் விக்ஞாபனம்**, விவேகபாநு, நவம்பர் 1906, ப.295)

வங்கப் பிரிவினையில் பூத்த புதுமலரான சுதேசக் கிளர்ச்சியை இறைவனின் திருவருளால் இந்தியர்களுக்கு வாய்த்ததொரு நற்பேறு எனறு வருணிதது அது, காலத்தின் தேவையாக அமைந்தமையைச் சுட்டுகிறார்.

இக்கட்டுரையில் வ.உ.சி. குறிப்பிடும் கப்பல் ஓட்டுதல் தொடர்பான செலவினங்கள் - வரவு செலவு கணக்கு விவரம் அத்துறையில் மிகக் குறுகிய காலத்தில் அவர் பெற்றிருந்த பயிற்சியை - தெளிவை உணர்த்துகின்றது. வ.உ.சி. குறிப்பிடும் செலவினங்களுள் சில அறியத்தக்கன.

*டெக்கின் 'குறு'வாகிய சிறிய வேலைக்காரரின் சம்பளம்...*

*தூத்துக்குடியிலும் கொழும்பிலும் பைலட்டுக்கூலி,*
*நங்கூர வாடகை, தீப வாடகை முதலியன...*

*சரக்குகள் ஏற்றும் இறக்கும் வேலைக்காரர்களாகிய*
*ஸ்டீவ்டோரின் சம்பளம் வருஷம் 1க்கு...*
*தூத்துக்குடி ஸ்டீமர் ஆபீஸ் சிப்பந்திச் சம்பளச் செலவு*
*கொழும்பு ஸ்டீமர் ஆபீஸ் சிப்பந்திச் சம்பளச் செலவு*

தூத்துக்குடி **வ.உ.சிதம்பரம் பிள்ளை**
4.10.1906

(**சுதேச ஸ்டீமர் விக்ஞாபனம்**, ப.297)

தூத்துக்குடியிலும் கொழும்பிலும் அலுவலகம் ஏற்படுத்திக் கப்பல் போக்குவரத்தை நிருவகிக்கும் பணியை மேற்கொண்டமை - கப்பல் தொழிலோடு தொடர்புடைய தொழில் நுட்பம் அறிந்து செயற்பட்டமை ('குறு', 'ஸ்டீவ்டோர்' முதலிய பல்வேறு பிரிவினரான பணியாளர் பற்றிய தகவல்கள் அறிந்து தம்மைக் கப்பல்தொழில் சார்ந்த பயிற்சியுடையவராக வளப்படுத்திக் கொண்டமை) - இவை எவ்வளவு பெரிய நிருவாகத்தை வ.உ.சி. முன்னின்று நடத்தி யிருக்கின்றார் என்பதைப் புலப்படுத்தி வியப்பில் ஆழ்த்துகின்றன.

மிகச்சிறிய கட்டுரையான 'சுதேச ஸ்டீமர் விக்ஞாபனம்' மிக அரிய செய்திகளை உள்ளடக்கி வாமனத் தோற்றத்தில் வ.உ.சி.யின் பொருளியல் சிந்தனை என்னும் பேருருக் காட்டி, விவேகபாநு இதழின் பக்கங்களில் பொதிந்து கிடக்கிறது.

**வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரைகள்**

தமிழைப் பொறுத்தவரையில் 'வாழ்க்கை வரலாறு' - தலைவர், அறிஞர் வரலாறு என்பது முறையாகத் தொகுக்கப்பெறாத நிலையிலேயே இன்றும் இருந்து வருகிறது. அரிய சாதனைகள் பல

நிகழ்த்தி வரலாற்றில் இடம்பெற்ற பலரின் வாழ்க்கைக் குறிப்புகள் கூட முழுமையாகக் கிடைப்பது இல்லை என்பதே இன்றைய நிலை

தம்முடைய தன்னலமற்ற சேவைகளால் வரலாற்றில் தடம் பதித்தவரான வ.உ.சி. வாழ்க்கை வரலாறுகள் எழுதப் பெற வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தவர். தம்முடைய அரசியல் குருவாக மதித்துப் போற்றிய திலகரின் வாழ்க்கை வரலாற்றை வ.உ.சி. எழுதியுள்ளார்.

''லோகமானிய பாலகங்காதர திலகர் என் அரசியல் குரு ஆவார். எனது 21 ஆவது வயதிலிருந்து, அதாவது 1893லிருந்து அரசியலைப்பற்றிய அவருடைய பேச்சுக்களையும் எழுத்துக்களையும் நான் கவனித்து வந்தேன் இந்தியா எனது நாடு, அநியாயமான வகையில் பிரிட்டிஷார் தம் வசம் நம் நாட்டை வைத்துள்ளனர். நம் நாட்டை அவர்களிடமிருந்து திரும்பப் பெற வேண்டும் என்று அவை எனக்கு உணர்த்தின'' (Reminiscences of Lokamanya Tilak, vol.III, P. 158)

1893இல் திலகரிடம் ஏற்பட்ட ஈடுபாடு, அவருடைய மறைவுக்குப் பிறகும் வ.உ.சி.யின் இறுதிக்காலம் வரையிலும் மாறாத ஒன்றாகவே இருந்தது. திலகரின் மறைவுக்குப் பின் அவருடைய நண்பர்களால் தொகுக்கப்பெற்ற 'திலகர் நினைவுகள்' (Reminiscences of Lokamanya Tilak) என்னும் தொகுப்பின் மூன்றாம் தொகுதியில் திலகரோடு பழகிய அனுபவங்களை மனம் திறந்து பகிர்ந்து கொண்டுள்ளார் வ.உ.சி.

**திலகரின் வாழ்க்கை வரலாற்றைத் தமிழில் எழுதும் வாய்ப்பு 1933இல் வ.உ.சி.க்கு அமைந்தது. இன்றும் இலங்கையில் இருந்து வெளிவரும் வீரகேசரி என்னும் நாளிதழில் திலகரின் வாழ்க்கை வரலாற்றை எழுதிவந்தார். ஞாயிறுதோறும் வெளிவந்த அந்தத் தொடர் 28.5.1933இல் தொடங்கியது.** இதுவரையில் பெயரளவில் மட்டுமே அறியப்பெற்ற அக்கட்டுரைத் தொடர் இந்நூலாசிரியரால் கண்டறியப் பெற்று முதல் முறையாக இங்கு அறிமுகம் செய்யப்பெறுகிறது.

**'பாரத ஜோதி ஸ்ரீதில்க மகரிஷியின் வரலாறு'** என்னும் தலைப்பில் அமைந்த அவ்வாழ்க்கை வரலாறு முழுமையாகக் கிடைக்கவில்லை **பதினேழு நாள்கள் (ஞாயிறுதோறும்) வெளி வந்த பகுதிகளே** - அதுவும் தொடர்ச்சி இல்லாமல் கிடைத்துள்ளன. கிடைத்துள்ள தரவுகளின் அடிப்படையில் வ.உ.சி.யின் 'திலக மகரிஷியின் வரலாறு' இங்குப் பதிவு செய்யப் பெறுகிறது.

*அத் தேசாபிமானியின் துன்பமான வாழ்க்கையைப்பற்றி எழுதப்பட்டுள்ள விஷயங்களை ஜாக்கிரதையோடு படித்த ஒருவரால் எழுதப்பெற்ற அவரது சுருக்கமான ஜீவிய சரித்திரத்தை அவர் பெயரைப் போற்றும் கோடிக் கணக்கான மனிதர்கள் விரும்புகின்றார்கள். அத்தகைய சரித்திரத்தையே யான் எழுத எத்தனிக்கின்றேன்.*

**(வீரகேசரி, 28.5.1933)**

என்று திலகரின் வாழ்க்கை வரலாற்றைத் தொடங்குகிறார் வ.உ.சி.

தனிமனிதனின் ஆளுமை உருவாக்கம் என்பது அவனுடைய சிறுவயதிலிருந்தே தொடங்கி விடுகிறது. அந்தத் தனிமனிதன் அதை உணர்ந்தோ, உணராமலோ அந்தச் சிறுவயதிலேயே அதில் கலந்து விடுகிறான் என்பது மனித வாழ்க்கை உணர்த்தும் உண்மையாகும். திலகரும் இந்தப் பொது நியதிக்கு உட்பட்டவராகவே விளங்கினார் என்று வ.உ.சி. குறிப்பிடுகின்றார். ''திலகர் தமது தகப்பனாரிடமிருந்து அவருடைய உறுதியான யோக்கிய உணர்ச்சியையும் சுதந்திர உணர்ச்சியையும் தமது தாயாரிடமிருந்து அவருடைய தெய்வ பக்தியையும் ஜீவகாருண்ணியத்தையும் இயற்கையாக அடைந்தனர்'' (வீரகேசரி, 28.5.1933).

'மேலான அறிவுத் திறனும்' 'வளையாத தர்க்க வன்மையும்' 'தெளிந்த சட்ட ஞானமும்' நிறைந்தவரான திலகர், நாட்டுக்குழைத்தல் என்னும் பொதுவாழ்வில் நுழைதற்கு எது முதன்மையான காரணமாக அமைந்தது என்பதைப் பின்வருமாறு வ.உ.சி கூறுகிறார்: ''அன்னிய தேசத்தாரின் ஆளுகைக்குட்பட்ட இந்தியாவில், அவர் காலத்தில் நடந்த சில சம்பவங்கள் அவருடைய தேசத்தின் ஆதரவற்ற தன்மையைப் பற்றி அவருடைய மனத்தில் மங்காத ஓர் எண்ணத்தை உண்டு பண்ணின. அன்னியர் ஆள்கையால் ஏற்பட்ட தமது தேசத்தவரின் நபுஞ்சகத் தன்மையைத் திலகர் வருத்தத்தோடும் வெறுப்போடும் உணர்ந்தார்'' (வீரகேசரி, 11.6.1933,) என்று கூறுகிறார் வ.உ.சி. **நபுஞ்சகத் தன்மை** என்னும் வ.உ.சி.யின் சொல்லாட்சி கருதத்தக்கது. அன்னியர் ஆட்சியில் ஆண்மையற்று - வீரம் இழந்து - கோழைகளாய் இருந்த இந்தியர்களின் நிலை திலகருக்கு வருத்தத்தையும் வெறுப்பையும் ஏற்படுத்தியமையைச் சுட்டும் வ.உ.சி, அன்னியர் ஆட்சிக்கு எதிரான திலகரின் செயற்பாடுகளின் படிநிலைகளை மிகுந்த வரலாற்றுணர்வோடு பதிவு செய்துள்ளார்.

ஆங்கில ஆட்சியானது ஏற்படுத்தியிருந்த கல்வித் திட்டமும் வேலை (உத்தியோக) அமைப்பு முறையும் நாட்டுப்பற்றை அடியோடு ஒழிக்கும் நோக்கில் உருவாக்கப் பெற்றவை என்பதைத்

தெளிவாக உணர்ந்தவரான திலகர், தம் நாட்டின் சீரமைப்பைத் 'தேசியக் கல்வி' என்பதிலிருந்து தொடங்கினார் என்று குறிப்பிடுகிறார் வ.உ.சி. (வீரகேசரி, 2.7.1933). அத்துடன், தேசியத் தத்துவத்தையும் குடியாட்சித் தத்துவத்தையும் தமது நாட்டு மக்களின் உள்ளத்தில் புகுத்துவதற்கும் தம்முடைய கல்விப் பணி சார்ந்த முயற்சிகளைக் கருவியாகப் பயன்படுத்திக் கொண்டார் என்றும் விளக்குகின்றார்.

ஒருபுறம், தேசியக் கல்வியைக் கற்றுத் தருவதன்மூலம் நாட்டுணர்வை ஊட்டும் பணியில் ஈடுபட்ட திலகர், இன்னொருபுறம் ஆங்கிலப் பழக்க வழக்கங்களிலும் நாகரிக மோகத்திலும் மூழ்கிக் கிடந்த இந்தியர் சிலர் எழுப்பிய வாதங்களை - இந்தியச் சமுதாயத்தில் அவர்கள் கொண்டு வர வேண்டும் என்று விரும்பிய மாற்றங்களை - இந்தியச் சூழலுக்குப் பொருந்தாத நடைமுறைகளை எதிர்த்துப் போராட வேண்டிய நிலையிலும் இருந்தார் என்று கூறுகிறார் வ.உ.சி

ஆங்கில மோகங்கொண்டு ஆங்கிலேயரின் வாழ்க்கை முறையை விரும்பி, போலச் செய்யும் - ஆங்கிலேயராகவே தங்களை எண்ணிக் கொண்டு நடிக்கும் இந்தியரின் போக்கு திலகருக்குப் பிடிக்கவில்லை என்பதைக் கூறுவதற்கு வ.உ சி. பயன்படுத்தும் தொடர் அறிய வேண்டியதாகும்.

*இந்தச் சுயமயக்க பித்தலாட்டக்காரர்களின் இரவல்*
*சுவிசேஷங்கள் திலகருக்குப் பிடிக்கவில்லை*

**(வீரகேசரி, 11.6.1933)**

இதில் **இரவல் சுவிசேஷங்கள்** என்னும் சொல்லாட்சி அரியது - நுண்ணியது. மிகவும் பொருத்தமாக - பல பொருள்களை உணர்த்தும் விதத்தில் அதைப் பயன்படுத்தியுள்ள வ உ.சி.யின் தமிழ் ஆளுமைத் திறன் சிறப்பாகக் குறிக்கத்தக்கது

திலகர் 1893இல் அறிமுகம் செய்த கணபதி விழாவும் 1895இல் நடத்திய சிவாஜி விழாவும் இந்திய விடுதலை இயக்கத்தின் போக்கையே மாற்றிப் புதிய வரலாற்றைத் தொடங்கி வைத்த மகத்தான நிகழ்வுகள்.

திலகரின் அரசியல் வாழ்விலும் திருப்பத்தை உண்டாக்கிய அந்நிகழ்ச்சிகள் ஏற்படுத்திய மக்கள் எழுச்சியையும் அதன் விளைவான ஆங்கில அரசின் கவலையையும் வ.உ.சி. மிகுந்த கவனத்துடன் அந்நிகழ்வுகளின் வீரியம் குன்றாமல் விவரித்துள்ளார் **மகாராஷ்டிர ஜனங்களை உயிர்ப்பித்த உற்சவங்கள்** என்று தலைப்பிட்டு வ உ.சி. இதை எழுதியுள்ளமை, சமகால வரலாற்று

நிகழ்வுகளின் இன்றியமையாமையை உணரவல்ல வ.உ.சியின் அரசியல் தெளிவையும் ஆற்றல் வாய்ந்த சொற்களின் மூலம் அதை வெளிப்படுத்தியமை அவருடைய மொழி ஆளுமையையும் புலப்படுத்தும்.

> *திலகர் முறையே 1893ஆம் வருஷத்திலும், 1895ஆம் வருஷத்திலும் ஏற்படுத்திய கணபதி உற்சவமும், சிவாஜி உற்சவமும் மகாராஷ்டிர தேசத்து ஜனங்களிடையே தேசாபிமானத்தையும், தேசிய உணர்ச்சியையும் உண்டாக்கின.*
>
> *திலகர் தமது உள்ளுணர்ச்சியை இந்து மதத்திலிருந்தே கொண்டார்; அதனால் அவர் ஆசாரச் சீர்திருத்தம் அல்லது இராஜீய விஷயங்கள் சம்பந்தமான தேசிய இயக்கம் இந்துமதக் கோட்பாடுகளை ஆதாரமாகக் கொண்டிருக்க வேண்டுமென்று விரும்பினார். இந்த நோக்கத்துடனேதான் அவர் கணபதி உற்சவத்தை ஆரம்பித்தார். சில வருஷங்களுக்குள் இந்த உற்சவம் ஒரு தேசிய ஸ்தாபனமாய்விட்டது. சிவாஜி உற்சவமும் அதே மாதிரியான நோக்கத்துடனே உண்டு பண்ணப்பட்டது. அதே மாதிரியாக ஜனங்களை ஒற்றுமைப்படுத்தும் செல்வாக்கைக் கொண்டிருந்தது.*
>
> *இந்த உற்சவங்களின் பயனாக மகாராஷ்டிர தேசத்து ஜனங்களிடையே வளருகின்ற ஒற்றுமையும் சகோதரத்துவமும் அதிகார வர்க்கத்தினருக்கு ஒரு பெரிய மனக்கலக்கத்தை உண்டு பண்ணின; அதனால் அவர்கள் இந்த இயக்கத்தை மிக ஜாக்கிரதையாகக் கண்காணிக்கத் தொடங்கினர்.*

**(வீரகேசரி, 8.10.1933)**

திலகர் தொடங்கிய கணபதி விழாவும் சிவாஜி விழாவும் சிதறிக் கிடந்த மக்கள் கூட்டத்தை ஓரிடத்தில் ஒன்று சேர்க்கவும் அவர்களிடையே ஒற்றுமை உணர்வை ஏற்படுத்தவும் பயன்பட்டன. விடுதலை இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்றுவதற்கான திலகரின் முயற்சியின் முதல் கட்டமாக - முதல் வெற்றியாக இது அமைந்தது.

1896-97இல் ஏற்பட்ட பஞ்சமும் அதுபற்றிய ஆங்கில அரசின் அலட்சியப் போக்கும் விடுதலை இயக்கம் மக்கள் இயக்கமாகும் அடுத்த கட்டம் உருவாவதைத் தவிர்க்க இயலாததாக்கின திலகர் இதை உரிய முறையில் பயன்படுத்தினார் என்பார் வ.உ.சி. "திலகர் ஓர் ஒழுங்கான வழியில் கிளர்ச்சியை நடத்தினார்; **ஜனங்களுக்குள் ஆண்மையையும் தைரியத்தையும் புகுத்தினார்.** ஜனங்கள் தங்கள் நிலங்களை விற்றுத் தீர்வை செலுத்த வேண்டுவது அவசியம் இல்லையென ஜனங்களுக்கு அவர் சொன்னார். அவர் முயற்சிகள் விசேஷ வெற்றி தந்தன ஜனங்கள் அவரால் நடத்தப்படுவதற்குச்

சித்தமுடையவர்களாகி, அவர் சொல்லியபடி நடந்து வந்தார்கள் **ஜனங்களுடைய இந்த விழிப்பிலிருந்து திலகர் இராஜீய சுதந்திரத்திற்கு அவசியமான இராஜீய நிருமான வேலைக்கு உபயோகப்படத்தக்க ஏராளமான சக்திகள் தமது தேசத்து மக்களிடம் இருப்பதைப் பிரத்தியக்ஷமாகக் கண்டார்**'' (வீரகேசரி, 24.9.1933).

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியாவின் தலைமை ஆளுநராக இருந்த கர்சன் என்றும் மறக்க இயலாதவர். இந்திய விடுதலை இயக்கத்தில் புதிய எழுச்சி தோன்றுவதற்கு அவரை அறியாமலே காரணமானவர். அவரைப் பற்றி வ.உ.சி. தரும் தகவல்கள் கர்சனைப் பற்றிய ஒரு மதிப்பீட்டை உருவாக்குவதோடு, வ.உ.சி.யின் தமிழ் நடையின் ஆற்றலையும் வரலாற்று ஆசிரியராக அவருடைய நடுநிலைப் பண்பையும் புலப்படுத்துவனவாக அமைகின்றன. அவை அறியத் தக்கன.

> *லார்டு கர்சன் இந்திய இராஜப் பிரதிநிதிகளில் மிகமிகக் கீர்த்தி பெற்றவர்; அவர் ஒரு பெரிய பிரசங்கி; ஒரு நல்ல தர்க்கவாதி; சுறுசுறுப்பும் உறுதியான விருப்பமும் பிடிவாதமும் உள்ளவர். அவர் இராஜாதிகாரிகளிலெல்லாம் சிறந்த இராஜாதிகாரி. மிகச் சிரேஷ்டமான நிலைமை களில் அவர் தமது ஆட்சியைத் தொடங்கினார்.*
>
> **(வீரகேசரி, 11.3.1934)**

நாட்டுக்குப் பெருந்தீங்கு இழைத்தவர் என்றாலும் கர்சனிடம் இருந்த ஆற்றலும் திறமையும் மதிக்கத் தகுந்தவை என்று கருதி, அவற்றை மனம் திறந்து பாராட்டும் வ.உ.சி.யின் பெருந்தகைமை எண்ணத் தக்கது. கர்சனின் நல்லியல்புகளைச் சுட்டிய வ.உ.சி., அவருடைய குறைகளையும் உரியவாறு வரைந்துள்ளார்.

> *ஆனால் சில காலம் கழிந்த பின்னர் அவர் தமது மனப்போக்கை மாற்றி மிக அகம்பாவமுள்ள ஓர் ஏதேச்சாதிகாரியாய்விட்டார். அவர் அவ்வாறானது அரசாங்க அரைத் தேவதைகளின் கட்டாயத்தினாலன்று. ஏனெனில், அவர் பிற மனிதர்களின் செல்வாக்குகளுக்கு உட்படாத சுயேச்சையோடு நடக்கின்றவர். அவர் பொதுஜன அபிப்பிராயத்தை ஒரு சிறிதும் பொருட் படுத்தாமல், கவர்ன் மெண்டின் ஒவ்வோர் அங்கத்தையும், முக்கியமாக மத்திய கவர்ன்மெண்டின் நிர்வாக அதிகாரிகளின் கைகளை வலுப்படுத்தி அனேக திருத்தங்களைச் செய்தார்.*
>
> **(வீரகேசரி, 11.3.1934)**

ஒருவரின் வரலாற்றை எழுதும்போது, அவருடைய குணநலன்களை உள்ளவாறு எடுத்துரைப்பதுதான் நெறியானது

என்னும் வ.உ.சி.யின் கொள்கை, வாழ்க்கை வரலாறு எழுத முற்படுவோர் பின்பற்ற வேண்டிய பண்பாகும்.

நீதிக்குப் புறம்பான, எந்த நெறிகட்கும் உட்படாத, கொடுமை நிறைந்ததான கர்சன் ஆட்சியின் பிற்பகுதி நிகழ்வுகளைப் பற்றிப் பேசும்போது வ உ.சி. இவ்வாறு எழுதுகிறார்:

> *லார்டு கர்சனுடைய நிர்வாகம், ஆட்சி தீய உடையோடு வந்த நன்மையாயிற்று. இந்திய தேசியக் கட்டிடத்தைக் கட்டியவர் அவரே; அவருக்குத் தெரிந்ததினும் மிக நன்றாக அவர் கட்டிவிட்டார்.*
>
> **(வீரகேசரி, 11.3.1934)**

வங்கப் பிரிவினையை ஒரு பின்னோட்டமாக முப்பதுகளில் எண்ணிப் பார்க்கும்போது, அப்பிரிவினை உருவாக்கிய எழுச்சியை நேரில் கண்டு அதில் கலந்து கரைந்தவரான வ உ சி. அந்நிகழ்ச்சி விடுதலை இயக்க வரலாற்றில் ஏற்படுத்திய மகத்தான மாற்றங்களை நினைவு கூர்தல் எளிது. அதனால்தான், **தீய உடையில் வந்த நன்மை** என்று கூற முடிந்தது. எளிய சொற்கள், ஆனால் மிகப்பெரிய வரலாற்று உண்மையை உள்ளடக்கிய பெருஞ்சிறப்பு; மீண்டும் மீண்டும் நினைந்து மகிழத்தக்க உட்பொருளோடு கூடிய நயம். இவையெல்லாம் இந்த ஒற்றை வரியின் பின்னால் நின்று வ.உ.சி.யின் நடைச்சிறப்பை - வெளிப்பாட்டுத் திறனின் மேன்மையைப் பறைசாற்றுகின்றன.

**கர்சன் ஆட்சியின் பயன் தேசிய ஒற்றுமையையும் கட்டுப் பாட்டையும் துரிதப்படுத்துகிற முழு இந்தியக் கிளர்ச்சியொன்று உண்டானதேயாம்** என்று வரலாற்றின் போக்கில் ஏற்பட்ட மிகப் பெரும் மாறுதலை - மக்கள் எழுச்சியை அதற்குரிய முழுமையான பொருளில் படிப்பவர் உணரும்படியாக நகைச்சுவை இழையோட வெளிப்படுத்திய எழுத்தாற்றல் வ.உ.சி.யின் சிறப்பாகும்.

**தேசத்தில் புதிய உயிரும் புதிய ஊக்கமும் தோன்றியது** என்பார் வ உ.சி. ‘தேசத்தில் புதிய உயிர் தோன்றியது’ என்பது எவ்வளவு செறிவானது; அடர்த்தியானது. எப்படி வ.உ சி. சொற்களைத் தெரிந்தெடுக்கிறார், எப்படி அவற்றை உயிரோட்டத் தோடு பயன்படுத்துகிறார் என்றெல்லாம் எண்ணி எண்ணி வியக்குமாறு சொற்களைப் பயன்படுத்தும் திறன் அவரிடம் அமைந்திருந்தது.

சுதேசி எழுச்சியின் விளைவாகத் திலகர் இந்திய அளவில் ஏற்றுக் கொள்ளப்பெற்ற தலைவராக வளர்ந்தார். அமிதவாதிகளின் புதிய கட்சியின் வாமனத் தோற்றம் ஓங்கி வளர்ந்தது திலகரின்

செல்வாக்கும் புதிய கட்சியின் வளர்ச்சியும் மிதவாதிகளிடையே ஏற்படுத்திய கலக்கத்தை வ.உ.சி.யின் வார்த்தைகளால் அறியலாம். ''இவையெல்லாம் மிதவாதிகளுக்கு அச்சத்தைக் கொடுத்தன. அவர்கள் காங்கிரஸ் அமிதவாதிகளால் பிடிக்கப்படக்கூடிய அபாயமான நிலைமையிலிருந்ததாக நினைத்தார்கள்; ஆதலால், அவர்கள் அமிதவாத அலையை அடக்குவதற்காக ஒரு பெரிய முயற்சி செய்தார்கள்'' (வீரகேசரி, 11.3.1934).

இதில் கவனத்தில் கொள்ள வேண்டியது வ உ.சி பயன்படுத்தியிருக்கும் **அமிதவாத அலை** என்னும் சொல்லாட்சி யாகும். 'இன்ன அலையின் காரணமாக இது நிகழ்ந்தது' என்று இன்றைய அரசியல் உலகில் கூறுவது பாமரமக்கள் முதல் இதழ்கள்வரை மிகவும் இயல்பான ஒன்றாக இருப்பதை நடைமுறை உணர்த்துகிறது. ஆனால், ஏறக்குறைய எழுபது ஆண்டுகளுக்கு முன்னால் இன்று வழங்கும் அதே பொருளில் வ.உ.சி 'அமிதவாத அலை' என்ற சொல்லை ஆண்டிருப்பது வியப்புக்குரியதாகும். அந்நாளில் அது அரசியல் சார்ந்த புதிய சொல்லாக்கமாக, வ.உ சி.யின் ஆக்கமாக அமைந்து, வரலாற்றில் உயிர்ப்போடு பதிவாகியுள்ளது

திலகரின் எண்ணங்களை எழுதும்போது, ஆழ நினைந்து தம்முடைய எழுத்துகளில் திலகர் தக்கவாறு வெளிப்படுமாறு எழுதும் வல்லமை - திலகரின் ஆளுமையைப் புலப்படுத்தும் திறமை வ.உ.சி.யிடம் இருந்தது

திலகருடையதும் தம்முடையதுமான சமகால வரலாற்றை முழுமையான வரலாற்று உணர்வோடும் வாழ்க்கை வரலாற்றுத் தன்மை குன்றாமலும் 'இது ஒரு தேவையில்லாத செய்தி', 'தொடர்ச்சி இதனால் தடைபடுகிறது' என்பன போன்ற எண்ணங்களோ, சோர்வோ படிப்போர் மனங்களில் எழாவண்ணம் சுவையோடும் விறுவிறுப் போடும் எழுதியிருப்பது வ உ.சி யின் கட்டுரை வன்மையைக் காட்டுகிறது.

நாட்டின் அன்றைய பொதுவான சூழலோடு இயைந்து திலகரின் வாழ்க்கையும் எப்படி வளர்ந்தது, படிப்படியான மாற்றங்களைக் கண்டது, தனித்தன்மையோடு கூடிய திலகரின் தலைமையை இந்த நாடு எப்படிப் பெற முடிந்தது, அதற்கான திலகரின் உழைப்பு, அந்த நிலையை அடைய அவர் மேற்கொண்ட முயற்சிகள், நிகழ்த்திய போராட்டங்கள், அடைந்த இன்னல்கள் இவையெல்லாம் விரிவாகவும் தெளிவாகவும் படிப்பவர் மனங்களை ஈர்க்கும் விதமாகவும் வ.உ.சி.யால் சொல்லப்பெற்றுள்ளன என்பதுதான் 'திலக

மகரிஷியின் வரலாறு' என்னும் இந்த நெடிய கட்டுரைத்தொடரின் தனிச்சிறப்பாகும்.

விடுதலை இயக்க வரலாறு பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும்/ மெல்ல மெல்ல - படிப்படியாக உருவாகி வளர்ந்த தன்மையைத் திலகரின் வாழ்க்கை வரலாற்றின் ஊடே மிகவும் பொருத்தமாகவும் நேர்த்தியாகவும் விவரித்துள்ளார் வ.உ.சி. விடுதலை இயக்கத்தின் பல்வேறு படிநிலைகளை - போக்குகளை - திசைமாற்றங்களை இத்தொடரில் வ உ.சி மிகத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார்

திலகரின் வரலாறு என்றாலும், அன்றைய இந்திய அரசியல் சூழலையும் தேவைக்கு ஏற்ப விளக்கும் - எடுத்துச் சொல்லும் பான்மை - சுவை கூடாமலும் குறையாமலும் தேவையான அளவு மட்டும் சொல்லப்பெறும் விதம் இவையெல்லாம் திலகர் வரலாற்றுத் தொடரின் சிறப்புகளாகக் குறிக்கத்தக்கன.

**திலகரின் ஆளுமையின் வீச்சு எள்ளளவும் குறையாதவாறு அவருடைய கருத்துகளை எடுத்துரைக்கும் தன்மை - அன்றைய அரசியல் சூழல்பற்றியோ, திலகர் பற்றியோ, பிறிதோ - எதுவாக இருந்தாலும் அது பற்றிய தம்முடைய கருத்தைக் கூறும்போது வெளிப்படும் தெளிவு - இவையெல்லாம் வ.உ.சி.யின் புலப்பாட்டுத் திறனுக்குச் சான்று பகர்வன.**

கோக்கலே மிதவாதத் தலைவர்; திலகரின் சீடரான வ.உ.சி யோ தீவிரவாதி; கோக்கலேயைக் கடுமையாக எதிர்த்தவர். கோக்கலே மறைந்த அன்று புனாவில் இருந்தும் - திலகர் வற்புறுத்தியும் - இறுதி அஞ்சலிக்குச் செல்ல மறுத்தவர்(Reminiscences of Lokamanya Tilak,Vol.III, P.160) இருந்தாலும் திலகர் வரலாற்றை எழுதும்போது பல இடங்களில் கோக்கலேயின் சிறப்புகளை மறவாமல், தயங்காமல் குறித்துள்ளார். சான்றுக்கு ஒன்று காணலாம். ''மிஸ்டர் கோக்கலே தலைவரா யிருந்து நடத்திய காசிக் காங்கிரசுக்குத் திலகர் சென்றார். தலைவருடைய உபன்னியாசம் மிகமிக ஊக்கத்தை அளிக்கக்கூடிய அக்காலத்து உபன்னியாசங்களில் ஒன்றாயிருந்தது. லார்டு கர்சனுடைய நிர்வாகத்தைக் காங்கிரஸ் தலைவர் காரமாகக் கண்டித்ததுபோல வேறு எவரும் கண்டித்ததில்லை''(வீரகேசரி, 11.3.34).

வ.உ.சி. பயன்படுத்தியுள்ள தலைப்புகள் படிப்போரைக் கவர்ந்து மனத்தில் பதியும் வண்ணம் அமைந்துள்ளன. அவை அறியத் தக்கன. சான்றுக்குச் சில தலைப்புகள் கீழே தரப்பெற்றுள்ளன·

'அதைரியமடைந்த மக்களின் உள்ளத்தில்
ஆண்மையைப் புகுத்தின அருங்கிளர்ச்சி'

(24.9.33)

'மகாராஷ்டிர ஜனங்களை உயிர்ப்பித்த உற்சவங்கள்'

(8.10.33)

'காங்கிரசின் துயிலைக் கலைத்த கர்சனின் ஆட்சி'

(11.3.34)

அரசியல் தொடர்பான வ.உ.சி.யின் சொல்லாக்கங்களாக அரிய - அழகிய சொல்லாட்சிகள் தொடர் நெடுக இடம்பெற்றுள்ளன அவற்றுள் சிலவற்றையேனும் குறித்தல் தகும்.

'இரவல் சுவிசேஷங்கள்'(16.7.33)

'இராஜீயத் தற்கொலை'(11.3.34)

'அமிதவாத அலை'(11.3.34)

கர்சனின் ஆட்சிபற்றிய காங்கிரசின் அறிக்கை, திலகரின் முதல் சிறைவாசத்தின்போது சுரேந்திரநாத் பானர்ஜி சிறையில் இருந்த திலகரின் பார்வைக்கு அனுப்பிய காங்கிரசின் தீர்மானம், திலகரின் விடுதலைக்கான மாக்ஸ் முல்லரின் முயற்சி, சூரத் காங்கிரசில் மேடையில் திலகரை அடிக்க முற்பட்டபோது உடனிருந்த கோக்கலே அதைத் தடுத்தது, சூரத் காங்கிரசில் ஏற்பட்ட குழப்பங்களுக்குப் பிறகு, திலகர் எழுதிக் கொடுத்த ஒப்பந்தம், சூரத் காங்கிரசு மாநாடு முடிந்த பிறகு 'கேசரி' இதழில் திலகர் வெளியிட்ட கடிதம் - போன்ற மிகப் பலவாய குறிப்புகளைக் கொண்டதோர் **வரலாற்று ஆவணமாகவும் திகழ்கிறது வ.உ.சி.யின் 'திலக மகரிஷியின் வரலாறு'.**

# 4
# மொழிபெயர்ப்புகள்

**வ.**உ.சி.யின் தமிழ்ப் பணிகளில் முதன்மையானவற்றில் ஒன்றாகப் பலராலும் கருதப்படுவது அவருடைய மொழிபெயர்ப்புப் பணியாகும். அம்மொழிபெயர்ப்புகளின் மூலம் வ.உ.சி.யை மொழி பெயர்ப்பாளராக அறிமுகம் செய்வதே இப்பகுதியின் நோக்கம்.

மேலைநாட்டுத் தத்துவ அறிஞர்களுள் ஜேம்ஸ் ஆலனே வ.உ.சி.யை மிகவும் கவர்ந்தவர் அவருடைய படைப்புகளில் தம்மை மறந்தவரான வ.உ.சி. அவற்றை மொழிபெயர்த்துத் தமிழ் மக்களுக்கு அளிக்க விரும்பினார். ''ஜேம்ஸ் ஆலனின் நூல்கள் பலவற்றைப் படிக்கும் பாக்கியம் எனக்கு 1905ஆம் வருஷம் கிடைத்தது. அவற்றின் அருமை பெருமைகளைக் கண்டு யான் ஆச்சரியம் அடைந்து அவற்றையெல்லாம் தமிழில் மொழிபெயர்த்துத் தமிழ் மக்கள் படிக்கும்படிச் செய்ய வேண்டும் என்று கருதினேன்'' (வ.உ.சி., சாந்திக்கு மார்க்கம் - முதல் பதிப்பு, முகவுரை, ப.7).

1905லேயே ஜேம்ஸ் ஆலனின் நூல்களைத் தமிழில் மொழிபெயர்க்க வேண்டும் என்ற ஆர்வம் வ.உ.சி.க்கு இருந்தது என்றாலும் அரசியல் பணிகளால் அவருடைய எண்ணம் நிறைவேறவில்லை 1908இல் கைது செய்யப் பெற்றுச் சிறையில் இருக்க நேர்ந்தபோதுதான் அவற்றை மொழிபெயர்க்கும் வாய்ப்பு அமைந்தது (வ.உ.சி., மனம்போல வாழ்வு - முதல் பதிப்பு, நூன்முகம், ப.6)

ஜேம்ஸ் ஆலனின் படைப்புகளில் மூன்றை மட்டுமே வ.உ.சி. முழுமையாக மொழிபெயர்த்துள்ளார்.

> *அந்நூல்களில் சிறிய அளவினவாகிய இரண்டுநூல்களை 'மனம்போல வாழ்வு', 'அகமே புறம்' என்னும்பெயர்களோடு மொழிபெயர்த்துஅச்சிட்டுவெளிப்படுத்தினேன்....'வலிமைக்கு மார்க்கம்', 'சாந்திக்கு மார்க்கம்'(ஆகியவற்றையும்) அச்சிட்டு வெளிப்படுத்தினேன்....*

வேறு இரண்டு நூல்களைப் 'பேரின்பமார்க்கம்', 'ஊழை வெல்வதற்கு உபாயம்' என அரைகுறையாக மொழி பெயர்த்து வைத்தேன்.
(அவை இரண்டையும்) விரைவில் பூரணமாக்கி அச்சிட்டு வெளியிட எத்தனித்துள்ளேன்

**(சாந்திக்கு மார்க்கம், முகவுரை, பக்.7- 8)**

என்று 1934இல் வ.உ.சி. குறிப்பிட்டுள்ளார். 1936 நவம்பரில் அவர் காலம் முடியும் வரையில் அந்நூல்கள் வெளிவரவில்லை. அவர் மறைவுக்குப் பிறகும் அவை வெளி வந்ததாக அறிய முடியவில்லை. எனவே, இங்கு வ.உ.சி.யால் வெளியிடப்பெற்ற நான்கு நூல்கள் மட்டுமே அறிமுகம் செய்யப்பெறுகின்றன (ஜேம்ஸ் ஆலனின் ஒரு நூலின் இரு பகுதிகள் வலிமைக்கு மார்க்கம், சாந்திக்கு மார்க்கம் என இரு நூல்களாக வ உ சி யால் மொழிபெயர்க்கப் பெற்றன).

**மனம் போல வாழ்வு (1909)**

வ உ.சி. கோவைச் சிறையில் இருந்தபோது(1908) ஜேம்ஸ் ஆலனின் As a Man Thinketh என்னும் நூலை 'மனம் போல வாழ்வு' என்று தமிழில் மொழிபெயர்த்தார். அதுவே, அவர் மொழிபெயர்த்த முதல் நூலாகும்.

1909 ஆம் ஆண்டு அந்நூல், வ.உ.சி.யின் நண்பரான சுவாமி வள்ளிநாயகத்தால் சென்னையில் வெளியிடப்பெற்றது (மனம் போல வாழ்வு, நூலின் முதல் பக்கம்). 1912இல் விடுதலையான வ.உ.சி. சென்னையில் தம் வாழ்க்கையைத் தொடங்கினார். சென்னை வாழ்க்கையில் அவருடைய தமிழ்ப் பணிகளுக்குப் பல நிலைகளிலும் துணை நின்றவர் திருமணம் செல்வக் கேசவராயர் அவருடைய உதவியுடன் மனம் போல வாழ்வு திருத்தங்களுடன் 1916இல் இரண்டாவது பதிப்பாக வந்தது.

'மனம் போல வாழ்வு' பற்றிய விளம்பரம் ஒன்று அன்றைய சுதேசமித்திரன் நாளிதழில் வெளிவந்துள்ளது (12.3.1909, ப. 6). அது பின்வருமாறு அமைந்துள்ளது.

**மனம் போல வாழ்வு**
**இஃது**
**தூத்துக்குடி**

ஸ்ரீ வ உ.சிதம்பரம் பிள்ளை அவர்கள் கோயம்புத்தூர் ஜெயிலில் வைத்து மொழிபெயர்த்த நூல். இந்நூல் மனோசக்தியின்

இரகசியத்தை வெளிப்படுத்தலால் சகல சித்திகளும் பெறுதற்கு இன்றியமையாததாகும்.

**இந்நூலிலுள்ள சில வாக்கியங்கள் வருமாறு:**

*தானே தனது ஒழுக்கத்தை ஆக்குபவன்; தானே தனது வாழ்க்கையைத் திருத்துபவன்; தானே தனது விதியை ஏற்படுத்துபவன்.*

*எவன் வருந்துதற்குப் பின்னடையவில்லையோ அவன் செய்து முடித்தற்கு முழு மனங்கொண்டிருக்கும் காரியத்தைச் செய்து முடிப்பதில் ஒரு பொழுதும் தவறமாட்டான்.*

*துன்பம் எப்பொழுதும் எவ்வழியிலாவது சென்ற பிசகான நினைப்பின் காரியம்*

*சரீரம் மனத்தின் வேலைக்காரன்*

*சரீரத்தின் வியாதிகளை நீக்குதற்கு மனோ உற்சாகமுள்ள நினைப்புக்குச் சமமான வைத்தியனில்லை*

*வாழ்க்கையாகிய சமுத்திரத்தில் சுகம் என்னுந் தீவுகள் புன்சிரிப்புச் செய்துகொண்டிருக்கின்றன*

இந்த விளம்பரம், ஜேம்ஸ் ஆலன் நூலின் சிறப்பையும் வ.உ.சி.யின் மொழிபெயர்ப்பின் தன்மையையும் வாசகர்கள் எளிதில் புரிந்து கொள்ளும் விதத்தில் அமைந்துள்ளது. இதில் மேற்கோளாக எடுத்தாளப்பட்டுள்ள வ.உ.சி யின் வரிகள் அவருடைய வெளிப்பாட்டுத் திறனுக்குத் தக்க சான்றுகளாக அமைகின்றன.

''தானே தனது ஒழுக்கத்தை ஆக்குபவன், தானே தனது வாழ்க்கையைத் திருத்துபவன், தானே தனது விதியை ஏற்படுத்து பவன், எவன் வருந்துவதற்குப் பின்னடையவில்லையோ அவன் செய்து முடித்தற்கு முழு மனங்கொண்டிருக்கும் காரியத்தைச் செய்து முடிப்பதில் ஒருபொழுதும் தவறமாட்டான்'' என்பன போன்ற வ.உ சி.யின் தமிழ் ஆளுமையைப் புலப்படுத்தும் அழகிய சொற்றொடர்களைச் சேர்த்து நூலின் சிறப்பை வாசகர்களுக்குப் புரிய வைப்பதோடு, விருப்பத்தோடு படிக்கவும் தூண்டும் உத்தி இந்த விளம்பரத்தின் தனிச் சிறப்பு.

**அகமே புறம் (1914)**

இந்நூல் ஜேம்ஸ் ஆலனின் **அகத்திலிருந்து புறம்** என்று பொருள்படும் பெயரினையுடைய ஆங்கில நூலின் (out from the heart) மொழிபெயர்ப்பு. இந்நூலில் இடம்பெற்றுள்ள முதல் மூன்று கட்டுரைகள் **ஞானபாநு** இதழில் வெளிவந்தவை சுப்பிரமணிய சிவம் நடத்திய இதழான ஞானபாநுவில் இடம்பெற்ற அக்கட்டுரைகள் பற்றிய விவரம் கீழே தரப்பெற்றுள்ளது.

அகமும் வாழ்வும் - ஆகஸ்டு 1913

மனத்தின் தன்மையும் வன்மையும் - செப்டம்பர் 1913

சுபாவத்தை ஏற்படுத்துதல் - அக்டோபர் 1913

இக்கட்டுரைகள் முதல் பதிப்பில் அப்படியே சேர்க்கப் பெற்றுள்ளன. பின்னர், திருத்தங்கள் செய்யப்பெற்று இரண்டாம் பதிப்பில் இடம்பெற்றுள்ளன.

இந்த நூலுக்கும் சுதேசமித்திரனில் விளம்பரம் வந்துள்ளது.

> *இது ஸ்ரீமான் வ.உ.சிதம்பரம் பிள்ளையவர்கள் கோயமுத்தூர் சிறை வீட்டிலிருந்து இயற்றிய இரண்டாவது தமிழ்நூல். இது லௌகிக உன்னத நிலையையும் வைதிக உன்னத பதவியையும் சுலபமாக அடையச் செய்யும் மார்க்கங்களை வரிசைப்படுத்தித் தெளிவாகக் கூறுகிறது. இதனைக் கற்றுணர்ந்து இதில் கூறியுள்ள மார்க்கங்களில் ஒழுகுபவர் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கையும் ஒருங்கே இம்மையில் அடைவரென்பது திண்ணம்.*

**(சுதேசமித்திரன், வாரம் மும்முறை, 6.10.1915)**

வெறும் விளம்பரமாக மட்டும் இல்லாமல் 'அகமே புறம்' பற்றிய ஒரு சிறிய அளவிலான மதிப்பீடாகவும் இது அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது

**வலிமைக்கு மார்க்கம் (1916)**

ஜேம்ஸ் ஆலனின் From Poverty to Power என்னும் ஆங்கில நூலின் முதல் பகுதியாகிய, The Path of Prosperity என்பதன் தமிழாக்கமே **வலிமைக்கு மார்க்கம்** என்பதாகும்.

**சாந்திக்கு மார்க்கம் (1934)**

இது வ.உ.சி.யின் மொழிபெயர்ப்பில் வெளிவந்த நான்காவது நூலாகும். மேற்குறித்த ஆங்கில நூலின் இரண்டாவது பகுதியாகிய The Way of Peace என்பதன் மொழிபெயர்ப்பு.

'மனம் போல வாழ்வு', 'அகமே புறம்' ஆகியவற்றின் இரண்டாம் பதிப்புகளின் நேர்த்திக்கும் 'வலிமைக்கு மார்க்க'த்தின் முதல் பதிப்பின் மூலப்படியைச் செப்பமிட்டுத் தந்த விதத்தில் அதனுடைய தெளிவிற்கும் ஒருவகையில் காரணமாக அமைந்தவர் அந்நாளைய, பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திருமணம் செல்வக் கேசவராயர் என்பது மனங்கொள்ளத் தக்கது. இச்செய்தியில் இருந்து இரண்டு தகவல்களை அறிய முடிகிறது. அவை,

*வ.உ.சி., தம்முடைய படைப்புகளைத் தக்கவரிடம் காட்டிக் கருத்தை அறிவதில் ஆர்வமுடையவராகவும் அவர் கூறும் திருத்தங்களை விரும்பி ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் உடையவராகவும் இருந்தார்.*

*அவர் செய்த உதவியை, 'இன்னார் இன்னவிதமான உதவியைச் செய்தார்' என்று மனம் திறந்து நன்றி பாராட்டும் பேருள்ளம் படைத்தவராகவும் விளங்கினார்.*

தம்முடைய படைப்புகள் மேன்மேலும் செம்மையுற வேண்டும்; செறிவும் தெளிவும் எளிமையும் அவற்றின் அடிப்படைப் பண்புகளாக வேண்டும். இவை, வ.உ.சி.யின் எழுத்து வாழ்க்கையின் அடிப்படை நோக்கங்கள். அதனால்தான், உகந்தவையாயின், தகுதி நிறைந்தோரின் கருத்துகளை உடன் ஏற்றுப் பயன்படுத்தும் பேருள்ளம் அவரின் இயல்பாக இருந்தது. உரியவர் பெயரையும் மறவாமல் பதிவு செய்யும் அருங்குணம் அவருடைய தனிப் பண்பாயிற்று. இது, வ.உ.சி. என்னும் தனிமனிதரின் ஆளுமையின் ஒரு நிலை. இந்த இயல்பை - பண்பு வெளிப்பாட்டை அவருடைய தமிழ்ப் பணிகள் ஊடே நெடுகக் காண இயலும்.

### மொழிபெயர்ப்பின் நோக்கம்

புத்தரின் சரிதையான The Light of Asia என்னும் ஆங்கில நூலே, ஜேம்ஸ் ஆலனை மெய்யுணர்வில் ஆழ்த்தியது. நம் நாட்டு ஆன்மிக நூல்களைப் படிப்பதற்கு அதுவே அவரைத் தூண்டியது. **கீழ்நாடே மெய்ஞ்ஞானக் கருவூலம்** என்பது அவர் கருத்தாகும். அவர் வாக்கில் இருந்து வந்த ஒவ்வொரு வார்த்தையிலும் நமது நாட்டு நீதியும் மதக்கோட்பாடும் கலந்திருக்கும். ஒழுக்கம் ஒன்றே மெய்யுணர்வுக்கும் பிற உயர்வுகளுக்கும் அடிப்படை என்பது ஜேம்ஸ் ஆலனின் சித்தாந்தமாகும் (வ.உ.சி., **ஜேம்ஸ் ஆலனின் சரித்திரச் சுருக்கம்**, மனம்போல வாழ்வு- இரண்டாம் பதிப்பு, ப.72).

நம்மிடமிருந்து பெற்றதைத் தம் அனுபவங்களில் இழைத்து, மெருகேற்றி உலகோர் அனைவரும் அறிந்து பயன்பெறும் நோக்கில் ஆங்கிலத்தில் ஆக்கித் தந்தவர் ஜேம்ஸ் ஆலன். மெய்யுணர்வில்

ஆழ்ந்த பயிற்சியும் ஈடுபாடும் கொண்டிருந்த வ.உ.சி., அவருடைய நூல்களில் தோய்ந்தமை இயல்பான ஒன்றேயாகும் ஜேம்ஸ் ஆலனின் நூல்களைத் தமிழில் மொழிபெயர்க்கத் தாம் விரும்பிய மைக்கான காரணங்களாக இரண்டினைக் குறித்துள்ளார் வ.உ.சி. அவை அறியத் தக்கன.

> இந்நாள்வரையில் யான் வாசித்துள்ள எந்நூலும் இந்நூல் போல அரிய பொருள்களை எளிதில் கூறியிருக்க யான் கண்டிலேன். இந்நூலை யான் மொழிபெயர்த்ததற்குக் காரணம் இதுவே.
>
> **(மனம் போல வாழ்வு - இரண்டாம் பதிப்பு, முதல் பதிப்பின் முகவுரை, ப. 13)**

> தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் ஜேம்ஸ் ஆலனின் நூல்களால் நன்மை அடைய வேண்டும் என்பதே யான் அவைகளை மொழிபெயர்த்ததற்குக் காரணம்.
>
> **(வலிமைக்கு மார்க்கம் - முதல் பதிப்பு, பாயிரம், ப.vi)**

## மொழிபெயர்ப்பு-வ.உ.சி.யின் அணுகுமுறை

மொழிபெயர்ப்பு ஒருவகைக் கலை; இரு மொழிகளை இணைக்கும் பாலம். சிந்தனைப் பரிமாற்ற வாயில். "சுய படைப்பைவிட மொழிபெயர்ப்புப் பணி கடினமானதாகும். மற்றொருவருடைய கருத்தைத் தன்வயமாக்கிக் கொண்டு, தன்னை இழந்து மீண்டும் மற்றொருவராகவே மாறிக் கருத்துகளை வெளிப்படுத்த வேண்டும். சுதந்திரமான நிலை சுய படைப்பாகும். கட்டுப்பாட்டுடன் கூடியநிலை மொழிபெயர்ப்பாகும் ஆதலால், வரம்புக்குட்பட்ட நிலையில் தம் சிந்தனைகளை ஒருமுகப்படுத்தி மூல நூலாசிரியரின் கருத்தை மட்டுமே வெளியிட வேண்டும்" என்பார் மு.கு. ஜகந்நாதராஜா (மொழிபெயர்ப்பிலக்கியம், மொழிபெயர்ப்பு - பண்பும் பயனும், ப.101) மொழிபெயர்ப்பு, எத்துணைக் கடினமான பணி என்பதை இது உணர்த்தும்.

வ உ.சி.யின் மொழிபெயர்ப்புகளில் மொழிபெயர்ப்பு, மொழியாக்கம், தழுவல்நிலை ஆகிய கூறுகளைக் காணலாம். மொழி பெயர்ப்பில் தாம் பயன்படுத்தியுள்ள அணுகுமுறைகளை வ்.உ.சி. தம் முடைய முன்னுரைகளில் தெளிவுபடுத்தியுள்ளார்.

### மனம் போல வாழ்வு

> இதனை முதனூற்குச் சற்றேறக்குறைய சரியான மொழிபெயர்ப்பு என்றே சொல்லலாம்.

முதனூலில் மேற்கோளாகக் காட்டியுள்ள செய்யுள்கள் எத்தனை அடிகளைக் கொண்டுள்ளனவோ, அத்தனை அடிகளில் தமிழ்ச் செய்யுள்களை அமைத்துள்ளேன்.

மற்றைய (உரை) மேற்கோள்களுக்கு அவற்றிற்குரிய (மேற்கோள்) அடையாளங்கள் இட்டுள்ளேன்.

சில இடங்களில் முதனூலாசிரியரது கருத்துக்களை நன்கு விளக்குதற் பொருட்டுச் சிற்சில சொற்களைக் கூட்டியும் குறைத்தும் மொழிபெயர்த்திருக்கிறேன்.

இந்நூலின் அரிய பொருள்களைத் தமிழுலகம் நன்குணர்ந்து கைக்கொண்டொழுகுதல் வேண்டும் என்ற எண்ணமே என் மனத்தின்கண் முற்பட்டு நின்றமையின் நம் நாட்டில் பயில வழங்கும் வடமொழிகளை இதில் மிகுதியாகத் தொகுத்திருக்கிறேன்.

(மனம் போல வாழ்வு-இரண்டாம் பதிப்பு, முதல் பதிப்பின் முகவுரை, ப.14)

அகமே புறம்

இதனைக் கற்போர் எளிதாகக் கொள்ளுமாறு இதன் முதனூலிலுள்ள 'உயர்தர வாழ்வு' என்னும் ஓர் அதிகாரத்தை நான்கு சிறிய அதிகாரங்களாக அமைத்துள்ளேன்.

( அகமே புறம் - இரண்டாம் பதிப்பு, முதல் பதிப்பின் பாயிரம், ப.7)

வலிமைக்கு மார்க்கம்

முதனூலின் ஐந்தாவது அதிகாரத்தின் தொடக்கத்தில் கண்ட ஆங்கிலக் கதையை நம்மவரில் பெரும்பாலோர் கேட்டிருக்க மாட்டாராதலால் அக்கதையின் பெயரினை இந்நூலில் குறிப்பதால் பயனில்லை என்று கருதி அதற்குப் பதிலாகப் 'பாரதக் கதை' என்று குறித்துள்ளேன்.

முதனூலின் கருத்துக்களை நம்மவர்கள் எளிதில் உணருமாறு ஓரோர் இடங்களில் சில சொற்களைச் சேர்த்தும் சில சொற்களை விடுத்தும் இம் மொழிபெயர்ப்பை இயற்றியுள்ளேன்.

முதனூலில் கண்ட ஆங்கிலச் செய்யுட்களைத் தமிழ்ப்படுத்தி இதன்கண் சேர்த்துள்ளேன்.

இந்நூலில் நான் உபயோகித்துள்ள சில சொற்கள் குறிக்கும் பொருள்களை இதன் vii ஆவது பக்கத்தில் குறித்திருக்கிறேன்''. நான் இதுவரையில் பார்த்துள்ள இலக்கியங்களில் காணப்படாத 'எஃது' என்பது போன்ற ஒன்றிரண்டு சொற்களைப் புதியன புகுதலாக இதில் உபயோகித்துள்ளேன்.

**(வலிமைக்கு மார்க்கம் - முதல் பதிப்பு, பாயிரம், ப.V)**

### சாந்திக்கு மார்க்கம்

இந்நூல் முதல் நூலின் சரியான மொழிபெயர்ப்பு.முதல் நூலிலுள்ள பாக்களைத் தமிழ்ப் பாக்களாக்கி இந்நூலில் ஆங்காங்குச் சேர்த்துள்ளேன்.

**(சாந்திக்கு மார்க்கம் - முதல் பதிப்பு, முகவுரை, ப.8)**

தமக்கென ஒரு பாதையை வகுத்துக் கொள்ளும் வ.உ.சி., தம் வரையறைகளைத் தெளிவாக எடுத்துரைத்துச் செல்லும் முறை அவருடைய நேரிய உள்ளத்தைப் புலப்படுத்தும் தன்மையது. அவர் உருவாக்கும் புதிய மரபுகள் எல்லாம் பொருள் எளிமையையும் தெளிவையும் மையமாகக் கொண்டவை. தம் மொழிபெயர்ப்பு மக்களைச் சென்றடையவேண்டும் என்பதே வ.உ.சி.யின் நோக்கம்.

## மொழிபெயர்ப்பாளர் வ.உ.சி.

ஜேம்ஸ் ஆலன் தம் நூல்களில் கூறும் நெறிமுறைகள் உன்னதமான வாழ்க்கைக்கான வழிமுறைகள். அவற்றுள் சிலவற்றையேனும் அறிதல் தக்கது. அவை, வ உ சி மொழிபெயர்ப்பின் சிறப்புகளையும் உணர்த்தவல்லன.

### மனம் போல வாழ்வு

மனிதனது நினைப்புக்குத் தக்கவாறு அவனுடைய வாழ்வு அமைகின்றது. மனிதன் எதை நினைக்கின்றானோ அதுவே ஆகிறான். இதுதான் வாழ்வின் உயிர்நிலைத் தத்துவம். எண்ணம் போல வாழ்வு என்பது அடிப்படை உண்மை.

செயல்கள் நினைப்பின் மலர்கள்; இன்பமும் துன்பமும் அதன் கனிகள். இவ்வாறாக, மனிதன் இவைகளை விளைவித்துக் கொள்கிறான்.

மனம் போல வாழ்வு நூலில் 'நினைப்பும் ஒழுக்கமும்' என்னும் பகுதியில் (இரண்டாம் பதிப்பு, ப.18) காணப்பெறும் உண்மை இது

இதைத் தொடர்ந்து ஜேம்ஸ் ஆலன் மனிதன், நினைப்பின் மூலமும் முடிவும் வடிவும் வெளிப்பாடுமாக அமைகிறான் என்பதை வலியுறுத்துவதற்குக் கவிதை ஒன்றைப் படைத்துத் தருகிறார் வ.உ.சி. அதனைத் தமிழ்க் கவிதை வடிவிற்குக் கொண்டு வரும் சிறப்பு குறிக்கத்தக்கது.

மனமெனும் நினைப்பே நமையாக் கியது
நினைப்பால் நாம்நம் நிலைமையை உற்றனம்
ஒருவன் நினைப்புக் கருமறம் பற்றிடின்
எருதுபின் உருளைபோல் வரும்நனி துன்பமே
ஒருவன் நினைப்புத் திருஅறம் பற்றிடின்
தன்னிழல் போல மன்னும் இன்பமே.

ஜேம்ஸ் ஆலன் பயன்படுத்தும் Evil Thoughts என்பதை 'நினைப்புக் கருமறம்' என்றும் Purity of Thoughts என்பதை 'நினைப்புத் திரு அறம்' எனவும் மொழிபெயர்த்துள்ளமை வ.உ.சி.யின் சொல்லாக்கத்திறன் காட்டும்.

> மேம்பாடும் தெய்வத் தன்மையும் வாய்ந்த ஒழுக்கம், கடவுளின் கிருபையாலாவது தற்செயலாயாவது உண்டானதன்று; அது நேர்மையான நினைப்புகளை இடைவிடாது நினைத்து வந்ததன் நேரான பயனாகவும் தெய்வத் தன்மை வாய்ந்த நினைப்புகளோடு நீடித்த காலம் விருப்பத்தோடு பழகி வந்த பழக்கத்தின் நேரான காரியமாகவும் உண்டானதே.

**(மனம் போல வாழ்வு, ப.18)**

மேன்மையான ஒழுக்கம் என்பது, கடவுளின் அருளோ தற்செயலான நிகழ்வோ அன்று. நேர்மையான, உன்னதமான எண்ணங்களைத் தொடர்ந்து நினைந்து, நினைந்து அவற்றிலேயே ஒன்றி, அவையேயாகி நிற்கும்போது அவற்றின் விளைவாக அமைவதே அது என்னும் ஜேம்ஸ் ஆலனின் கருத்தை எளிய தமிழில் தெளிவுபட எடுத்துரைப்பது வ உ.சி.யின் சிறப்பு.

நினைப்பிற்கேற்ற வாழ்வு என ஜேம்ஸ் ஆலன் விளக்கிச் செல்லும் பகுதிகளுக்கு மேலும் தெளிவு உண்டாக்க வ.உ.சி 'விதை ஒன்று போட்டால் சுரை ஒன்று முளையாது,' எட்டியிலே கட்டி மாம்பழம் பழுக்காது,' 'தினை விதைத்தவன் தினையறுப்பான்; வினை விதைத்தவன் வினையறுப்பான்' என்பன போன்ற தமிழ்ப் பழமொழிகளை இடையில் இணைக்கிறார் இது, கனமான செய்திகளாயினும் அவை மக்களைச் சென்றடைய வேண்டும் என்னும் அவருடைய நோக்கத்தைப் புலப்படுத்தும்.

**அகமே புறம்**

அகவலிமையையும் புறவலிமையையும் ஒருங்கு வளர்த்து மேன்மையடைதற்குக் கடைபிடிக்க வேண்டிய நன்னெறிகளாக ஜேம்ஸ் ஆலன் குறிப்பனவற்றை மூல அழகு குன்றாமல் வ.உ.சி. தொகுத்து உரைக்கும் நயத்திற்குப் பின்வரும் பகுதிகள் சான்றுகளாக அமையவல்லன

> *மனம் தளர்ச்சியின்றி வாழ்க்கை நிலைமையாகிய வஸ்திரத்தை நெய்து கொண்டிருக்கிறது; நினைப்பு நூல்; நல்ல செயல்களும் தீய செயல்களும் பாவும் ஊடும்; ஒழுக்கம் வாழ்வாகிய தறியில் நெய்யப்படும் வஸ்திரம். மனம் தான் நெய்த வஸ்திரத்தால் தன்னை உடுத்திக் கொள்கிறது.*
>
> **('மனத்தின் தன்மையும் வன்மையும்', அகமே புறம், ப.21)**

ஜேம்ஸ் ஆலனின் ஆழ்ந்த செய்தியைத் தம் எளிய சொல்லாட்சியால் இயல்பாக விளக்க முடிவது வ.உ.சி.யின் பண்பாகும். 'தன்னை உடுத்திக் கொள்கிறது' என்பது அரிய ஆக்கம்.

> The Loose-Liver cannot escape sorrow and Pain.
> The undisciplined mind falls, weak and helpless, before the tierce onslaught of passion
>
> (Out From The Heart-Four Popular Books, P.79)

என்னும் ஜேம்ஸ் ஆலனின் கருத்தை,

> *ஒழுங்கீனமாக வாழ்கின்றவன் துன்பத்திலிருந்தும் துக்கத்திலிருந்தும் தப்ப முடியாது. ஒழுங்கு செய்யப்படாத மனம் காமக் குரோதத்தின் பயங்கரமான யுத்தத்தில் பலமிழந்து துணையற்று வீழ்கின்றது*
>
> **('வேண்டுகோள்', அகமே புறம், ப.75)**

என்று மொழிபெயர்ப்பதோடு நிறைவடையாமல், ''ஆன்றோரும் 'இழுக்கத்தின் எய்துவர் எய்தாப்பழி' என்று கூறியுள்ளார்'' என வள்ளுவரையும் (ஒழுக்கமுடைமை, குறள் 7) நினைவூட்டி, மேலும் எளிமையாகப் புரியும் விதத்தில் எழுதியிருப்பது வ.உ.சி.யின் அணுகுமுறையைப் புலப்படுத்தும்.

Indolence - சோம்பல், Self-Indulgence - மீதூண் போன்ற பொருள் பொதிந்த சொல் அமைவுகளை அகமே புறம் நூலில் காணலாம் ('உயர்தர வாழ்வு', ப 41).

**Slander, Gossip and idle conversation, Abusive and un kind speech, Levity or irreverent speech, captiousness or fault finding speech**

(Out From The Heart, p.61)

என்ற பேச்சு பற்றிய பல்வகைப் பொருள்தரும் சொற்களைப் 'புறங்கூறல்', 'பயனில சொல்லல்', 'நிந்தித்தல்', 'புன்மொழி பகரல்', 'குதர்க்கம் பேசல்' என வேறுபடு பொருள் புலப்பாடு தோன்ற வ.உ.சி. மொழியாக்கம் செய்துள்ளமை சிறப்பாக எடுத்துக் காட்டத்தக்கது.

'மனோநிலைமைகளும் அவற்றின் காரியங்களும்' என்னும் கட்டுரையில் Hatred என்பதை 'வெறுப்பு' என்றும் Self - Slavery என்பதைத் 'தனக்கடிமை' என்றும் Folly என்பதை 'மடமை' என்றும் Mortification of Spirit என்பதை 'ஆன்ம அழிவு' என்றும் Self-Conquest என்பதைத் 'தன்னை வெல்லல்' என்றும் Insight என்பதை 'அகப்பார்வை' என்றும் மொழிபெயர்த்துத் தெளிவான - நேரான பொருள் தரும் சொல்லாக்கங்களைப் படைத்துள்ளார் வ.உ.சி. (Out From The Heart, pp. 75 - 76; அகமே புறம், பக். 68-70).

*முதலில் யுத்தம்; முடிவில் வெற்றி. முதலில் வேலைமுடிவில் ஓய்வு. முதலில் எளிமை; முடிவில் வலிமை. தொடக்கத்தில் தாழ்ந்த வாழ்வு; யுத்தத்தின் சந்தடி, யுத்தத்தின் குழப்பம்; இறுதியில் உயர்தர வாழ்வு, மௌனம், சாந்தி.*

**('வேண்டுகோள்', அகமே புறம், ப.76)**

நுட்பமான செய்திகளையும் எளிமையாகவும் சுவை குன்றாமலும் எடுத்துரைக்கும் வ.உ.சி யின் மொழிபெயர்ப்பு நடையின் சிறப்பிற்கு மேற்கண்ட பகுதியைச் சான்றாகக் கொள்ளலாம்.

**வலிமைக்கு மார்க்கம்**

இதில் துன்பக் கடலைக் கடக்கும் நெறிகள் வலியுறுத்தப் பெறுகின்றன. 'உங்கள் நினைப்புகள் எவையோ அவையே நீங்கள்' என்ற ஆலனின் கோட்பாட்டினை விளக்க, ''நமது நிலைமைகள் எல்லாம் நமது நினைப்புகளையே ஆதாரமாகக் கொண்டுள்ளன; அவையெல்லாம் நமது நினைப்புகளாலேயே செய்யப்பட்டுள்ளன'' என்ற புத்த தத்துவம் எடுத்துக்காட்டப் பெறுகிறது

*தன்மீது தான் இரக்கம் கொள்ளுதலைப் பார்க்கினும் தாழ்ந்ததும் அவமதிப்பைத் தரத்தக்கதும் ஆன்மாவைக் கெடுக்கத் தக்கதும் வேறொன்றில்லை.*

**('விரும்பாத நிலைமைகளை விலக்கும் வழி', வலிமைக்கு மார்க்கம், முதற்பதிப்பு, ப. 36)**

*உண்மையான பலத்தையும் நிலையான சாந்தியையும் அடைய வேண்டினால், தன்னை அடக்குதலையும் தன்னை ஆள்தலையும் தன்னைச் சுத்தப்படுத்துதலையும் தவிர வேறு மார்க்கமே இல்லை.*

**('நினைப்பின் மௌன வலிமை', மேலது, ப. 61)**

கழிவிரக்கத்தைக் காட்டிலும் கொடியது இல்லை; தீய எண்ணங்கள் என்னும் குப்பைகள் சேர்ந்துவிடாமல் எப்போதும் தூய்மையாக இருக்குமாறு மனத்தை ஒருமுகப்படுத்துதல் என்னும் உயரிய நெறிகளைப் படிப்பவர் எளிதில் உணர்ந்து பின்பற்றும் முறையில் வ உ.சி பயன்படுத்தும் 'அவமதிப்பைத் தரத்தக்கது', 'தன்னைச் சுத்தப் படுத்துதல்' என்பன சிறப்பாகக் குறிக்கத்தக்கன.

வலிமைக்கு மார்க்கத்தில் தாம் பயன்படுத்தியுள்ள சில வட சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களையும் பொருள் விரிவுகளையும் தனித்துக் குறித்துள்ளார் (ப 7). அவை அறியத் தக்கன

| | | |
|---|---|---|
| ஆன்மா | - | பேரறிவு ('யான்', 'எனது' எனக் கருதாது உலக நன்மையையே கருதுவது) |
| ஜீவன் | - | சிற்றறிவு 'யான்', 'எனது' எனக் கருதித் தனது நன்மையையே கருதுவது |
| பரோக்ஷ ஞானம் | - | கேள்வி அல்லது கல்வி மூலம் அடையும் அறிவு |
| அபரோக்ஷ ஞானம் | - | மனம் அல்லது பொறிவழி காணப்படும் அறிவு |
| துன்பம் | - | பொறியால் வரும் வருத்தம் |
| துக்கம் | - | மனவருத்தம் |
| இன்பம் | - | பொறிக்களிப்பு |
| சுகம் | - | மனக்களிப்பு |

'இன்பம் - பொறிக்களிப்பு', 'சுகம்-மனக்களிப்பு' என்று பொருள் வேறுபாடு உணர்த்தும் போக்கில் வ.உ.சி. உருவாக்கியுள்ள சொல்லாக்கங்கள் நினைந்து மகிழத்தக்கன.

### சாந்திக்கு மார்க்கம்

உயர்வாழ்விற்குரிய வழிமுறைகளில் பின்னும் சிந்திக்க வேண்டியவை சுயநலமற்ற அன்பு, இறையுடன் ஐக்கியமாதல்,

தொண்டு செய்தல் ஆகியவையாம் தடையற்ற அறிவு, மாசற்ற ஞானம், இறவாத அன்பு இவற்றின் வழியே முழுமையான அமைதி கிட்டும் என்பதைச் **சாந்திக்கு மார்க்கம்** தெளிவுபடுத்துகிறது. இந்நூலின் பொருட்பிழிவாய் அமையும் கருத்து **அன்பின் வழியது உயிர்நிலை** என்பதாம் அன்பின் வழியே பெறுவது அமைதி, அமைதி வாழ்வே இறைமை வாழ்வு; இறைமை வாழ்வே என்றும் வேண்டுவது.

ஆன்மிகச் சிந்தனைகளைப் பிறமொழியில் இருந்து பெயர்க்கும் நிலையில், மிகுந்த பொறுமையும் நிதானமும் அளவிறந்த பயிற்சியும் தவிர்க்க இயலாத தேவைகளாகின்றன அப்பண்புகள் கைவரப் பெற்றவரான வ.உ.சி. ஜேம்ஸ் ஆலனின் நூல்களின் மொழி பெயர்ப்பில் அவரோடு தம்மையும் வெளிப்படுத்தியுள்ளார் சாந்திக்கு மார்க்கத்தின் பின்வரும் பகுதி வ.உ.சி. என்னும் மொழி பெயர்ப்பாளரை இன்னும் ஒருபடி மேலே சென்று புரியவைக்கும்.

> *நீங்கள் புறப்படுங்கள்; வாழ்க்கையின் காய்ச்சலையும் எரிச்சலையும் விட்டு வெளியே வாருங்கள்; 'யான்' என்பதன் சுடுகிற வெப்பத்தைவிட்டு வெளியேறுங்கள்; உங்களை அமைதிப்படுத்தி, புதுப்பித்து, மீட்டும் சாந்தியின் காற்றுக்குள் வீசுகின்ற அகத்தின் அமைதியிடத்துள் புகுங்கள்.*
>
> *பாவமும் துன்பமுமாகிய புயல்களைவிட்டு வெளியே வாருங்கள். சாந்தியாகிய முத்திவீடு அவ்வளவு சமீபத்தில் இருக்கும்போது, ஏன் தொந்தரைப்படுகின்றீர்கள்; புயலில் சுழல்கின்றீர்கள்.*
>
> *தன்னை நாடுதலையெல்லாம் விட்டுவிடுங்கள்; தன்னை விட்டு விடுங்கள்; உடனே கடவுட் சாந்தி உங்களுடையதாய் விட்டது.*

**( 'பூரண சாந்தியை அடைதல்', சாந்திக்கு மார்க்கம், பக். 116-117)**

''வாழ்வியல் கோட்பாடுகள், அடிப்படை ஒழுக்கங்கள், மெய்ப்பொருள் உண்மைகள் இவையெல்லாம் இன, மொழி, சமய எல்லைகட்கு அப்பாற்பட்ட பொதுமைக் கருத்துப் பொருண்மைகள். எந்த மொழியில் அவற்றைப் புலப்படுத்தினாலும் அடிப்படையாக அமையும் நோக்கம் உயர்வுற வாழ்தலே ஜேம்ஸ் ஆலனின் கோட்பாடுகள் மனிதநல மேம்பாட்டுக் கோட்பாடுகள். அவர் நெறிமுறைகள். மானுடம் பயனுற வாழ்வதற்கான நெறிமுறைகள். அவர் காட்டும் மெய்ஞ்ஞானம், வாழ்வுடன் இணைந்த உயர்ஞானம் புத்தரும் ஏசுவும் மானுடம் உய்யக் காட்டிய தத்துவப் பொருண்மைகளின் சாற்றினை வடித்து ஆங்கிலத்தில் அமுதமாய்த்

தந்தார் ஆலன்'' (தி. லீலாவதி, தமிழ் தந்த வ.உ.சி , பக்.78-79) தமிழினம் மேன்மையடைய தமிழ்த் தேனில் அதனைக் குழைத்து மேலும் சுவையூட்டி வழங்கியுள்ளார் வ.உ.சி.

உண்மைத் தன்மை, சரிமைத்தன்மை, தழுவல் தன்மை, படைப்பாக்கத் திறன் ஆகிய மொழிபெயர்ப்புக்குரிய அடிப்படைக்கூறுகளை வ.உ.சி.யின் நூல்களில் காணமுடிகிறது. மூல மொழியின் உணர்வையும் கருத்தையும் தாய்மொழியில் உயிர்பெறச் செய்வது எளிய செயலன்று. மூல மொழியில் புலமையும் இலக்கு மொழியில் வல்லமையும் உடையார்க்கே அது இயலும். வ.உ சி.யின் அழுத்தமான ஆங்கிலப்புலமை, தாய்மொழித் திறன் இரண்டும் இங்குச் சிறப்புறச் செயற்பட்டுத் தமிழ் மொழிக்கு வளமான மொழியாக்கப் படைப்புகளைத் தரத் துணைநின்றன.

## மதிப்புரைகள்

வ.உ.சி.யின் மொழிபெயர்ப்பு நூல்களுக்கு மதிப்புரைகள் பலவாக வந்துள்ளன இரு நூல்களின் மதிப்புரைகள் மட்டும் அவற்றின் இன்றியமையாமை கருதி இங்குக் குறிக்கப் பெறுகின்றன.

## மனம் போல வாழ்வு

> இதன் முதனூல் எழுதியவர், அன்னிய தேசத்தாராயினும் நமது தேசத்து வேதாந்த சாஸ்திரத்தின் உண்மைகளை நன்கு தெளிந்துணர்ந்த அறிஞர். மொழிபெயர்த்தவருடைய மஹிமையைப் பற்றி நான் எழுதத் தகுதியுடையவனில்லை. அறிவிலே தெளிவும் நெஞ்சிலே உறுதியும் கொண்டு வாழ்நாளைப் பொருளும் பயனும் உடையதாக்க விரும்பும் தமிழர்களெல்லோரும் இந்தப் புஸ்தகம் ஒன்று வாங்கி எப்போதும் திரும்பத் திரும்பப் படித்து வரவேண்டும்.
>
> **( மெய்யறம் - முதல் பதிப்பு, ப.III)**

வ உ.சி.யின் 'மனம் போல வாழ்வு' நூலுக்கான மதிப்புரையான இதை எழுதியவர் பாரதியார். 'அறிவிலே தெளிவும் நெஞ்சிலே உறுதியும் கொண்டு வாழ்நாளைப் பொருளும் பயனும் உடையதாக்க விரும்புவோர்' படிக்க வேண்டிய நூல் என்னும் பாரதியாரின் கருத்து நூலின் தகுதிப்பாட்டை உணர்த்தும்.

> இதன் தமிழ்நடையும் சொற்களும் மிக இனிமையாகவும்தெளிவாகவும் மனத்தைக் கவரத் தக்கனவாகவும்இருக்கின்றன. இந்நூலை இயற்றியதற்காக

*வ.உ.சிதம்பரம் பிள்ளை அவர்களுக்குத் தமிழுலகம் மிகவும் கடன்பட்டுள்ளது.*

**(தென்னிந்தியா மெயில் இதழின் மதிப்புரை, அகமே புறம் - இரண்டாம் பதிப்பு, ப.77)**

பாரதியார், கருத்துக்கும் 'தென்னிந்தியா மெயில்' தமிழ் நடைக்கும் முதன்மை தந்து எழுதியுள்ளமை கருத்து நலம், நடை நலம் இரண்டானும் நூல் தனித்தன்மை வாய்ந்தது என்பதை நிறைவோடு புலப்படுத்தி வ.உ.சி.யின் மொழிபெயர்ப்புக்குப் பெருமை சேர்த்துள்ளது

**அகமே புறம்**

*அகமே புறம் என்ற பெயருடன் ஸ்ரீமான் பிள்ளையவர்கள் எழுதி வெளியிட்டிருக்கும் புதிய நூல், ஆலன் என்ற பண்டிதரின் ஆங்கில நூல் ஒன்றிலிருந்து மொழிபெயர்த்தது. எனினும், பிள்ளையவர்கள் அதிலே பரிபூரணமான தமிழ் மணத்தை யேற்றியிருக்கிறார்கள். பிறநாட்டுப் பொன்னிலே நமது முத்திரையை வைத்து நமது பொருளாக்கிவிட்டார்கள். இது மொழிபெயர்ப்பென்று பிள்ளையவர்கள் சொல்லாவிடில் நாம் இதனைத் திருக்குறளில் சில பகுதிகளுக்கு விரிவுரையென்று கொண்டிருப்போம். நோய், கீழ்மை, மிடிமை முதலிய தளைகளை இப்பிறப்பில், இன்றே, இப்பொழுதே தொலைத்து நலமெய்த வேண்டுவோர் இந்நூலின் உபதேசங்களைக் கைக்கொள்க. உடலுறுதி, அறிவு, ஆக்கம், தெளிவு, வீடு ஆகிய இன்ப நிலைகளைப் பெற விரும்புவோர்க்கு ஸ்ரீமான் பிள்ளை யவர்கள் நல்ல துணையாக அமைந்துள்ளார்கள். இது நன்று.*

**(மெய்யறம் - முதல் பதிப்பு, பக். VII-VIII)**

வ.உ.சி யின் தமிழ் நடையையும் மொழியாக்கச் சிறப்பையும் மிகத் துல்லியமாக எடுத்துரைக்கும் பாரதியாரின் இம்மதிப்புரை தனித்துவம் வாய்ந்தது.

**வாழ்வியல் எழுத்தாளர் வ.உ.சி.**

வ.உ.சி.யின் மொழிபெயர்ப்பு நூல்கள் அவற்றின் உள்ளடக்கமாக அமைந்துள்ள உண்மைகளின் அடிப்படையில் வாழ்வியல் நூல்களாக மதிக்கத் தக்கவை.

வ உ.சி. தம் வாழ்க்கை முன்னேற்ற நூல்களை வெளியிட்ட பின்னர்தான் இத்துறையில் நூல் எழுத வேண்டும் என்ற உந்துதல் பலருக்குத் தோன்றத் தொடங்கியது. தமிழில், வாழ்க்கை முன்னேற்ற

நூல்கள் பிற்காலத்தில் பல்கிப் பெருகுவதற்கு வித்திட்டவர் வ.உ.சிதம்பரனார் எனலாம். வ.உ.சி.யின் மொழிபெயர்ப்பு நூல்கள் புதியதொரு துறைக்கு வித்திட்டனவாக அமைவது அம்மொழி பெயர்ப்பு நூல்களின் மேன்மைகளைப் புலப்படுத்தும்.

இதுகாறும் கூறப்பெற்ற செய்திகள், வ.உ.சி.யின் மொழிபெயர்ப்பு ஆற்றலையும் அவருடைய மொழிபெயர்ப்பு நூல்களின் சிறப்புகளையும் மொழிபெயர்ப்பாளர் என்ற வகையில் அவருடைய பங்களிப்பையும் விளக்க வல்லன.

# 5

# உரைகள்

**திருக்குறள் உரை**

திருக்குறளுக்கு உரை கண்டவர் பலர் பரிமேலழகர், மணக்குடவர், பரிதியார், காளிங்கர் போன்ற உரையாசிரியர்களேயன்றி இருபதாம் நூற்றாண்டிலும் அறிஞர் பலர் திருக்குறளுக்கு உரை எழுதினர். திருக்குறளுக்கு எத்தனை உரைகள் வெளிவந்தாலும் அத்தனை உரைகளிலும் புதுப்புதுக் கருத்துகள் தோன்றிக் கொண்டேதான் இருக்கின்றன. வ.உ.சி. திருக்குறள் முழுமைக்கும் உரை கண்டவர். ஆனால் அவரால் அறத்துப்பாலை மட்டுமே பதிப்பித்து வெளியிட முடிந்தது இது பற்றி வ உ.சி. தம் நூலின் முன்னுரையில் கூறுகிறார்.

> எல்லாம் வல்ல இறைவன் அருளால்திருவள்ளுவ நாயனார் திருக்குறளுக்குயான் இயற்றியுள்ள உரையில், அறப்பாலுரை மூலத்துடன் அச்சாகி முற்றுப்பெற்றது. அதனை அச்சிடத் தொடங்கியகாலையில் அறப்பால், பொருட்பால், இன்பப்பால் ஆகிய மூன்றுபால்களின் உரைகளையும் மூலத்துடன் அச்சிட்டு அவற்றை ஒரே புத்தகமாகவெளியிட வேண்டுமென்று நினைத்தேன்..........அறப்பால் மூலமும் உரையும் முந்நூறு பக்கங்கள் ஆகின்றன. பொருட்பால் மூலத்திற்கும் உரைக்கும் முந்நூறு பக்கங்களுக்கு மேலாகு மென்றும், இன்பப்பால் மூலத்திற்கும் உரைக்கும் .....................................ஆராய்ச்சிக் குறிப்புகளுக்கும் ஏறக்குறைய முந்நூறு பக்கங்கள் ஆகுமென்றும் நினைக்கிறேன். அதுபற்றி, ஒவ்வொரு பாலையும் அதனதன் உரையையும் தனித்தனி ஒவ்வொருபுத்தகமாக வெளியிடத் துணிந்து, இப்பொழுது அறப்பாலையும் அதன் உரையையும் ஒரு புத்தகமாக்கி வெளியிடுகின்றேன்.

**( திருக்குறள் அறப்பால் - விருத்தியுரை,**
**கழகப் பதிப்பு, பக். 5-6)**

வ.உ.சி.யின் உரைத்திறன் பற்றிக் கணிக்கும்போது அவர் திருக்குறளின் முப்பாலுக்கும் உரை விளக்கம் கண்ட சிறப்பினைக் கூறுதல் இன்றியமையாததாகும். வ.உ.சி.யின் அறத்துப்பால் விருத்தியுரை 1935 ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பெற்றது. அடுத்த ஆண்டே வ.உ.சி காலமானதால் பிற இரு பகுதிகளுக்குரிய உரை வெளிவரவில்லை. பொருட்பால், காமத்துப்பால் ஆகியவற்றிற்கு வ.உ.சி. எழுதிய உரையின் கையெழுத்துப் படிகள் நூலாசிரியரின் பார்வைக்குக் கிடைத்தன. அவற்றையும் சேர்த்து மூன்று பகுதிகளுக்குமான உரைகளின் மூலம் வ.உ.சியின் உரைத்திறன் இங்கே விளக்கப்பெறுகிறது. திருக்குறளுக்கு உரை எழுத நேர்ந்ததற்கான காரணத்தைத் தம் உரைப்பாயிரத்தில் பின்வருமாறு குறிக்கின்றார் வ.உ சி.

> *இவ் உரைகளெல்லாம் கற்றற்குப் பெரியனவாகவும், அறிதற்கு அரிய தமிழ்நடையில் எழுதப்பெற்றனவாகவும், பிழைபட்ட மூலபாடங்கள் சிலவற்றைக் கொண்டன வாகவும், சில குறள்களுக்கு நுண்ணிய அறிவுடையார் ஏற்றுக்கொள்ள இயையாத பொருள்களை உரைப்பன வாகவும் காணப்படுகின்றன. அவைபற்றி, திருக்குறளை நேரிய பொருளோடும் பிழைகள் இன்றியும் தமிழ் மக்கள் எளிதில் கற்கும்படியாக அதற்கு ஓர் உரை இயற்றப் பல ஆண்டுகளுக்கு முன் நினைத்தேன். சில ஆண்டுகளுக்கு முன் இயற்றினேன்; இப்பொழுது அச்சிட்டு வெளியிடுகின்றேன்.*

**( அறப்பால்-விருத்தியுரை, பக்.13-14)**

வ.உ.சி.யின் திருக்குறள் உரை பாடவேறுபாடு காணல், பழைய உரை மறுத்துப் புத்துரை தருதல், நடைமுறை வாழ்க்கைக்கு இயையப் பொருள் காணல் போன்ற பல்வேறு சிறப்பு நலன்களைப் பெற்றுத் திகழ்கின்றது.

**அறத்துப்பால்**

**பாடவேறுபாடு காணல்**

தகுதி யெனவொன்று நன்றே பகுதியால்
*பாற்பட் டொழுகப் பெறின்.*

**(நடுவுநிலைமை, குறள்:111)**

பிறர்க்குச் செய்யவேண்டிய கடமைகளை நடுவாக நின்று செய்யின், அந் நடுவுநிலைமை ஓர் அறமாம் என்னும் கருத்தமைந்த குறளில், 'பகுதியால்' என்னும் சொல்லைப் 'பகுதியார்' என்று வ.உ.சி.

குறிப்பிடுகிறார். உற்றார் , நண்பர், நொதுமலர், பகைவர் ஆகிய நான்கு பகுதியினர் என்னும் பொருளமைந்த அச்சொல், முந்திய உரையாசிரியர்களால் 'பகுதியால்' என்று குறிக்கப்பெறுகிறது. அதற்கு வ.உ.சி. கூறும் பாடவேறுபாடு விளக்கம் படித்தற்குரியது.

> வேண்டுவதாய ஆர் விகுதியை விடுத்து, வேண்டாததாய ஆல் உருபை அல்லதுஅசையை ஆசிரியர் சேர்க்கமாட்டா ராகலானும் பகுதியால் என்பது ஏடுபெயர்த்தெழுதியோனால் நேர்ந்த பிழையெனக் கொள்க.
>
> **(அறப்பால் - விருத்தியுரை. பக்.65-66)**

> நத்தம்போல் கேடு முளதாகுஞ் சாக்காடும்
> வித்தகர்க் கல்லா லரிது.
>
> **(புகழ், குறள்:235)**

பிறர்க்கு ஈவோரும் பிறருக்காக உயிர் வழங்குவோரும் பெரியர் என்னும் கருத்தமைந்த இக்குறளில் 'நத்தம்போல் கேடு' என்பதை 'நத்தம் போர் கேடு' என்று வ.உ.சி. பாடம் கொள்ளுகிறார். முந்திய உரையாசிரியர்களால் 'நத்தம்போல்' என்று கொள்ளப்பெறுகிறது. அதற்கு வ.உ.சி.,

> இக்குறளின் மூன்றாஞ்சீரின் முதற்சொல்லாகிய 'உளது' என்பது 'ஆகும்' என்னும் ஆக்கச் சொல்லைக் கொண்டு நிற்றல்போல, இக்குறளின் முதற்சீரின் முதற்சொல்லாகிய 'நத்தம்' என்பதும் 'ஆம்' அல்லது 'போர்' என்பது போன்ற பொருள் தரும் சொல்லோடு சேர்ந்து நிற்றல் பொருள் கோளுக்கு இன்றியமையாததாயிருக்க, அச்சொல்லை விடுத்துப் பொருள்கோளுக்கு வேண்டாத 'போல்' என்னும் ஓரசைச் சொல்லைச் சேர்த்துப் புலவரெவரும் பாடாராகலின் 'நத்தம்போல்' என்பது ஏடுபெயர்த் தெழுதியோனால் நேர்ந்த பிழையெனக் கொள்க
>
> **(அறப்பால் - விருத்தியுரை, ப.124)**

என்று கூறுகிறார். 'நத்தம் போர் கேடு' என்பதற்கு 'ஆக்கத்தைப் போர்த்த கேடு' என்று பொருள் கூறி அதுவே சரியான பாடம் என்று விளக்கம் கூறி நிறுவுவது அவருடைய உரைத்திறனை வெளிக் காட்டுகிறது

**பழைய உரை மறுத்துப் புத்துரை தருதல்**

> இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கும்
> நல்லாற்றி னின்ற துணை.
>
> **(இல்வாழ்க்கை, குறள்:41)**

என்னும் குறளில், மூவர் என்பதற்குப் பரிமேலழகர் பிரமசாரி,

வானப்பிரத்தன், சந்நியாசி என்று பொருள் கூறுகிறார். ஆனால் வ.உ.சி. இயல்புடைய மூவர் என்பதற்குத் தாய், தந்தை, தாரம் ஆகிய மூவர் என்று புதிய உரை தரும் சிறப்பு படித்தற்குரியது.

## நடைமுறை வாழ்க்கைக்கு இயையப் பொருள் காணல்

*கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற முடுப்பதூஉ*
*முண்பதூஉ மின்றிக் கெடும்.*

(அழுக்காறாமை, குறள்:166)

என்னும் குறளுக்கு வ.உ.சி., பிறர் கொடுப்பதைக் கண்டு பொறாமைப்படுபவன் தன் ஆக்கத்திற்கு ஆதாரமாகிய சுற்றத்தையும் தன் உடையையும் உணவையும் இழப்பான் என்று பொருள் கூறுகின்றார். இதன் மூலம் கொடுப்பது அழுக்கறுப்பானுடைய சுற்றம் உடுப்பதும் உண்பதும் இன்றிக் கெடும் என்று பொருள் கூறும் பிற உரையாசிரியர்களிடமிருந்து வ.உ.சி வேறுபடுகிறார். அதற்கு அவர் கூறும் காரணம் நினைக்கத் தக்கது.

> *அவ்வாறு உரைத்தல், ஒவ்வொருவனும் செய்த வினைகளின் பயன்கள் அவனவனையே சேரும் என்ற வடமொழி தென்மொழி நூல் வழக்கிற்கு முரண்படும். அதனால் அவ்வுரை பொருந்தாது.*

(அறப்பால் - விருத்தியுரை, ப. 92)

பிறரைப் பார்த்துப் பொறாமைப்படுதலாகிய தீய வினையைச் செய்தவர் அதற்கான விளைவை அனுபவிக்க வேண்டும் என்பதுதான் பொதுவான விதி. எனவே, அந்த விளைவைத் தீயன செய்தவனுடைய சுற்றத்தார் அனுபவிக்க வேண்டியதில்லை. ஆதலின் சுற்றத்தாரையும் உடையையும் உணவையும் இழப்பான் என்று வ.உ.சி. பொருள் கூறுகிறார். நடைமுறை வாழ்க்கைக்கு இயையப் பொருள் கூறும் உரைத்திறன் இப்பகுதியில் வெளிப்படுகிறது.

'ஆய்தொறும் அறிவு' என்னும் திருவள்ளுவ மாலையின் பாராட்டுரைக் கேற்ப திருக்குறளுக்குப் பல்வேறு உரைகள் காலந்தோறும் தோன்றி வளர்ந்து வருகின்றன. இரா. சாரங்கபாணியின் 'திருக்குறள் உரை வேற்றுமை - அறத்துப்பால்' இத்தகைய உரைகளில் காணப்பெறும் உரைவேற்றுமைகளை ஆய்வு செய்யும் நோக்கில் உருவானதொரு நூலாகும்.

மணக்குடவர் காலத்திலிருந்து நம் காலம் வரை தோன்றிய உரை வேற்றுமைகளை உணர்தற்கும் குறளின் உண்மைக் கருத்து எது என அறிதற்கும் ஒரு கை விளக்கினைப் போல் வழிகாட்டும்(இரா. சாரங்கபாணி, திருக்குறள் உரை வேற்றுமை - அறத்துப்பால்,

அணிந்துரை, பக்க எண் இல்லை) இந்நூலில் இரா. சாரங்கபாணி, 'வ.உ.சிதம்பரனார் உரை தாம் படைத்துக்கொண்ட புதுப் பாடங் களாலேயே பெரும்பாலும் வேறுபடுகின்றது. **இவர் சில குறளுக்கு நல்ல விளக்கந் தந்து முன்னோர் உரையை மறுப்பர்'** என்று குறிப் பிடுகிறார்( மேலது, 'உரையாசிரியர் இயல்பு', பக்க எண் இல்லை). பல இடங்களில் இரா. சாரங்கபாணி வ.உ.சி.யின் உரை விளக்கங் களைச் சிறந்தவை என்று ஏற்றுக்கொள்கிறார். சான்றுக்குச் சிலவற்றைக் காண்போம்

**இயல்பினா னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான்**
**முயல்வாரு ளெல்லாந் தலை.**

**(இல்வாழ்க்கை, குறள்:47)**

என்னும் குறளில், 'முயல்வார்' என்னும் சொல்லுக்குப் பொருளுரைப்பதில் உரையாசிரியர் பலரும் வேறுபடுகின்றனர் 'முயல்வார்' என்பதற்கு, 'வீட்டுப்பேற்றை அடைய முயல்பவர் என்று வ.உ.சி. பொருள் கூறுகிறார் இரா. சாரங்கபாணியும் 'முயல்வார்' என்பதற்கு வீடுபேறெய்த முயலும் துறவோர் எனப் பொருள் கண்ட வ.உ.சி.யின் உரையே விழுமியது (திருக்குறள் உரை வேற்றுமை-அறத்துப்பால், ப.99) என்று குறிப்பிடுவது அவருடைய உரைத்திறனைப் புலப்படுத்துவதாக அமைந்துள்ளது. மேலும்,

**மனத்துக்கண் மாசில னாத லனைத்தற**
**னாகுல நீர பிற.**

**(அறன் வலியுறுத்தல், குறள்: 34)**

என்னும் குறளுக்கு "உள்ளத்தின்கண் குற்றமில்லாதவனாய்ச் செய்யப் படுவது அனைத்தும் அறமாம். மனத்துக்கண் குற்றமுள்ளவனாய்ச் செய்யப்படுவன துன்பம் தருவனவாகிய மறங்களாம்" என்று உரை கூறுகிறார் வ.உ.சி. அறத்திற்கு மாசின்மையாகிய பண்புமட்டும் போதாது, செயலும் வேண்டும். என்னும் கருத்தில் குற்றமில்லாத வனாய்ச் செய்யப்படுவது என்று கூறும் வ.உ.சி. உரை ஏற்புடைத்து என்பார் இரா. சாரங்கபாணி (திருக்குறள் உரைவேற்றுமை, அறத்துப்பால், ப.66).

## பொருட்பால்

பொருட்பாலிலும் பல குறட்பாக்களில் பாடவேறுபாடும் உரை வேறுபாடும் காண்கிறார் வ.உ.சி. சில இடங்களில் எளிமையான விளக்கங்களும் சில இடங்களில் சிறப்பான விளக்கங்களும் தருகிறார். சில இடங்களில் இயலின் பெயரை மாற்றுகிறார். சான்றாக

'அங்கவியல்' என்பதை 'அமைச்சியல்' என்று வ உ.சி. குறிப்பதைக் கொள்ளலாம்.

**எளிய விளக்கம்**

*நல்லார்கட் பட்ட வறுமையி னின்னாதே*
*கல்லார்க்கட் பட்ட திரு.*

**(கல்லாமை, குறள்:408)**

என்னும் குறளுக்கு, ''கல்லாதவனிடத்து செல்வம் உண்டாயின், அச்செல்வச் செருக்கினால் அவன் பிறருக்குத் தீங்கிழைப்பானாகலான் அவனது செல்வம் அவ்வாறு தீங்கிழையாத கற்றாரது வறுமையினும் இன்னாது'' என்று மிக எளிமையான விளக்கத்தைத் தருகிறார்.

**சிறப்பு விளக்கம்**

*செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வஞ்*
*செல்வத்து ளெல்லாந் தலை.*

**(கேள்வி, குறள்:411)**

என்னும் குறளுக்கு 'அகலம்' என்னும் பகுதியில் கீழ்க்கண்டவாறு சிறப்பான விளக்கம் தருகிறார்

''செவியாற் பெறுஞ் செல்வமாவது கேள்வி. கேள்வி, செல்வத்துட் சிறந்த செல்வமும் ஆம் என்றவாறு சிறந்த செல்வம் தலையாய செல்வம் ஆகாதோவெனின், ஆகுதலுங் கூடும். சிறந்த செல்வம் - சிறப்பொடு வந்த செல்வம். தலையாய செல்வம் - தலையாய பயன்களையெல்லாம் அளிக்குஞ் செல்வம். அறநெறியால் வந்த ஒரு காசும் சிறந்த செல்வமாம். ஆனால் அது தலையாய பயன்களையெல்லாம் அளிக்கும் ஆற்றல் இல்லாதது. தலையாய பயன்களாவன: இம்மையின்பம், இம்மைப்புகழ், மறுமையின்பம், வீடு. கேள்வி, நெறியால் சிறந்த செல்வமும் பயனால் தலையாய செல்வமும் ஆனமையால் அஃது அவ்விரண்டுமாம்.''

அறநெறியில் வந்த ஒரு காசும் சிறந்த செல்வம்; ஆனால் அது தலையாய பயன்களையெல்லாம் அளிக்கும் ஆற்றல் இல்லாதது என்று, 'தலையாய' என்பதற்கு நுட்பமாகப் பொருளுணர்த்தும் சிறப்பு படித்து மகிழத் தக்கது.

*தேறினுந் தேறா விடினும் அழிவின்கண்*
*தேறான் பகாஅன் விடல்.*

**(பகைத்திறம் தெரிதல், குறள்:876)**

என்னும் குறளுக்கு வ.உ.சி தரும் விளக்கம் சிறப்பானது.

அமர்க்காலத்தில் ஒருவனைப் பகைவனாகப் பகுப்பின் பகைவனோடு அவன் சேர்ந்து கொள்வானாகலின், அமரின்கண் பகாஅஃ விடல் என்றார். அமருக்கு முன் தன் நட்பினனாக வந்து உதவாதானை அமர்க்காலத்தில் நட்பினனாகத் தெளிந்ததனால் பயன் ஒன்றுமில்லை யாகலானும், அக்காலத்தில் அவனை நட்பினனாகத் தெளிந்தால் அவனுடைய பகைவன் தன் பகைவனொடு சேர்ந்து அமருக்கு வரக்கூடுமாகலானும் அவனை அமர்க் காலத்தில் நட்பினனாகத் தேறான் விடல் என்றார். தன் அழிவின்கண் ஒருவனை நட்பினனாகத் தெளிதலால் வரும் நன்மையும், தன் பகைவனாகப் பகுத்தலால் வரும் தீமையும் இல்லையாகலான், 'அழிவின்கண்' என்பது ஈண்டுப் பொருத்தமற்ற பாடம் எனவும், 'அமரின் கண்' என்பது பொருத்தமான பாடம் எனவும் கொள்க.

அமர்க்காலத்தில் ஒருவனை நட்பினனாகத் தெளிதலும் பகைவனாகப் பகுத்தலும் கூடாது என்பதை அழகாக விளக்குகிறார். 'அழிவின் கண்' என்பது பொருந்தாத பாடம் என்பதற்கான விளக்கமும் சிறப்பாக அமைந்துள்ளது

வேலோடு நின்றானி டுவென் றதுபோலுங்
கோலொடு நின்றா னிரவு.

**(கொடுங்கோன்மை, குறள்:552)**

இக்குறளில் முந்தைய உரையாசிரியர்கள் பாடம் 'இடுவென்றது'. இது பொருந்தாது என்பதை அழகாக விளக்குகிறார் வ.உ.சி "உவமைச் செயல் முக்காலத்தும் நிகழ்வதொன்றாகலான் அதனை ஆசிரியர் இறந்த காலத்திற் கூறார். அதுபற்றி 'இடுவென்பது'ஆசிரியர் பாடம் எனக் கொள்ளப்பட்டது" என்னும் விளக்கம் சிறப்பானதாக உள்ளது.

அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய்
நின்றது மன்னவன் கோல்.

**(செங்கோன்மை, குறள்: 543)**

என்னும் குறளில் அந்தணர் என்பதற்கும் அறம் என்பதற்கும் அவர் தரும் விளக்கம் சிறப்பானது.

"அந்தணரென்போரறவோர் என்றமையால் அந்தணர் என்பதற்குத் துறவிகள் எனவும், 'அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை' என்றமையால், அறம் என்பதற்கு இல்வாழ்க்கை எனவும் பொருள்களுரைக்கப்பட்டன. நூல் போன்று நேரியதாயிருத்தலின் ஒழுக்கத்தை நூல் என்றார்."

பாட வேறுபாடு

மடுத்தவா யெல்லாம் பகடன்னா னுற்ற
இடுக்கண் இடர்ப்பா டுடைத்து.

**(இடுக்கண் அழியாமை, குறள்:624)**

என்னும் குறளில் 'வாயெல்லாம்' என்ற சொல்லை வ.உ.சி. 'வாய் செல்லும்' என்று பாடம் கொள்கிறார். வாயெல்லாம் என்பது முந்திய உரையாசிரியர்கள் பாடம் ''ஈண்டு 'எல்லாம்' என்ற சொல் இன்றியமையாததன்று; 'செல்லும்' என்ற சொல் இன்றியமையாதது. ஆகலான் செல்லும் என்பதே ஆசிரியர் பாடம் எனப்பட்டது'' என்று வ உ.சி. பாட வேறுபாடு கூறுகிறார்

சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொ லச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை யறிந்து.

**(சொல்வன்மை, குறள்:645)**

இக்குறட்பாவில் 'வெல்லுஞ்சொல் இன்மை' என்பதற்கு 'வெல்லுத லின்மை' என்று பாடம் கொள்கிறார் வ.உ.சி. பிற உரையாசிரியர்கள் 'வெல்லுஞ்சொலின்மை' என்று குறிப்பிடுகிறார்கள் வ.உ.சி. கூறும் இந்தப் பாட வேறுபாட்டிற்கான விளக்கத்தைக் கீழே காணலாம்

*பிறிதோர் சொல் என்றமையால், வெல்லுஞ்சொல் என்று மீண்டும் சொல்லுதல் மிகையாம். அஃது ஏடு பெயர்த்து எழுதினோரால் நேர்ந்த பிழை எனவும் வெல்லுதலின்மை என்பதே ஆசிரியர் பாடம் எனவும் கொள்க. பிறிதோர் சொல் என்றபின் வெல்லுஞ்சொல் என்று கூறுதல் மிகையேயாகும். அதனால் 'வெல்லுஞ்சொலின்மை' என்பது பிழைபட்ட பாடம், 'வெல்லுதலின்மை' என்பதே ஆசிரியர் பாடம் எனவும் கொள்க.*

என்னும் வ.உ.சி.யின் விளக்கம் அறியத்தக்கது.

## பொருள் வேறுபாடு

வ உ.சி.யின் உரை பல இடங்களில் பிற உரையாசிரியர்களோடு மாறுபடுகிறது. அவற்றுள் சில:

உடையார்மு னில்லார்போ லேக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர்.

**(கல்வி, குறள்: 395)**

என்னும் குறளில் 'ஏக்கறுதல்' என்பதற்கு 'ஒரு சொல்' என்று பரிமேலழகரும் 'கர்வம் நீக்குதல்', 'தாழ்ந்து நிற்றல்' என்று வ.உ சி.யும் பொருள் கூறுகின்றனர்.

*அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கு*
*முள்ளழிக்க லாகா வரண்.*

**(அறிவுடைமை, குறள்: 421)**

என்னும் குறளில், அறிவு 'அரசனுக்கு' அழிவு வராமல் காக்கும் கருவி என்னும் பரிமேலழகரின் கருத்துக்கு மாறாக அறிவு 'ஒருவனுக்கு' அழிவு வராமல் காக்கும் கருவி என்று வேறுபாடு காட்டுகிறார்.

*அச்ச முடையார்க் கரணில்லை யாங்கில்லை*
*பொச்சாப் புடையார்க்கு நன்கு.*

**(பொச்சாவாமை, குறள்: 534)**

என்னும் குறளில் 'நன்கு' என்னும் சொல்லுக்குப் பரிமேலழகர், 'செல்வம்' என்று பொருள் கூறுகிறார். ஆனால் வ.உ.சி. நன்கு என்பதற்கு 'நல்வினை' என்று பொருள் கூறுவது குறிக்கத்தக்கது.

## இலக்கணக் குறிப்பு மறுப்பு

வ.உ.சி. தம் பொருட்பால் உரையின் பல இடங்களில் பிற உரையாசிரியர்களின் இலக்கணக் குறிப்புகளை மறுத்துத் தம் கருத்தைக் கூறியுள்ளார். அவற்றுள் சிலவற்றைக் கீழே காணலாம்:

*ஆக்க மிழந்தேமென் றல்லாவார் ஊக்கம்*
*ஒருவந்தங் கைத்துடை யார்.*

**(ஊக்கமுடைமை, குறள்:593)**

என்னும் குறளில், 'அல்லாவார்' என்னும் சொல்லுக்கு வ.உ.சி. 'அல்லலுறா' என்னும் சொல்லைப் பாடமாகக் கொள்கிறார். பிற உரையாசிரியர்கள் கொள்ளும் அல்லாவார் என்னும் பாடத்தை வ.உ.சி. மறுக்கிறார்.

> *அல்லாவார் என்பது துன்பமுறுதல் என்னும்பொருள் தரும். அல்லாத்தல் என்பதிலிருந்து வந்த பலர்பால் எதிர்மறை வினைமுற்று என்றும் அஃது இன்ன இலக்கணப்படி அவ்வாறு வந்ததென்றும் கற்பிக்க வேண்டி யிருத்தலான், அதனை ஆசிரியர் பாடம் எனக் கொள்ளாமல் 'அல்லலுறார்' என்பதே பாடம் எனக் கொள்ளப்பட்டது*

என்று வ.உ.சி. கூறும் விளக்கம், அவருடைய இலக்கண அறிவைப் புலப்படுத்துவதாய் அமைந்துள்ளது.

*சிதைவிடத் தொல்கா ருரவோர் புதையம்பிற்*
*பட்டுப்பா டூன்றுங் களிறு.*

**(ஊக்கமுடைமை, குறள்: 597)**

இக்குறளில் 'பட்டுப்பாடு' என்னும் சொல்லுக்குப் 'பட்டும் பாடு' என்று பாடங்கொள்கிறார் வ.உ.சி. பிற உரையாசிரியர்கள் பட்டுப்பாடு

என்று குறித்துள்ளனர். "உயர்வு சிறப்பும்மை ஈண்டு இன்றியமை யாததாகலான், அப்பாடம் பிழைபட்ட பாடம் என்றறிக; சிதைவிடத்தும் என்பது செய்யுள் விகாரத்தால் உம்மை கெட்டு நின்றது" என்னும் வ.உ.சி.யின் விளக்கம் மனங்கொளத் தக்கது.

வ.உ.சி. தம் பொருட்பால் உரையில் காட்டியுள்ள பாட வேறுபாடு, இலக்கண வேறுபாடு முதலியவற்றைப் படிக்கும்போது அவருடைய தமிழ்ப் புலமையை உணர முடிகிறது.

### இன்பத்துப்பால்

இன்பத்துப்பாலில் வ.உ.சி.யின் உரை எளிய விளக்கம், சிறப்பு விளக்கம், பாட வேறுபாடு, பொருள் வேறுபாடு, கூற்று வேறுபாடு, இலக்கண வேறுபாடு போன்ற பல்வேறு நலஞ்செறிந்ததாய்த் திகழ்கின்றது.

### எளிய விளக்கம்

*கூற்றமோ கண்ணோ பிணையோ மடவர*
*னோக்கமிம் மூன்று முடைத்து.*

**(தகையணங்குறுத்தல், குறள்: 1085)**

என்னும் குறளுக்கு,

"கூற்றமோ (என் உயிரை வருத்துகின்றமையால்)
கண்ணோ (என்னைப் பார்த்தலால்)
பிணையோ (அஞ்சுகின்றமையால்)

இளம் பெண்ணின் பார்வை இம்மூன்று தன்மைகளையும் உடையது" என்று வ.உ.சி. கூறும் எளிய விளக்கம் மனங்கொளத் தக்கது.

*வாளற்றுப் புற்கென்ற கண்ணு மவர்சென்ற*
*நாளொற்றித் தேய்ந்த விரல்.*

**(அவர்வயின் விதும்பல், குறள்: 1261)**

என்னும் குறளுக்கு, "புல்லியவாதல் - நுண்ணிய பொருள்களைக் காணமாட்டாதனவாதல்; நாள்களை இழைத்தலாவது சுவரின் கண் சிவப்புநீர் முதலியவற்றால் ஒரு நாளுக்கு ஒரு கோடாக விரல்கொண்டு இழுத்தல் ஒரு நாளன்றிப் பலநாள் சுவரின்கண் கோடிழுத்தலும் வழிபார்த்தலும் செய்தலான் விதுப்பாயிற்று" என்னும் விளக்கம் கற்பவர் நெஞ்சில் தடையின்றிப் பதியும் வண்ணம் எளிமையாக அமைந்திருப்பது வ.உ.சி யின் உரையாற்றலைப் புலப்படுத்துகிறது

**சிறப்பு விளக்கம்**

இன்பத்துப்பாலில் அமைந்த பல குறட்பாக்களுக்குச் சிறப்பான விளக்கங்கள் கூறியுள்ளார் வ.உ.சி. அவற்றுள் சிலவற்றைக் கீழே காண்போம்

*மதியு மடந்தை முகனு மறியா*
*பதியிற் கலங்கிய மீன்.*

**(நலம் புனைந்துரைத்தல், குறள்: 1116)**

என்ற குறளுக்கு வ.உ.சி. தரும்,

*வான்மீன்கள் தத்தம் இடங்களில் நிலையாக நில்லாது ஓடித் திரிதலைப் பார்த்த தலைமகன், மதிக்கும் தலைமகளது முகத்திற்கும் வேற்றுமை அறியாது அவை கலங்கித் திரிகின்றனவோ என்று ஐயமுற்றுக் கூறியவாறு*

என்னும் விளக்கம் குறிக்கத் தக்கது.

*காம முழந்து வருந்தினார்க் கேம*
*மடலல்ல தில்லை வலி.*

**(நாணுத்துறவுரைத்தல், குறள்: 1131)**

என்னும் குறளுக்கு, வ.உ.சி. தரும் விளக்கம் அரியது.

*மடல் என்பது ஆகுபெயர், மடலூர்தலுக்கு ஆயினமையால். மடலூர்தலாவது, வேட்கையுற்ற தலைமகன் தாழை அல்லது பனையோலையால் குதிரை ஒன்று செய்து அதன்மீது ஏறித் தான் இன்னாள்மீது காமமுற்று வருந்து வதாகக் கூறிக்கொண்டு ஊரார் யாவரும் காணும்படியாக ஊர்சுற்றி வருதல். அவ்வாறு ஊர் சுற்றி வந்த தலை மகனுக்கு அவன் காதலித்த பெண்ணை மணஞ்செய்து கொடுத்தல் அரசனது கடமை. இது முற்காலத்தில் தமிழ் நாட்டில் நடந்துவந்த வழக்கம். இப்பொழுதும் இம் மடலூர்தல் தமிழ்நாட்டில் சிற்சில சாதியாருக்குள் நிகழ்ந்து வருகின்றது. அதனைப் 'பொய்க்குதிரை ஏறுதல்' என்று சொல்லுகின்றனர். அவ்வாறு மடலூர்தலால் தலைமகன் உடம்பில் ஓலை முதலியன கிழித்து உடம்பில் புண் உண்டாதலும் அதனின்று வெண்ணீர் வடிதலும் உண்மை யென்று கூறுகின்றனர்.*

என்னும் நீண்ட விளக்கம், வ.உ.சி.யின் தெளிவான உரைசொல்லும் தன்மைக்குச் சான்றாய் விளங்குகிறது

காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலருமிந் நோய்.

(பொழுது கண்டிரங்கல், குறள்: 1227)

என்னும் குறளுக்கு, "காலைப் பொழுதில் அரும்பி, பகற்பொழுதெல்லாம் மொக்குள் ஆகி மாலைப்பொழுதின்கண் மலர்கின்றது" என்றும் "மொக்குள் - முதிர்ந்த அரும்பு 'முகை மொக்குள்', 'நகை மொக்குள்' என்று ஆசிரியர் பின்னர் கூறுதலை நோக்குக" என்றும் வ.உ.சி. தருகின்ற விளக்கம் சிறப்பாக அமைந்துள்ளது

அழல்போலு மாலைக்குத் தூதாகி யாயன்
குழல்போலுங் கொல்லும் படை.

(பொழுது கண்டிரங்கல், குறள்: 1228)

என்னும் குறளில், 'குழல் போலும்' என்பதை விளக்கும்போது, "மாடு மேய்ப்போன் மாலைப் பொழுதில் பல இடங்களிற் சென்று மேயும் மாடுகளையெல்லாம் ஓரிடத்தில் திரட்டுவதற்காகத் தனது குழலினை ஊதுவது வழக்கம்" என்று வ.உ.சி. குறிப்பிடுகிறார். இது, நடைமுறையில் இருந்துவரும் வழக்கங்களையெல்லாம் நுட்பமாகக் கவனித்து, அனைவரும் அறிய வேண்டும் என்பதற்காக அவற்றைத் தம் உரையில் விளக்கும் உலகியல் பாங்கைப் புலப்படுத்துகிறது.

உள்ளக் களித்தலுங் காண மகிழ்தலும்
கள்ளுக்கில் காமத்திற் குண்டு.

(புணர்ச்சி விதும்பல், குறள்: 1281)

என்னும் குறளுக்கு விளக்கம் தரும்போது 'களித்தல்', 'மகிழ்தல்' ஆகிய சொற்களுக்கு அழகான பொருள் தருகிறார்.

"களித்தல் - அறிவறியாது உவத்தல்
மகிழ்தல் - அறிவறிந்து உவத்தல்"

என்று நுட்பமாகப் பொருளை வேறுபடுத்திக் காட்டி உணர்த்தும் திறன் அவரது நுண்மாண் நுழைபுலத்தைக் காட்டுகின்றது.

## கூற்று வேறுபாடு

இன்பத்துப்பாலின் சில குறள்களில் தலைமகன், தலைமகள், தோழி ஆகியோரது கூற்றுகளிலும் பரிமேலழகரிடமிருந்து மாறுபடுகிறார் வ.உ.சி. அவற்றுள் சிலவற்றைக் காணலாம்.

கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனு மில.

(குறிப்பறிதல், குறள்: 1100)

இக்குறளை, வ.உ.சி. 'தலைமகன் கூற்று' என்று கூறுகிறார். 'தோழி கூற்று' என்பார் பரிமேலழகர்.

*நோத லெவன்மற்று நொந்தாரென் றஃ தறியுங்*
*காதல ரில்லா வழி.*

**(புலவி, குறள்: 1308)**

வ.உ.சி. பாடம் - 'தலைமகள் கூற்று'; பரிமேலழகர் பாடம் - 'தலைமகன் கூற்று'.

*துன்பத்திற் கியாரே துணையாவார் தாமுடைய*
*நெஞ்சந் துணையல் வழி.*

**(நெஞ்சொடு புலத்தல், குறள்;1299)**

இதில், வ.உ.சி. பாடம் - 'தலைமகள் கூற்று'
பரிமேலழகர் பாடம் - 'தலைமகன் கூற்று'

**பாட வேறுபாடு**

அறத்துப்பால், பொருட்பாலைப் போலவே இன்பத்துப்பாலிலும் பல குறள்களில் பாட வேறுபாடுகளைக் காணமுடிகிறது. அவற்றுள் சில எடுத்துக்காட்டப் பெறுகின்றன.

*அணங்குகொ லாய்மயில் கொல்லோ கனங்குழை*
*மாதர்கொல் மாலுமென் நெஞ்சு.*

**(தகையணங்குறுத்தல், குறள்: 1081)**

என்னும் குறளில், 'கனங்குழை' என்னும் சொல்லுக்குக் 'கணங்குழை' என்று வ.உ.சி பாடம் கொள்கிறார். இச்சொல்லைப் பரிமேலழகர் 'கனங்குழை' என்று எடுத்தாள்கிறார்.

*செறாஅச் சிறுசொல்லுஞ் செற்றார்போ னோக்கு*
*முறாஅர்போன் றுற்றார் குறிப்பு.*

**(குறிப்பறிதல், குறள்: 1097)**

இக்குறளில் வரும் 'சிறுசொல்' என்பதை 'செறுசொல்' என்று பாடம் கொள்கிறார் வ.உ.சி. பரிமேலழகர் 'சிறுசொல்' என்று குறிக்கிறார்.

*வேட்ட பொழுதி னவையவை போலுமே*
*தோட்டார் கதுப்பினாள் தோள்.*

**(புணர்ச்சி மகிழ்தல், குறள்: 1105)**

என்னும் குறளில், வ.உ.சி. பாடம் - 'தோட்டாழ்'; பரிமேலழகர் பாடம் - 'தோட்டார்'

மேற்கூறிய மூன்று சான்றுகளிலும் பாடவேறுபாடுகாட்டி, பரிமேலழகரோடு மாறுபடுகின்ற வ.உ.சி. மணக்குடவர் பாடத்தை ஏற்றுக் கொள்ளுகிறார்.

**மணக்குடவரோடு மாறுபட்டு, பரிமேலழகரோடு ஒத்துப்போகும் இடங்கள்**

அறிகிலா ரெல்லாரு மென்றேயென் காம
மறுகின் மறுகு மருண்டு.

**(நாணுத்துறவுரைத்தல், குறள்: 1139)**

என்னும் குறளில், 'அறிகிலா' என்று வ.உ.சி.யும் பரிமேலழகரும் கூறும் பாடத்திற்கு மணக்குடவர் 'அறிவிலா' என்று கூறுகிறார்

பேணாது பெட்டா ருளர்மன்னோ மற்றவர்க்
காணா தமைவில கண்.

**(கண் விதுப்பழிதல், குறள்: 1178)**

வ.உ.சி., பரிமேலழகர் ஆகியோர் பாடம் - 'பேணாது'; மணக்குடவர் பாடம் - 'பேணாத'

வீழப் படுவார் கெழீஇயிலர் தாம்வீழ்வார்
வீழப் படாஅ ரெனின்.

**(தனிப்படர் மிகுதி, குறள்: 1194)**

என்னும் குறளில், 'கெழீஇயிலர்' என்னும் சொல்லுக்கு வ.உ.சி. 'கெழுவிலார்' என்னும் பாடம் கொள்கிறார். அதற்கு, ''கெழீஇயிலர் என்பது பிழைபட்ட பாடம். 'இலர்' என்பது 'கெழீஇ' என்னும் வினையெச்சத்தைக் கொண்டு முடியாதாகலான்'' என்று அவர் தரும் விளக்கம் நினைக்கத் தக்கது.

**பொருள் வேறுபாடு**

வ.உ.சி.யின் உரை, பிற உரையாசிரியர்களோடு பொருள் மாறுபாடு காணும் சில இடங்களைக் காணலாம்.

கண்ணிறைந்த காரிகைக் காம்பேர்தோட் பேதைக்குப்
பெண்ணிறைந்த நீர்மை பெரிது.

**(குறிப்பறிவுறுத்தல், குறள்: 1272)**

என்னும் குறளில் 'நீர்மை' என்னும் சொல்லுக்கு வ.உ.சி.யும் பரிமேலழகரும் முறையே 'தன்மை', 'மடமை' என்று பொருள் கூறுகின்றனர்.

மணியிற் றிகழ்தரு நூல்போன் மடந்தை
யணியிற் றிகழ்வதொன் றுண்டு.

**(குறிப்பறிவுறுத்தல், குறள்: 1273)**

என்னும் குறளில், 'ஒன்று' என்னும் சொல்லுக்கு வ.உ.சி. 'துன்பம்' என்றும் பரிமேலழகர் 'குறிப்பு' என்றும் பொருள் தருகின்றனர்.

*தண்ணந் துறைவன் தணந்தமை நம்மினு*
*முன்ன முணர்ந்த வளை.*

**(குறிப்பறிவுறுத்தல், குறள்:1277)**

என்னும் குறளில் 'வளைகள் தோளைவிட்டுக் கழ்ன்றன' என்பது பரிமேலழகர் உரை 'வளைகள் கையை விட்டுக் கழன்றன' என்பது வ.உ.சி உரை

*எழுதுங்காற் கோல்காணாக் கண்ணேபோற் கொண்கன்*
*பழிகாணேன் கண்ட விடத்து.*

**(புணர்ச்சி விதும்பல், குறள்: 1285)**

என்னும் குறளில், 'கோல்' என்னும் சொல்லுக்கு 'மை எழுதும் கோல்' என்று பரிமேலழகரும், 'எழுத்து எழுதுங்கோல்' என்று வ.உ.சி யும் பொருள் கூறுகின்றனர்

*தொடிநோக்கி மென்றோளு நோக்கி யடிநோக்கி*
*யஃதாண் டவள்செய் தது.*

**(குறிப்பறிவுறுத்தல், குறள்: 1279)**

என்னும் குறளில், 'அடிநோக்கி' என்பதற்குப் பொருள் கூறும் நிலையில் பரிமேலழகரிடமிருந்து மாறுபடுகிறார் வ உ.சி

''நின் காதலியை நான் தெளிவிக்க முயன்றபோது நினது பிரிவால் தன் வளைகள் கழல்கின்றனவெனவும் தோள்கள் மெலிகின்றனவெனவும் அதனால் நின்னுடன் போக்குக் குறித்தனள் எனவும் தோழி தலைமகனுக்குக் கூறியது'' என்று வ உ.சி.யும், ''பிரிவினால் மெலிவு வந்து வளை கழலாவண்ணம் நீ நடந்து தலைவன்பாற் சென்று பிரிவு நேராவண்ணம் காக்குமாறு தோழியின் அடியை நோக்கிக் கூறியது'' என்று பரிமேலழகரும் உரை காண்கின்றனர்.

## இலக்கண விளக்கம்

இன்பத்துப்பாலின் குறட்பாக்கள் பலவற்றுக்கு இலக்கண விளக்கத்தோடு கூடிய உரை கூறியுள்ளார் வ.உ.சி சான்றுக்கு ஒன்று காணலாம்.

*கரத்தலு மாற்றேனிந் நோயைநோய் செய்தார்க்*
*குரைத்தலு நாணுத் தரும்.*

**(படர்மெலிந்திரங்கல், குறள்: 1162)**

என்னும் குறளில், ''தொழிற்பெயரெலாந் தொழிற் பெயரில என்னும் தொல்காப்பியச் சூத்திரப்படி 'நாண்' என்பது உகர்மும் வல்லெழுத்தும் பெற்று நின்றது'' என்னும் வ உ சி யின் விளக்கம் அவருடைய இலக்கண அறிவை வெளிப்படுத்துகிறது

திருக்குறளுக்கு உரையாசிரியர்களிடையே பாட வேறுபாடு இருப்பினும் அவ்வேறுபாடுகளை அவர்கள் அடிக்குறிப்பில் தந்துள்ளனர். ஆனால் வ.உ.சி யோ மூலத்திலேயே வேறுபாடுகளைக் காட்டி, அவற்றைக் காரணத்தோடு விளக்கியுள்ளார். பரிமேலழகர் உரையினைச் சில இடங்களில் ஏற்றும் பல இடங்களில் மறுத்துமுள்ளார்.

வ உ.சி. தாம் எழுதிய திருக்குறள் உரையில் இயல் பாகுபாடு, அதிகார வைப்பு, அதிகாரப் பெயர், குறள் வைப்பு முறை ஆகியவற்றில் மாற்றங்களைச் செய்துள்ளார் என்றாலும், குறட்பாக்களின் சில சொற்களுக்கு உரையாசிரியர்கள் குறிப்பிடாத புதுப்பொருள் வழங்கியமை, சில குறட்பாக்களுக்கு நேரடியான, எளிய விளக்கங்கள் தந்துள்ளமை, இன்றியமையாத இலக்கணக் குறிப்புகள் சேர்த்துள்ளமை போன்ற நயங்கள் காரணமாக வ.உ.சி.யின் உரை சிறப்பினைப் பெறுகிறது.

பொருட்பால்,காமத்துப்பால் ஆகியவற்றிற்கு வ.உ.சி. எழுதிய உரை இதுவரை அறியப்படாதது; அச்சில் வராதது. முதன் முறையாக இந்நூலில்தான் இடம் பெறுகிறது இந்நூலாசிரியரின் பார்வைக்குக் கிடைத்த அவ்வுரைப் பகுதிகள் உரியவாறு இங்குப் பதிவு செய்யப் பெற்றுள்ளன.

**சிவஞானபோத உரை**

மெய்கண்டார் அருளிய சிவஞான போதமென்பது பதினான்கு மெய்ப்பொருள் நூல்களில் ஒன்றாகும். சிவஞான போதத்திற்கு முதன்முதலாகச் சிற்றுரையும் பேருரையும் வழங்கியவர் சிவஞான முனிவர் ஆவார். வ.உ.சி சிவஞான போதத்திற்கு எழுதிய உரை குறிப்பிடத் தக்கதாகும்.

**திருக்குறள், சிவஞானபோதம், கைவல்ய நவநீதம்** என்னும் நூல்கள் முறையே நீதி நூல்களிலும் சித்தாந்த நூல்களிலும் வேதாந்த நூல்களிலும் ஒப்புயர்வற்றவை என்பது வ.உ.சி யின் கருத்து. இவற்றுள் திருக்குறள், சிவஞான போதம் ஆகிய இரண்டின் உரைகள் கடின நடையிலும் பெரிய அளவிலும் இருந்த காரணத்தினால் அவற்றைத் தமிழ் மக்கள் கையிலெடுக்கவே அச்சம் கொண்டனர் என்று குறிப்பிடும் வ.உ.சி., "அவ்வச்சத்தை நிவர்த்திக்கும் பொருட்டு எளிய நடையிலும் சிறிய அளவிலும் அவற்றிற்கு உரைகள் எழுத வேண்டுமெனப் பல ஆண்டுகளுக்கு முன் நினைத்தேன்" (வ.உ.சி., சிவஞான போதம், உரைப்பாயிரம், ப. 3) என்று சிவஞான போத

உரையைத் தாம் எழுதியதற்கான காரணத்தைத் தம் நூலின் உரைப்பாயிரத்தில் குறிப்பிடுகின்றார்.

மக்கள் பல்வேறு பெயர்களோடும் வடிவுகளோடும் காணப்படினும் அவர்களெல்லாம் மக்கட் சாதியினரே ஆவதுபோல், மதங்கள் பல்வேறு பெயர்களோடும் கொள்கைகளோடும் காணப்படினும் அவைகளெல்லாம் ஓர் இறைவனைப் பற்றியே பேசுகின்றன என்று கருதுகின்ற வ.உ.சி., இவ்வுரையில் ஏனைய உரைகளிற் காணப்படும் பல மதக்கோட்பாடுகளும் அவற்றின் கண்டனங்களும் காணப்படா என்று குறிப்பிட்டு அதற்கான காரணத்தையும் பின்வருமாறு விளக்கியுள்ளார்.

> மதவேற்றுமையைக் காண்பவர்களும் பேசுபவர்களும் 'யான்', 'எனது' என்னும் மதவெறி பிடித்த மாக்களே யென்றும், நமது நாடு தற்காலம் இருக்கிற ஒற்றுமையற்ற நிலைமையில் மத வேற்றுமைகளையோ, சாதி வேற்றுமைகளையோ வேறு வேற்றுமைகளையோ காண்பவர்களும் பேசுபவர்களும் தேசத்திற்குத் தீங்கிழைப்பவர்களே யென்றும் யான் கருதுகிறேன். அதனாலும், இவ்வுரையில் யான் பல மதக் கோட்பாடுகளையும் அவற்றின் பொய்யான உயர்வு தாழ்வுகளையும் பற்றி ஒன்றும் பேசவில்லை.
>
> **(சிவஞானபோதம், உரைப்பாயிரம், ப.4)**

இந்நூலின் உரைப்பாயிரத்தில், உரை எழுதுவதன் நோக்கம், நூலின் சிறப்பு, உரை அமைப்புமுறை ஆகியவற்றை எடுத்துக் கூறியுள்ளார் இதிலிருந்து அவருடைய சிந்தனைத் தெளிவும் மக்களிடையே ஒருமைப்பாடு நிலவ வேண்டும் என்ற அவர் நோக்கமும் புலப்படுகின்றன.

சிவஞான போதத்திற்கு உரை எழுதும் வ.உ.சி. சில நெறிமுறைகளுக்குட்பட்டு அதை அமைக்கிறார்.

ஒவ்வொரு நூற்பாவின் சாரத்தையும் அதனதன் தலைப்பாகக் குறிப்பிடுகிறார். சான்றாக, முதல் நூற்பா: 'இறைவன் உண்மை' (சிவஞானபோதம், ப.8); இரண்டாம் நூற்பா: 'இறைவனே உலகமாயினன்' ( ப.9); நூற்பாவின் பொருளை 'பொருள்' என்ற சொல்லால் குறிப்பிடுகிறார். இலக்கணக் குறிப்பு, பாடவேறுபாடு, பொருள் விளக்கம் ஆகியவற்றை 'அகலம்' என்ற பகுதியில் எடுத்துரைக்கிறார். நூற்பாவின் மையப்பொருளைக் 'கருத்து' என்ற பகுதியில் விளக்குகிறார். சான்று - ஐந்தாம் நூற்பாவின் கருத்து: 'உயிர், பொறிகளோடு கூடி நிற்பதால் இறைவனை அறியாது' (ப.15).

எட்டாம் நூற்பாவின் கருத்து: 'உயிர்கள், தம் தவத்தால் உலகப்பற்றை விடுத்து இறைவனைச் சிந்திக்கும்' (ப.19).

இவ்வமைப்பு முறையில் ஒவ்வொரு நூற்பாவின் தலைப்பையும் கருத்துப் பகுதியையும் ஒருங்கிணைத்துப் பார்க்கும் அளவிலேயே சிவஞான போதத்தின் உட்பொருள் நமக்கு எளிதாகப் புலப்பட்டு விடும். இவ்வளவு எளிய முறையில் சித்தாந்த சாத்திரப் பொருண்மை களைப் படிப்பவர் மனங்கொளும் வகையில் விளக்கியிருப்பது வ.உ சி.யின் உரைநடைத் திறத்தை உணர்த்துகிறது.

'உயிர் இறைவனை அடைதல்' என்னும் தலைப்பில், இறைவன் அருளாலேயே உயிர் இறைவனை அடையும் என்னும் கருத்தினை விளக்கும்

> காணும் கண்ணுக்குக் காட்டு முளம்போற்காணவுள்ளத்தைக்
> கண்டு காட்டலினயரா வன்பி னரன்கழற் செலுமே

**(சிவஞானபோதம், ப.22)**

என்னும் பதினோராம் நூற்பாவின் அகல உரையைப் படிப்பவர்க்கு வ.உ.சி.யின் புலமைத் திறனும் உரைநலனும் நன்கு புலப்படும்.

> உள்ளம் - ஆன்ம புருடன் - உயிர். 'காண' என்பதும் 'கண்டு' என்பதும் உவமானத்தோடும் உவமேயத்தோடும் கூட்டியுரைக்கப் பட்டன. உவமானும் கண்; உவமேயம் உயிர். புறப்பொருளைக் கண்ணோடு கூடி உயிர் கண்டு கண்ணுக்குக் காட்டுதல்போல், தன்னை உயிரோடு கூடி அறிந்து இறைவன் உயிருக்கு அறிவிப்பனென்று கூறியவாறு.
>
> ஓர் ஆசிரியன் தன் மாணாக்கனோடு கூடிச் சென்று, அம்மாணாக்கன் விரும்பும் பொருள்களையெல்லாம் கண்டு அம்மாணாக்கனுக்குக் காட்டுவனேல், அம்மாணாக்கன் அவ்வாசிரியன்பால் தளராமல் அன்பு செலுத்தி அவனோடு இடைவிடாது உறைதல் போல, இறைவன் உயிரோடு கூடி அவ்வுயிர் அறிய விரும்பும் பொருளாகிய தன்னை அறிந்து அவ்வுயிர்க்கு அறிவித்தலால், உயிர் இறைவனோடு ஐக்கியமாய் நிற்கும் என்று கொள்க. 'அயராத' என்பது ஈறுகெட்டு நின்றது.

**(சிவஞானபோதம், ப.23)**

எளிய சான்றின்வழி அரிய கருத்தை இனிமையாக - தேர்ந்த உரையாசிரியரைப் போல் வ.உ சி. விளக்கியிருக்கும் நுட்பம் படிப்பவரை வியப்பிலாழ்த்தும்.

சிவஞான போதம் பிறந்த வரலாறு பற்றியும் சிவஞான போதத்திற்கும் ஞானவாசிட்டத்திற்கும் உள்ள கருத்து ஒற்றுமைகள் குறித்தும் எழுதியுள்ள குறிப்புகள் சிறப்பானவை.

இவ்வுரை எழுதியதால் தாம் பெற்ற பயன் யாதென அவரே விவரிக்கின்றார்

*இவ்வுரை எழுதுவதற்காகச் சிவஞான போதத்தை யான் ஆராய்ச்சி செய்ததில் எனக்குக் கிடைத்த பலன் சித்தாந்தமும் வேதாந்தமும் ஒன்றேயென்ற எனது கொள்கை உறுதியடைந்ததே.*

**(சிவஞானபோதம், ப.5)**

என்று கூறும் வ.உ.சி., ''இறைவனையும் உயிரையும்பற்றிப் பேசும் இவ்வருமையான நூலைத் தமிழ் மக்களெல்லாம் படித்தல் வேண்டும்; படிக்க முன் வரல் வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் யான் இவ்வுரையை இயற்றினேன். எனது நோக்கம் இனிது நிறைவேற எல்லாம் வல்ல *இறைவன் துணை''* (ப 6) *என்று தம்* விருப்பத்தை வெளிப்படுத்தி உரைப்பாயிரத்தை நிறைவு செய்கிறார்.

தத்துவங்களும் சித்தாந்தங்களும் கற்றவர்களின் மனநல உயர்வுக்கு மட்டுமே உரியன அல்ல. வாழ்க்கை உண்மைகளை அறிய விரும்பும் ஆர்வமுடைய அனைவரும் அவற்றைக் கற்க முடியும் என்ற நிலையைத் தம் எளிய உரையின் மூலம் உருவாக்கியவர் வ.உ.சி.

ஒரே ஒரு தொடரில், கனமான கருத்தமைந்த நூற்பாவின் பொருளை எளிய முறையில் மக்கள்முன் வைத்தவர் வ உ.சி. சிவஞான போத உரை, அவருடைய பன்முகப்பட்ட அறிவையும் ஈடுபாட்டையும் எடுத்துக்காட்டும் நூலாக எஞ்சி நிற்கிறது.

# 6

# பதிப்புகள்

**திருக்குறள் - மணக்குடவர் உரை - பதிப்பு**

"படைப்பிலக்கியம் பாவலனின் உள்ளத்தினின்று பொங்கு புனலாக வெளிப்பட்டு, ஏடுகளில் இலக்கிய வாழ்வு எய்திவிடுகிறது. நூறு ஆண்டுகளுக்கு முன் பதிப்பிலக்கியம் படைப்பிலக்கியப் பணியைவிட மிகக் கடினமானதாக, சுமையானதாக இருந்தது. கிடைத்தற்கரிய ஓலைச்சுவடிகளைத் தேடி அலைந்து, கெஞ்சி, கேட்டுப்பெறுவதும், 'தொட்டாற்சிணுங்கி' களாக இருக்கும் பனையோலைகளைப் புரட்டிப்பார்ப்பதும், கல்வெட்டு எழுத்துக்களாக எழுதப் பெறுபவற்றைப் படித்துப் புரிந்துகொள்வதும் மிகத் துன்பமானவை இவற்றுள் போலி ஏடுகளை அடையாளங் கண்டுகொள்வதும், அவற்றுள் புகுந்திருக்கும் இடைச் செருகல்களைக் கூர்ந்து கண்டுபிடிப்பதும், காட்டப்படும் உரை மேற்கோள்களைத் தமிழ் இலக்கியக் கடலிலிருந்து தேடிப் பிடிப்பதும் எளிய செயல்கள் அல்ல'' (வ.சுப்பையா பிள்ளை, 'பதிப்புத் துறையில் பட்டறிவு', செந்தமிழ்ச் செல்வி, சிலம்பு 45 பரல் 11, 1970).

''நூலைப் பதிப்பித்தல் என்பது ஒருவகைக் கலையே. நூலாசிரியர், உரையாசிரியர், விரிவுரையாசிரியர் ஆகியோருக்குள்ள மதிப்பு பதிப்பாசிரியருக்கும் இன்றியமையாதது (அ. சிதம்பரநாதன், தமிழோசை, ப.126). இத்தகு மதிப்புமிகு பணியாகிய பதிப்புப் பணியிலும் ஈடுபட்டு உழைத்தவர் வ.உ.சி. இடர்ப்பாடுகளுக்கு இடையே தம் பதிப்பு முயற்சிகளை மேற்கொண்டவர் அவர்.

வ.உ.சி வாழ்ந்த காலத்தில் தமிழ் நூல்கள் பதிப்பிக்கப்பெற்று வரத் தொடங்கிவிட்டன. சில நூல்களைப் பதிப்பித்த அளவில் முதற்பதிப்பாளர் என்ற பெருமை வ.உ.சி.க்கு உண்டு. திருக்குறளுக்கு மணக்குடவர் எழுதிய அறத்துப்பால் உரையை முதன்முதலாகப் பதிப்பித்து 1917இல் இவர் வெளியிட்டார் (க.த. திருநாவுக்கரசு, திருக்குறள் நூலடைவு - கையச்சேடு, சென்னைப் பல்கலைக்கழகம், 1972, ப.5, எண்11). மணக்குடவர் உரையைத் தாம்

பதிப்பித்தமைக்கான காரணத்தை வ.உ.சி. தம் நூலின் பதிப்புரையில் பின்வருமாறு குறித்துள்ளார்:

......"அப்பதின்மர் உரைகளில் தற்காலம் தமிழ்நாட்டில் பயின்று வழங்குவது பரிமேலழகருரை ஒன்றே அவ்வுரையைச் சில வருடங்களுக்கு முன்னர் யான் படிக்கத் தொடங்கினேன். அப்பொழுது மற்றைய ஒன்பதின்மர் உரைகளையும் பார்க்க வேண்டுமென்னும் அவா எனக்கு உண்டாயிற்று. அதுமுதல், தமிழ் நூல்கள் இருக்கும் இடங்களில் அவற்றைத் தேடவும் தேடுவிக்கவும் முயன்றேன்.

"அம்முயற்சியின் பயனாக எனக்குக் கிடைத்தவற்றில் மணக்குடவருரைப் பிரதி ஒன்று. அது வள்ளுவர் கருத்துக்களைத் தெள்ளென விளக்குவதாகவும் இனிய செந்தமிழ் நடையில் எழுதப் பெற்றதாகவும் தோன்றிற்று. அதுபற்றி யான் அச்சிட்டு வெளிப்படுத்தக் கருதி... எனது பிரதியில் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரம் என்னும் மூன்றையும் புரிந்து மணக்குடவருரையை ஒருவாறு பூரணமாக்கி அச்சிற்குக் கொடுத்தேன்" (வ.உ.சி., திருக்குறள் - மணக்குடவருரை - அறத்துப்பால், பதிப்புரை, பக்.iii-iv).

"சகஜானந்த சுவாமிகளைத் துணையாகக் கொண்டு அச்சிடப்பெற்ற அந்நூலை, சென்னைப் பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியர் திருமணம் செல்வக் கேசவராய முதலியாரவர்களும், சென்னைக் கிறித்துவக் கல்லூரிப் பேராசிரியர் த. கனகசுந்தரம் பிள்ளையவர்களும் பலமுறை பார்த்துச் சீர்படுத்தித் தந்தார்கள். அவர்களது அவ்வுதவியாலும் தென்னாப்பிரிக்காவிலுள்ள இந்தியச் சகோதரர்களது பொருளுதவியாலும் அறத்துப்பால் அச்சாகி முடிந்து இப்புத்தகமாக வெளிவருகின்றது" என்று வ.உ.சி. தம் நூலின் பதிப்புரையில் குறிப்பிடுகின்றார்.

"மணக்குடவரும் பரிமேலழகரும் அதிகார முறையில் சிறிதும் குறட்பாக்களின் முறையில் பெரிதும் வேறுபட்டிருப்பதோடு, பல குறள்களில் வெவ்வேறு பாடங்கள் கொண்டும், பலப்பல குறள்களுக்கு வெவ்வேறு பொருள்கள் உரைத்துமுள்ளனர் இவ்வேற்றுமைகளைக் காண்பார் திருக்குறளின் பெருமையையும் அதன் மூல பாடங்கள் வேறுபட்டுள்ள தன்மையையும் நன்கு அறிவதோடு, குறள்களுக்கு இருவரும் உரைத்துள்ள பொருள்களைச் சீர்தூக்கிப் பார்க்கவும் புதிய பொருள்கள் உரைக்கவும் முயலுவர். அவர் அவ்வாறு செய்ய வேண்டுமென்னும் விருப்பமே, யான் இவ்வுரையை அச்சிடத் துணிந்ததற்கு முக்கிய காரணம்"என்று வ.உ.சி. உரைப்பதிப்பிற்கான காரணத்தை விளக்குகின்றார் (பதிப்புரை, பக் iv-v).

ஆக்கல், அளித்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலும் செய்து இவ்வுரையை வெளியிட்டதாகக் குறிப்பிடும் வ.உ.சி. உரையை எளிமைப்படுத்தத் தாம் மேற்கொண்ட முயற்சிகளை'' ஆண்பாலரும் பெண்பாலருமான வித்தியார்த்திகள் இந்நூலை எளிதில் கற்குமாறு இதன் மூலத்தையும் உரையையும் மணக்குடவர் கருத்திற்கு இயைந்தபடி சந்தி பிரித்துப் பதிப்பித்துள்ளேன். உரையில் யான் சேர்த்த எனது சொந்தச் சரக்குகளை இணைப் பகரக் குறிகளுக்குள் அமைத்துள்ளேன். இப்பதிப்புரையின் பின்னர் அறத்துப்பாலின் அதிகார அட்டவணையொன்று சேர்த்துள்ளேன். குறள்களின் முதற் குறிப்பகராதி முதலியன நூலின் முடிவில் சேர்க்கப்படும் என்று தம் பதிப்புரையில் (ப.V) குறிப்பிடுகின்றார்.

வ.உ.சி யின் திருக்குறள் (மணக்குடவர் உரை) பதிப்பிற்குப் பல சிறப்புகள் உண்டு. அவற்றுள் அதிகார வைப்புமுறை விளக்கம், விடுபட்ட பகுதிக்கு விளக்கம் தருதல், அருஞ்சொற்பொருள் தருதல், விளக்கம் இல்லாத இடங்களுக்கு விளக்கமளித்தல், இலக்கணக் குறிப்பு விளக்கம் முதலியன அறியத் தக்கன.

## அதிகார வைப்புமுறை

மணக்குடவர் உரையில் இருபது அதிகாரங்களுக்கு உரிய வைப்பு முறை விடுபட்டுள்ளது. அவை அனைத்திற்கும் வ.உ.சி. வைப்பு முறையினைச் சுட்டியுள்ளார்.

''செய்ந்நன்றி யறிதற்கண்ணும் நடுவு நிலைமையை விடலாகாதென்றற்காக இவ்வதிகாரம் அதன்பின் கூறப்பட்டது'' (மணக்குடவர் உரை, ப.42) என்று 'நடுவு நிலைமை' என்னும் அதிகாரத்திற்கு வைப்பு முறை காட்டியுள்ளார் வ.உ.சி.

''நடுவுநிலைமையை விடாது ஒழுகுதற்குப் பொறையுடைமை இன்றியமையாத தொன்றாதலின் - இஃது அதன்பின் கூறப்பட்டது'' (மணக்குடவர் உரை, ப.51) என்று 'பொறையுடைமை' அதிகாரத்தின் வைப்பு முறையை வ.உ.சி. விளக்குகின்றார்.

தாம் சரியென்று கருதும் விளக்கங்களைப் பகர அடைப்புக் குறிகளில் தனித்து எழுதி மணக்குடவர் உரையினின்றும் வேறுபடுத்தி இருவர்தம் கருத்துகளையும் படிப்பவர் தெளிவாகப் புரிந்து கொள்ளுமாறு எழுதியுள்ள முறை சிறப்பாகக் குறிக்கத் தக்கது.

### விடுபட்ட பகுதி விளக்கம்

மணக்குடவர் விளக்கம் கூறாது விடுத்த இயல் துறவறவியலாகும். அதற்கு நீண்ட விளக்கவுரை தருகிறார் வ.உ.சி.

''துறவறமாவது, இல்லின் கண்ணின்று நீங்கித் தவம் முதலாயின செய்தல். அது கூறிய அதிகாரம் பதின்மூன்றினும் 'அருளுடைமை' முதலாகத் 'தவமுடைமை' ஈறாக இல்லின் கண்ணின்று நீங்கியாரால் செய்யப்படுவன நான்கும், 'கூடா ஒழுக்கம்' முதலாகப் 'பயனில சொல்லாமை' ஈறாக அவரால் தவிரப்படுவன ஐந்துமாக ஒன்பது அதிகாரத்தால் கூறி, அதன்பின் துறவிற்கு இன்றியமையாது அறிதற்பாலதாகிய 'நிலையாமை' ஓர் அதிகாரத்தால் கூறி, அதன்பின் துறவிலட்சணம் ஓர் அதிகாரத்தால் கூறி, துறவினால் எய்தற் பாலதாகிய 'மெய்யுணர்தல்' ஓர் அதிகாரத்தால் கூறி, பிறப்பிற்கு ஏதுவாகிய 'அவாவினை அறுத்தல்' ஓர் அதிகாரத்தால் கூறினாராகக் கொள்ளப்படும்''(மணக்குடவர் உரை, ப. 87) என்று, மணக்குடவர் விளக்கம் கூறாது விடுத்த பதின்மூன்று அதிகாரங்களடங்கிய துறவறவியலுக்கு வ.உ.சி. தரும் விளக்கம் அறிதற்குரியது.

### அருஞ்சொற் பொருள் தருதல்

'தீவினையச்சம்' என்னும் அதிகாரத்தில் உள்ள

*தன்னைத்தான் காதல னாயின் எனைத்தொன்றும்*
*துன்னற்க தீவினைப் பால்.*

என்னும் குறளுக்கு மணக்குடவர், ''தனக்குத்தான் நல்லவனாயின் யாதொன்றாயினும் தீவினைப் பகுதியாயினவற்றைச் செய்யா தொழிக'' (மணக்குடவர் உரை, ப.72) என்று விளக்கம் தருகிறார். அந்த விளக்கத்தில் வரும் 'யாதொன்றாயினும்' என்னும் சொல்லுக்கு, 'ஒரு சிறிதும்' என்று வ.உ.சி. அருஞ்சொற்பொருள் கூறியிருப்பது இங்குக் குறிக்கத் தக்கது.

'ஒழுக்கமுடைமை' என்னும் அதிகாரத்தில் எட்டாவது குறளாகிய

*நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்*
*என்றும் இடும்பை தரும்.*

என்னும் குறளுக்கு மணக்குடவர், 'முத்திக்கு நல்ல ஒழுக்கம் விதையாகும். தீய ஒழுக்கம் என்றும் இடும்பையைத் தரும்' (மணக்குடவர் உரை, ப.51) என்று உரை காண்கிறார். அவ்வுரையில் வரும் 'என்றும்' என்னும் சொல்லுக்கு 'இருமையின் கண்ணும்' என்று வ.உ.சி. பொருள் தரும் சிறப்பு அறியத் தக்கது.

**விளக்கம் இல்லாத இடங்களில் விளக்கம் தருதல்**

அறத்துப்பாலில், 'அழுக்காறாமை' என்னும் அதிகாரத்தில் வரும்

அழுக்காற் றகன்றாரும் இல்லை அஃதில்லார்
பெருக்கத்திற் றீர்ந்தாரும் இல்.

என்னும் குறளுக்கு மணக்குடவர் உரை கூறவில்லை. "உரையாசிரியர் இக்குறட்கு வேறாகப் பொருள் கூறாது 'முன்பு சொன்னதே பொருள்' என்று கூறிச் சென்றார்"(மணக்குடவர் உரை, ப.107) என்று வ.உ.சி குறிப்பிடுவதிலிருந்து இக்குறளுக்கு மணக்குடவர் உரை எழுதவில்லை என்பது புலனாகிறது விளக்கம் இல்லாத அவ்விடத்தில் வ.உ.சி. தம்முடைய விளக்கத்தைத் தந்துள்ளார். அது வருமாறு: "அழுக்காற்றினான் செல்வமுடையரானாரும் இல்லை; அழுக்காறில்லாதாராய்ச் செல்வத்தினின்று நீங்கினாரும் இல்லை"(மேலது). இவ்வாறு மணக்குடவர் விளக்கம் தராத இடங்களில் வ.உ.சி.விளக்கம் தருவதைக் காணமுடிகிறது.

**இலக்கணக் குறிப்பு வழங்கல்**

'செய்ந்நன்றியறிதல்' என்னும் அதிகாரத்தில் இடம் பெறும்

எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமம் துடைத்தவர் நட்பு.

என்னும் குறளுக்கு மணக்குடவர், 'தம்கண் உற்ற துன்பத்தை நீக்கினவரது நட்பை எழுமையிலும் தோற்றும் பிறப்பெல்லாம் நினைப்பர் சான்றோர்' என்று உரை காண்கிறார். வ.உ.சி., 'எழுமை - ஏழ்முறை. எழு என்னும் வினைத்தொகை இங்கு எதிர்காலத்தைக் குறித்து நின்றது' (மேலது, ப.40) என்று அருஞ்சொற்பொருள் விளக்கமும் இலக்கண விளக்கமும் கூறியிருப்பது குறிக்கத்தக்கது.

மணக்குடவர் உரையை முதலில் பதிப்பித்த பெருமைக் குரியவரான வ.உ.சி. எளிதில் பொருள்கொள்ளும் வகையில் சந்தி பிரித்தும் அதிகார வைப்பு முறையை விளக்கியும் விளக்கம் தரப்பெறாத இடங்களில் விளக்கம் தந்தும் இன்றியமையாத இலக்கணக் குறிப்புகள் வழங்கியும் அவ்வுரையைப் பதிப் பித்திருப்பது பாராட்டுதலுக்கு உரியது.

**தொல்காப்பியம் - இளம்பூரணம் - பதிப்பு**

இளமையிலேயே தமிழார்வம் கொண்டவரான வ.உ.சி, பழந்தமிழ் இலக்கியங்களைக் கற்கவேண்டும் என்று விரும்பினார்.

சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி இவற்றோடு தொல் காப்பியத்தையும் கற்க முற்பட்டார். அரசஞ்சண்முகனாரைத் தூத்துக்குடிக்கு வரவழைத்து, அவரிடம் தொல்காப்பியம் பாடம் கேட்டார் (வ.உ.சி ,சுயசரிதை - முதற்பதிப்பு, ப.40).

1910 இல் வ.உ.சி. சிறையில் இருந்தபோது தொல்காப்பியத்தை முழுமையாகக் கற்கும் பேறு கிட்டியது. தொல்காப்பியப் பொருளதிகாரத்தில், எம்மொழியிலும் காணப்பெறாத இலக்கிய மரபுகள் அமைந்திருத்தலும் தொல்காப்பியம் காட்டும் தமிழிலக்கண மாண்பும் வ.உ.சி.யை ஈர்த்தன.

தமிழிலக்கணத்தின் சிறப்பினை வ.உ.சி ,

> *ஆண், பெண், அலிகளை ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால் விகுதிகளால் உணர்த்துவது தமிழ்மொழி ஒன்றே. ஆண்பால் விகுதியைப் பொருந்தி ஆணைக் குறியா மலும், பெண்பால் விகுதியைப் பொருந்தி பெண்ணைக் குறியாமலும், ஒன்றன்பால் விகுதியைப் பொருந்தி அலியைக் குறியாமலும் நிற்கும் சொற்கள் ஆரியம் முதலிய மொழி களில் எண்ணில உண்டு. உயர்திணை, அஃறிணை என்னும் தமிழ் இலக்கணப் பாகுபாடு ஆரியம் முதலியவற்றில் இல்லை. நிலத்தின் பாகுபாடுகளையும், அவற்றின் உரிப்பொருள் கருப்பொருள்களையும், அவற்றின் மக்களது ஒழுக்கங்களையும் கூறுவது தமிழ் இலக்கணம் ஒன்றே.*
>
> *இவ்வகைத் தனிச்சிறப்புப் பொருந்திய இத்தமிழ் இலக்கணத்துள்ளும் ஆரிய மொழிகள் சிலவற்றையும், ஆரியர் பழக்க வழக்கங்கள் சிலவற்றையும் ஆரியக் கொள்கைகள் சிலவற்றையும் இந்நூலாசிரியன் நுழைத் திருத்தலை ஆங்காங்கு காணலாம். ஆயினும் தமிழ் மக்களின் முற்காலப் பழக்க வழக்கங்களும், தமிழ் மொழியின் நேர்மையும் மாண்பும் ஏற்றமும் இந்நூலின்கண் தெற்றெனக் காணலாகும். இந்நூலின் எழுத்ததிகாரச் சொல்லதிகாரச் சூத்திரங்களைக் கற்போர் நன்னூலாகியவற்றைப் புன்னூலாகியனவாகக் காண்பரென்பது திண்ணம்.*
>
> **(வ.உ.சி., தொல்காப்பியம் - இளம்பூரணம் - எழுத்ததிகாரம், பதிப்புரை, ப.2)**

என்று குறிப்பிடுகின்றார்.

இத்தகு சிறப்பும் பழைமையும் வாய்ந்த தொல்காப்பியத்தை மக்கள் அனைவரும் படிக்க வேண்டும் என்பது வ.உ சி.யின் விருப்பமாக இருந்தது இந்நூலுக்குரிய பழைய உரைகளின்

கடினநடை காரணமாகவே இந்நூல் மக்களிடையே பரவவில்லை என்று அவர் கருதினார். எல்லாரும் எளிதில் இந்நூலைக் கற்கும் வண்ணம் எளிய உரையை உருவாக்க வேண்டும் என்று எண்ணினார். தாமே எழுத்ததிகாரத்தின் சில இயல்களுக்கு உரையும் எழுதினார். தாம் எழுதிய உரையைச் சரிபார்த்து மேலும் எழுத வேண்டும் என்று எண்ணினார்; திருமணம் செல்வக் கேசவராயரின் துணையுடன் தம் உரையைச் செம்மைப்படுத்தினார். அந்நிலையில், முன்னரே அச்சாகியிருந்த தொல்காப்பிய எழுத்ததிகாரத்தின் படி ஒன்று த.கனகசுந்தரம் பிள்ளை மூலம் வ.உ.சி.க்குக் கிடைத்தது. அதன் தெளிவையும் எளிமையையும் உணர்ந்து, இத்தகு எளிய உரை இருக்கும்போது தாம் தொல்காப்பியத்திற்கு உரை எழுத முற்படுவது மிகை என்று உரை எழுதுவதைக் கைவிட்டார். இளம்பூரணத்தை அச்சிட்டு வெளிப்படுத்த வேண்டும் என்று முனைந்து உழைக்கத் தொடங்கினார்.

1920ஆம் ஆண்டே தொல்காப்பிய இளம்பூரணம் எழுத்ததிகாரத்தையும், பொருளதிகாரத்தையும் அச்சிடத் தொடங்கினார். இருப்பினும் இவற்றுள் பொருளதிகாரத்தின் முற்பகுதியே முதலில் வெளிவந்தது. 1928ஆம் ஆண்டுதான் எழுத்ததிகாரம் வெளிவந்தது. இதனை வ.உ.சி.தம் எழுத்ததிகாரப் பதிப்புரையில், "இவ்வெழுத்ததிகாரத்தையும் பொருளதிகாரத்தையும் 1920ஆம் வருடத்தில் அச்சிடத் தொடங்கினேன். பொருளதிகாரம் அகத்திணையியல் புறத்திணையியல்கள் முன்னரே அச்சாகி வெளிவந்துள்ளன. இஃது இப்பொழுது வெளி வருகின்றது. பொருளதிகார ஏனைய இயல்களும் சொல்லதிகாரமும் விரைவில் வெளிவரும்" என்று குறிப்பிடுகின்றார்.

வ.உ.சி. தம் எழுத்ததிகாரப் பதிப்புரையில், "இளம்பூரணம் எழுத்ததிகாரம் பல ஆண்டுகளுக்கு முன்னர்ப் பூவிருந்தவல்லிக் கன்னியப்ப முதலியாரால் அச்சிட்டு வெளிப்படுத்தப்பட்டது. அவ்வெழுத்ததிகாரத்தைப் பல ஏட்டுப் பிரதிகளோடு ஒப்பிட்டுப் பார்த்துத் திருத்தி யான் இப்பொழுது அச்சிட்டு வெளிப்படுத்துகிறேன். இளம்பூரணம் பொருளதிகாரம் அகத்திணையியலும் புறத்திணையியலும் முன்னரே அச்சிட்டு வெளிப்படுத்தியுள்ளேன். சொல்லதிகாரமும் பொருளதிகாரத்தில் பிந்திய இயல்களும் விரைவில் அச்சிட்டு வெளியிடப் பெறும்" என்று எழுதுவதிலிருந்து இவர் பழைய அச்சுப்படியை அங்ஙனமே பதிப்பிக்கவில்லை என்பதும் ஏட்டுப் பிரதிகள் பலவற்றை ஒப்பிட்டுப் பார்த்துச் செம்மையான முறையில் பதிப்பித்துள்ளார் என்பதும் புலனாகின்றது.

எழுத்ததிகாரப் பதிப்பை எம்முறையில் வெளியிட்டுள்ளார் என்பதை வ.உ.சி. தம் பதிப்புரையில் குறிப்பிடுகின்றார்.

''இளம்பூரணரே முதல் உரையாசிரியர். அவர் 'உரையாசிரியர்' எனவே யாவராலும் வழங்கப்படும் பெருமை வாய்ந்தவர். அவரது மூன்று அதிகார உரைகளுள்ளும் எழுத்ததிகார உரை, 'எழுத்திற்கு இளம்பூரணம்' என்று யாவராலும் புகழப்பெற்றது. கற்போர் எளிதில் உணருமாறு பொருள் தொடர்பு நோக்கிச் சூத்திரச் சொற்களையும் அவற்றின் பொருட்சொற்களையும் பிரித்து நிறுத்திப் படித்தற்குரிய அடையாளங்களிட்டுப் பதிப்பித்துள்ளேன். ஒவ்வோரிடத்தில் பாட வேறுபாடும் உரை வேறுபாடும் சேர்த்துள்ளேன். எனது சேர்ப்பிற்கு முன்னும் பின்னும் முறையே இணைப் பகரக் குறிகள் இட்டுள்ளேன்.''

வ.உ.சி.யின் இக்கூற்றுவழி இளம்பூரணர் உரையின் சிறப்பினையும் அவ்வுரையை மேலும் தெளிவும் எளிமையும் கொண்டதாக்க அவர் மேற்கொண்ட முயற்சிகளையும் அறிந்து கொள்ள முடிகிறது. ஓர் உண்மையான பதிப்பாசிரியருக்கு இருக்க வேண்டிய இயல்பு வ.உ.சி.யிடம் இருப்பதைக் காணமுடிகிறது.

பொருளதிகார இளம்பூரணருரையின் அகத்திணையியல் புறத் திணையியல் பகுதிகளைத் தனி நூலாக வெளியிட்டபின் தொடர்ந்து மற்ற இயல்களை அச்சிட வ.உ.சி.யால் இயலவில்லை. தம் நிலையை அப்பொழுது தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியராயிருந்த எஸ்.வையாபுரிப் பிள்ளையிடம் எடுத்துரைத்தார். அவரும் அவற்றை அச்சிடும் பொறுப்பை ஏற்றார்.

தெலுங்கு நூல்களை வெளியிட்டுவந்த, சென்னை வாவிள்ள வெங்கடேசுவர சாஸ்த்ருலு என்பவர் வ.உ.சி.யிடம் கொண்ட அன்பால் தொல்காப்பியத்தைப் பதிப்பிக்க முன்வந்தார்.

1933ஆம் ஆண்டு களவியல், கற்பியல், பொருளியல் பகுதிகள் தனிநூலாக வெளிவந்தன. 1936இல் எஞ்சிய, மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுளியல், மரபியல் பகுதிகள் தனிநூலாக வெளியாயின. இவற்றின் முகப்பில் 'பதிப்பாசிரியன்: வ.உ.சிதம்பரம் பிள்ளை' என்று குறிப்பிட்டே வையாபுரிப் பிள்ளை வெளியிட்டார்.

நூலில் வையாபுரிப் பிள்ளையின் பெயர் இடம் பெறாதது வ.உ.சி.க்கு வருத்தத்தைத் தந்தது. பின்னர் வ.உ.சி., நூல் வெளி யீட்டாளர்களுக்கு அறிவித்து வையாபுரிப் பிள்ளையின் பெயரையும் இணைக்கச் செய்தார். அவ்விரு தொகுதிகளிலும் 'பதிப்பாசிரியன்' என்னும் தலைப்பின் கீழ் வ.உ.சி.யின் பெயர் அச்சு வடிவிலும், வையாபுரிப் பிள்ளையின் பெயர் கையால் பொறிக்கப் பெற்ற

நிலையிலும் காணப்படும். இந்நிகழ்ச்சி வ.உ.சி.யின் நன்றிமறவாப் பண்பினை வெளிப்படுத்துவதாய் உள்ளது. இதுபற்றி வ.உ.சி. ''இவ்வேழு இயல்களுக்கும் பெயரளவில் பதிப்பாசிரியன் நான். உண்மையில் பதிப்பாசிரியர் திரு. வையாபுரிப் பிள்ளை அவர்களே. அவர்கள் செய்த நன்றி என்னால் என்றும் உன்னற்பாலது'' (எஸ்.வையாபுரிப் பிள்ளை, 'நான் கண்ட வ.உ.சி.', தமிழ்ச் சுடர்மணிகள், ப.376) என்று தம் பதிப்புரையில் குறித்துள்ளமை அறியத் தக்கது.

இளம்பூரணத்தில் வ.உ.சி.க்கு அளவற்ற ஈடுபாடு உண்டு. இளம்பூரணம் முழுவதையும் பதிப்பித்து வெளியிட வேண்டுமென்று விரும்பினார். குறிப்பாக எழுத்ததிகாரத்தை வெளியிட்டவுடன் சொல்லதிகாரத்தை வெளியிட்டிருக்க வேண்டும். ஆனால் பொருளதிகாரத்தை முதலில் வெளியிட விரும்பினார். காரணம், அந் நாளில் பொருளதிகாரம் இளம்பூரணத்தில் இல்லை என்றே கருதப்பட்டு வந்தது. இளம்பூரணர் எழுத்து, சொல்லதிகாரங்களுக்கு மட்டுமே உரை வழங்கியவர் என நம்பப்பட்டது. இந்நம்பிக்கை, 1858இல் வெளியான எஸ். சாமுவேல் பிள்ளை, தொல்காப்பிய - நன்னூல் பதிப்புரையில் குறிக்கப்பட்டுள்ளது (க.ப. அறவாணன், முன்குறித்த கட்டுரை, ப.20). கி.பி. 1885 வரையிலும் கூட இளம்பூரணர் உரை முழுதும் கிடைக்கவில்லை (சி.வை. தாமோதரம் பிள்ளை, 'நச்சினார்க்கினியப் பதிப்புரை', 1885, ப.4).

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பொருளதிகாரத்தை உரையோடும் எடுத்துக்காட்டோடும் பாடம் கேட்டவர்கள் மிக அருமை; முற்றாய் இல்லை என்றே சொல்லலாம். முற்றிலும் கற்றவர் வரதப்ப முதலியார் ஒருவரே இதனால், அவர் 'தொல்காப்பியம் வரதப்ப முதலியார்' என்றே அழைக்கப்பட்டார் (க.ப. அறவாணன், முன்குறித்த கட்டுரை, ப.16).

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிவரையிலும் இச்சூழல் தொடர்ந்தது. பின்னர் 1928, 1933, 1936 ஆகிய ஆண்டுகளில் வ.உ.சி.யின் பதிப்புகள் வெளியாயின. உடல் நலங்குன்றிப் போராடி வ.உ.சி. மறைந்த ஆண்டு 1936 என்பதும் இங்கு நினைவு கூரத் தக்கது. அவர்தம் தமிழ்த்தொண்டு தொல்காப்பியப் பதிப்பில் நிறைவடைந்தது எனல் வேண்டும்.

வ.உ.சி யின் இளம்பூரணர் உரைப் பதிப்புகளின் தனித் தன்மைகளாகச் சில கூற இயலும்.

ஏடுகளிலும் அச்சேடுகளிலும் பொழிப்புரையாகக் கொடுக்கப் பட்டிருந்த உரைப்பகுதி இவரால் பதவுரையாகப் பிரித்துக் கொடுக்கப் பட்டுள்ளது.

ஒவ்வோர் இடத்திலும் கற்போர் எளிதில் உணருமாறு பொருள் தொடர்பு நோக்கி, நூற்பாவின் சொற்களும் அவற்றின் பொருள் சொற்களும் பிரிக்கப்பட்டு அடையாளங்கள் இட்டுப் பதிப்பிக்கப்பட்டுள்ளன. ஒவ்வோர் இடத்தில் பாட வேறுபாடுகளும் உரை வேறுபாடுகளும் பதிப்பாசிரியரால் குறிக்கப் பெற்றுள்ளன.

வ.உ.சி.யின் பொருளதிகார இளம்பூரணர் உரையின் பின் ஏழு இயல்களில் மட்டும் காணப்படும் பாட வேறுபாடுகளின் எண்ணிக்கை வருமாறு:

களவியல் 146, கற்பியல் 165, பொருளியல் 43, மெய்ப்பாட்டியல் 43, செய்யுளியல் 423, மரபியல் 58, மொத்தம் 878 பாட வேறுபாடுகள்.

நூற்பா முதற்குறிப்புகள் கொடுக்கப் பெற்றதுடன் இயல் அகராதி கொடுக்கப்பெற்று இயல்தோறும் உள்ள நூற்பாக்களின் தொகையும் குறிக்கப் பெற்றுள்ளது. சில அரிய சொற்களுக்கு அருஞ்சொற்பொருள் கூறும் பண்பும் வ.உ.சி.யின் உரையில் காணப்பெறுகிறது சான்று. புள்ளி மயங்கியல் - முப்பத்து மூன்றாவது நூற்பா - ''ஈம் - இடுகாடு; கம் - கம்மியரது தொழில்; உரும் - இடி'' (வ.உ.சி., எழுத்ததிகாரம், ப.112).

இளம்பூரணர் உரை சிதைந்தும் முற்றும் கிடைக்கப் பெறாமலும் இருந்த பகுதிகளில் உடுக்குறியிட்டுத் தாம் உரை எழுதியுள்ளார்.

இளம்பூரணர் உரையில் துறைகளுக்குத் தரப்படும் எடுத்துக்காட்டுகள் பாட்டின் முதற்சீரையும் இறுதிச் சீரையும் மட்டுமே கொண்டுள்ளன. இவ்வாறு அமைந்த இடங்களில் பகரக் குறியிட்டுப் பாடல் முழுவதும் தரப் பெற்றுள்ளது.

பதிப்பு முழுவதிலும் உண்மையை எடுத்துக் கூற வேண்டும் என்ற எண்ணம் வெளிப்படுகிறது. இன்று வழங்கும் இளம்பூரணப் பதிப்புகளுக்குத் தாய்ப்பதிப்பாக விளங்கும் வ.உ.சி.யின் பொருளதி காரப் பதிப்பு, பல நெறிகளில் முன்னோடியாக விளங்குகிறது.

# 7
# சொற்பொழிவுகள்

இன்று பெருவழக்காகவும் இயல்பாகவும் அனைவரும் அறிந்த ஒன்றாகவும் நடைமுறையில் உள்ள அரசியல் மேடைப்பேச்சு என்பது ஒரு காலத்தில் - வ.உ.சி.யின் அரசியல் வாழ்க்கையின் ஆரம்ப காலத்தில் அரிய பொருளாகவே இருந்தது சொற்பொழிவுக் கலையை - மேடைப் பேச்சைத் தமிழ்நாட்டில் தொடங்கி வைத்தவர் என்ற வகையில் குறிக்கத் தக்கவர் ஜி. சுப்பிரமணிய ஐயர் ஆவார்.

அன்றைய இந்தியத் தலைமை ஆளுநர் ரிப்பன் பிரபுவால் அறிமுகப்படுத்தப்பட்ட 'ஸ்தல சுய ஆட்சி ஸ்தாபன திட்டம்' இந்தியர்களுக்கு அரசியல் அறிவைப் புகட்டும் ஒரு கருவியாகக் கருதப்பட்டது. அதன் பயன்களை மக்களுக்கு விளக்கும் நோக்கத் துடன் 1883இல் ஜி சுப்பிரமணிய ஐயர் சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொண்டார் (பெ.சு. மணி, புதிய விழிப்பின் முன்னோடி, ப. 29-30, 34) அதுவே, தமிழகத்தைப் பொறுத்தவரையில் அரசியல் அடிப்படையில் அமைந்த முதல் சுற்றுப்பயணமாகக் கருதப்படுகிறது. அந்தப் பயணத்தின்போது, பொதுமக்களிடையே அவர் நிகழ்த்திய சொற்பொழிவுகளே தமிழ் மேடைப்பொழிவின் தொடக்கமாக மதிக்கப்பெறுகின்றன. அவருடைய அம்முயற்சி விடுதலை இயக்க வரலாற்றில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தியது.

> *ஜி. சுப்பிரமணிய ஐயர் உள்ளூர்ச் சுய ஆட்சி என்பது இன்னதென்பதையும் இந்தச் சுதந்திரத்தினால் உண்டாகும் நன்மைகள் இவை என்பதையும் அதைப் பிரஜைகள் உபயோகிக்க வேண்டிய விதத்தையும் பற்றிப் பொது ஜனங்களுக்கு அறிவிப்பதற்காகச் சென்னை மாகாணம் முழுவதும் ஒரு பிரசங்க யாத்திரை செய்தார்.*
>
> *மதாசாரியர்கள் தங்கள் மதங்கள் பரவுவதற்காக மதப்பிரசங்க யாத்திரை செய்வதுபோல, ஜனத் தலைவர்கள் இராஜரீக சம்பந்தமான விஷயங்களைப் பொது ஜனங்களுக்கு உபதேசிப்பதற்காகப் பிரசங்க யாத்திரை செய்யும் வழக்கத்தை இச்சென்னை மாகாணத்தில் முதலில் உண்டாக்கியவரும் நமது ஐயரே*
>
> **(ஜி. சுப்பிரமணிய ஐயர் சரித்திரம், பக்.26-27)**

என்னும் குருமலை சுந்தரம் பிள்ளையின் கூற்று மனங்கொள்ளத் தக்கது.

அரசியல் மேடைப்பேச்சைத் தமிழகத்திற்கு அறிமுகம் செய்த வகையில் பாராட்டுக்கு உரியவராகும் ஜி.சுப்பிரமணிய ஐயர் சிறந்த பேச்சாளராக - மக்களைத் தம் பேச்சாற்றலால் ஈர்க்கும் வன்மை வாய்ந்தவராக இல்லை என்பது வரலாறு உணர்த்தும் உண்மையாகும்.

*இவருடைய ஆழ்ந்த கருத்துகளுடன் சொல்லழகும் சேருமாயின் 'பொன்மலர் நாற்றமுடைத்து' என்றாற்போல் பதின்மடங்கு அதிகமான சோபையைப் பெறும்*

**(ஜி. சுப்பிரமணிய ஐயர் சரித்திரம், ப.129)**

என்பது குருமலை சுந்தரம் பிள்ளையின் கணிப்பு.

ஜி. சுப்பிரமணிய ஐயர் தொடங்கி வைத்த மேடைப் பேச்சை - அரசியல் சொற்பொழிவை ஒரு கலையாக வளர்த்துப் பாமர மக்களை அரசியல் விழிப்புணர்வு கொள்ளச் செய்து, விடுதலை இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்றிக் காட்டிப் புதிய வரலாறு படைத்தவர் வ உ.சி. மேடைத் தமிழ் வரலாற்றில் இவருக்கு உரிய இடம் இனிவரும் பக்கங்களில் விளக்கப்பெறும்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்க ஆண்டுகளில் ஒதுக்கப் பெற்றும் ஒதுங்கியும் இருந்த தமிழர்களை ஒருங்கிணைத்து ஒரே தடத்தில் சிந்திக்கத் தூண்டியவர் வ்.உ.சி பல்வேறு வகைப்பட்ட மக்களை ஒன்று சேர்ப்பதும் ஒரே இலக்கை நோக்கிச் செயல்பட வைப்பதும் எத்துணைக் கடினமான முயற்சி என்பதை வரலாற்றின் பக்கங்களைப் புரட்டிப் பார்ப்பவர் அறிவர். தமிழ் நாட்டு வரலாற்றில் விடுதலை இயக்கத் தொடக்க காலத்தில் அதைச் சாதித்துக் காட்டியவர் வ.உ.சி. அதற்குத் துணை நின்றது அவரது பேச்சாற்றல்.

தம் பேச்சாற்றலால், ஆற்றல் மிக்க சொற்பொழிவுகளால் வ.உ.சி. மக்களை இயக்கியமையை வரலாறு பல நிலைகளில் பதிவு செய்து வைத்துள்ளது வ.உ.சி.யின் வீரம் செறிந்த, பொருளாழம் நிறைந்த சொற்பொழிவுகளை நேரில் கேட்டு நாட்டுணர்வு பெற்றவர்களும் அச்சொற்பொழிவுகளின் தாக்கத்தால் அன்றைய திருநெல்வேலி மாவட்டத்தில், குறிப்பாகத் தூத்துக்குடியில் ஏற்பட்ட மக்கள் எழுச்சியை நேரில் கண்டவர்களும் அரவிந்தர் போன்ற இந்தியத் தலைவர்களும் பல்வேறு கருத்துகளைத் தெரிவித்துள்ளனர். அத்துடன் அன்றைய ஆங்கில அரசின் ஆவணங்களும் வ.உ.சி.க்கு எதிராக நடத்தப்பெற்ற வழக்கில் வழங்கப்பெற்ற செசன்சு, உயர்நீதிமன்ற தீர்ப்புகளும் 'இந்து', 'சுதேச மித்திரன்', 'வந்தே மாதரம்' போன்ற இதழ்களும் இது தொடர்பான செய்திகளைப் பதிவு செய்துள்ளன.

அவற்றை அடிப்படைச் சான்றுகளாகக் கொண்டு, அரசியல் மேடைப் பேச்சை - மேடைத் தமிழை - இன்று வரையில் நின்று நிலவும் மேடைப்பேச்சு என்னும் புதிய கலையை வ.உ.சி. உருவாக்கி வளர்த்து வரலாறு படைத்தமையை விரிவாக அறியலாம்.

> *1907ஆம் ஆண்டு, ஒருநாள் நான் கற்றுவந்த இந்து கலாசாலையில் மாணாக்கரிடையே ஒரு பரபரப்பு உண்டாகியிருந்தது. அன்று மாலை சுமார் ஐந்தரை மணிக்கு தூத்துக்குடியில் இருந்து தேசபக்தர் சிதம்பரம் பிள்ளை திருநெல்வேலிக்கு வந்து கீழரத வீதியில் அம்மன் சன்னதிக்கு எதிரே பேசப் போகிறார் என்று ஒரு வதந்தி.*
>
> *குறித்த நேரத்திற்கு முன்பே ஜனங்கள் பெருந்திரளாகக் கூடியிருந்தார்கள். நானும் கலாசாலையிலிருந்து நேரே போய்ச் சேர்ந்தேன். குறித்த நேரம் கடந்துவிட்டது. ஆனால், ஜனங்கள் காத்துக் கொண்டிருந்தார்களே யல்லாமல் கலைந்து போகவில்லை. சுமார் ஆறுமணிக்கு மேல் வ.உ.சி. வந்து சேர்ந்தார்.*
>
> *அவரைப் பார்த்தவுடன் முதலாவது இவர் என்ன பேச முடியும் என்றுதான் நினைத்தேன். ஆனால், அவர் தொடங்கிய சிறிது நேரத்திற்கெல்லாம் விஷயங்களைத் தெளிவாக எடுத்துச் சொன்ன முறை என்னை வசீகரித்தது.*
>
> *அன்னிய அரசாங்கத்தினர் நாம் சிறிதும் முன்னேற வொட்டாதபடி வாணிகம் முதலியன புரிந்து, நம்நாட்டுச் செல்வத்தைச் சுரண்டிக்கொண்டு போவதைக் குறித்து விஸ்தாரமாகப் பேசினார். ஒவ்வொருவனும் தேசாபிமான முடையவனாக இருத்தல் வேண்டும் என்று வற்புறுத்தினார்.*
>
> *இதைப்பற்றிப் பேசும்பொழுது அவர் தம்மையே மறந்து பரவசமாய் நின்று கேட்போர் உள்ளத்தை நேரடியாய்த் தாக்கினார் என்று சொல்ல வேண்டும்.சுமார் ஒருமணி நேரம் பேசியிருப்பார். கேட்ட மக்கள் அனைவரும் மிக்க குதூகலமுற்றனர்.*

**(எஸ். வையாபுரிப் பிள்ளை, 'நான் கண்ட வ.உ.சி.,' வ.உ.சிதம்பரம் பிள்ளை - கட்டுரைகள் தொகுதி, பக். 4-5)**

''குறித்த நேரத்திற்கு முன்பே ஜனங்கள் பெருந்திரளாகக் கூடியிருந்தார்கள்''

''குறித்த நேரம் கடந்துவிட்டது. ஆனால், ஜனங்கள் காத்துக் கொண்டிருந்தார்களே அல்லாமல் கலைந்து போகவில்லை''.

''ஆறுமணிக்குமேல் வ.உ.சி. வந்து சேர்ந்தார். சுமார் ஒரு மணி நேரம் பேசியிருப்பார். கேட்ட மக்கள் அனைவரும் மிக்க குதூகலமுற்றனர்''.

என்னும் எஸ். வையாபுரிப் பிள்ளையின் வரிகள் ஆழ்ந்து எண்ணத்தக்கன.

பாமர மக்களும் புரிந்து கொள்ளும்படியாக - புரிந்து ரசிக்கும்படியாகப் பேசும் - எடுத்துரைக்கும் ஆற்றல் - சொற்பொழிவுத் திறன் வ.உ.சி.யின் இயல்பாக இருந்தது. இதைப் பின்வரும் சான்றும் உறுதி செய்வதாக அமைகிறது:

> நான் மெட்ரிகுலேஷன் வகுப்பில் படிக்கும்பொழுது (1907) ஒருநாள் மாலையில் மாணவர்கள் திரள்திரளாகக் கலாசாலை முடியதும் ஆற்றங்கரை நோக்கிச் செல்வதைக் கண்டேன். அங்கு யாரோ பிரசங்கம் செய்வதாக அறிந்தேன். நான் அதுவரைப் பிரசங்கம் எதுவும் கேட்டதில்லை. அதனால், மிகுந்த ஆவலுடன் என் சகாக்களுடன் நதிமணல் நாடிச் சென்றேன்.
>
> அங்கே ஐயாயிரம் ஜனங்களுக்கு அதிகமாகக் கூடியிருந்தனர். தவசு மண்டபத்தின் படியில் ஏறி நின்றுகொண்டு ஒரு குள்ளமான மனிதர் பேச ஆரம்பித்தார்.இவர்தானா பிரசங்கி, இவரைப் பார்த்தால் பிரமாதமாகத் தோன்றவில்லையே என்று நானும் என் நண்பர்களும் பேசிக்கொண்டோம்.
>
> ஆனால், அந்த மனிதர் பேசத் தொடங்கினாரோ இல்லையோ நாங்கள் இந்த உலகத்தில் இருக்கவில்லை. மெய்மறந்து போய் வாயைப் பிளந்து கொண்டு அப்படியே உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருந்தோம்.
>
> வ.உ.சி. அன்று எழுப்பிய சுதந்திர தாகம் இன்றும் எனக்கு அடங்கினபாடில்லை.

(பொ. திருகூடசுந்தரம், 'வ.உ.சி. செய்த உதவி',
வ.உ.சிதம்பரம் பிள்ளை - கட்டுரைகள் தொகுதி, ப.17)

என்று ஐம்பதுகளின் தொடக்கத்தில் - ஏறக்குறைய நாற்பத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு எழுதும்போதுகூட 1907இல் வ.உ.சி.யின்

பேச்சு ஏற்படுத்திய தாக்கத்தில் இருந்து விடுபட முடியாத நிலையையே பொ. திருகூடசுந்தரம் வெளிப்படுத்துகிறார் என்பது வ.உ.சி.யின் பேச்சாற்றலின் வலிமையைப் புலப்படுத்துவதாகும்.

> *அந்தக் காலத்தில் பொதுக்கூட்டம் கூட்டிப் பேசும் முறையைப் பிரசித்தமாக்கி, அரசியல் பணியை இன்றியமை யாத சமுதாயப் பணியாகக் காட்டியவர் சிதம்பரனார்*
>
> **('வ.உ.சி. - சில நினைவுச் சுடர்கள்', சுடர் - வ.உ.சி. மலர், தில்லி தமிழ்ச் சங்கம், ப.50)**

என்று வ.உ.சி. திட்டமிட்டு உருவாக்கி வளர்த்த மேடைப் பேச்சின் வரலாற்றுச் சிறப்பை மிகச் சரியாக மதிப்பீடு செய்துள்ளார் பி.ஸ்ரீ. இருபதாம் நூற்றாண்டின் முதல் பத்து ஆண்டுகளில் வ.உ.சி.யின் வீர முழக்கங்களைக் கேட்டு மகிழ்ந்தவரும் அந்தக் காலச் சூழலை நேரில் கண்டு உணர்ந்தவருமான பி.ஸ்ரீ.யின் இந்தக் கருத்து மிகவும் இன்றியமையாததாகும்

வ.உ சி.யின் தனிச் சிறப்புகளுள் ஒன்று, பாமர மக்களுக்கு நாட்டு நடப்புகளைப் புரிய வைத்து விடுதலையின் தேவையை உணர வைத்து அவர்களை ஓர் இயக்கமாக்கிச் செயல்பட வைத்ததாகும். அதற்கு மேற்குறித்த, 'பொதுக்கூட்டம் கூட்டிப்பேசும் முறையைப் பிரசித்தமாக்குதல்' என்னும் உத்தியைத் தொலைநோக்கோடு அவர் பயன்படுத்தினார்.

இப்படித் திட்டமிட்டுச் செயல்பட்டதால்தான் அன்றைய சென்னை மாநிலத்தில் வெள்ளையர் எதிர்ப்புணர்ச்சி நிலவும் ஒரே இடமாகத் தூத்துக்குடியை வ.உ.சி.யால் உருவாக்க முடிந்தது (ஆ சிவசுப்பிரமணியன், வ.உ.சி.யும் முதல் தொழிலாளர் வேலை நிறுத்தமும், ப. 48).

> *தூத்துக்குடியின் பெயர் நாடெங்கும் முழங்கிற்று. சிதம்பரம் பிள்ளை அவர்களின் சிம்ம கர்ஜனைப் பிரசங்கத்தைக் கேட்ட பின் தூத்துக்குடி மகாஜனங்களுக்கு உறக்கம் கிடையாது. அதிகார வர்க்கத்தினர் நடுக்கங் கொண்டனர். தூத்துக்குடியில் சிதம்பரம்பிள்ளை அவர்கள் முடிசூடா மன்னராய் விளங்கினார். அவர் சொன்னது சட்டம்*
>
> **('வ.உ.சிதம்பரம் பிள்ளை', தமிழ்ப் பெரியார்கள், ப.98)**

என்னும் வ.ரா.வின் கூற்று அரசு ஆவணத்திற்கு உரிய விளக்கமாக அமைகிறது.

இம்மக்கள் எழுச்சியை ஒட்டி நிகழ்ந்த ஒரு சுவையான நிகழ்ச்சி 'நாவிதர் சவரம் செய்ய மறுக்கிறார்' (A barber refuses to shave) என்ற தலைப்பில் 'இந்து' நாளேட்டில் (5 3.1908) வெளியாகியுள்ளது.

'வெள்ளையர் ஆதரவாளரான ரெங்க்சாமி ஐயங்கார் என்பவர் சவரம் செய்து கொள்வதற்காக ஒரு நாவிதர் முன் அமர்ந்தார் அந்நாவிதர் சுதேசி இயக்கத்தில் ஈடுபாடு கொண்டவராவார் தூத்துக்குடியில் மக்கள் எழுச்சியை அடக்க வெளியூரிலிருந்து போலீஸைத் தருவிக்க வேண்டுமென்ற மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்தை அவர் ஆதரித்தது உண்மைதானா என்று நாவிதர் வினவினார் ரெங்கசாமி ஐயங்கார் இது உன் வேலையல்ல என்று பதிலளித்தார். உடனே நாவிதரும் உமக்குச் சவரம் செய்வது என்னுடைய வேலையல்ல என்று கூறிச் சென்றுவிட்டார். பின்னர் ரெங்கசாமி ஐயங்கார் மற்ற நாவிதர்களிடம் செல்ல, அவர்களும் சவரம் செய்ய மறுத்துவிட்டார்கள் குதிரை வண்டி ஓட்டுபவர்களும் அவருக்கு வண்டி ஓட்ட மறுத்துவிட்டார்கள். உணவு விற்பவர்கள் அவருக்கு உணவு விற்க மறுத்துவிட்டனர்'' இதன் தொடர்ச்சியாக மற்றொரு செய்தியும் 6.3.1908 'இந்து' நாளேட்டில் வெளியாகி யுள்ளது அச்செய்தியின் மூலம் ரெங்கசாமி ஐயங்காரின் சலவைத் தொழிலாளி அவருக்குச் சலவை செய்ய மறுத்துவிட்டதுடன், அதற்கு முன் எடுத்துச் சென்ற துணிகளைத் திருப்பிக் கொடுக்கவும் மறுத்துவிட்டார் என்பதை அறிய முடிகிறது (ஆ. சிவசுப்பிரமணியன், வ.உ சி.யும் முதல் தொழிலாளர் வேலை நிறுத்தமும், பக். 33-34).

1908 மார்ச்சுத் திங்களில் தூத்துக்குடியில் நிலவிய மக்கள் எழுச்சியினை இச்செய்திகள் படம்பிடித்துக் காட்டுகின்றன

> *மேடையில் ஏறிவிட்டால், மழையைப் போல பொழிவார். கேட்பவர்கள் ஒரு சமயம் சிரிப்பார்கள்; திடீரென்று கண்ணைத் துடைத்துக் கொள்வார்கள்; பின்னர் அப்படியே வாயைத் திறந்து கொண்டு கேட்டுக் கொண்டிருப்பார்கள்; பிள்ளையின் பிரசங்கமே தனித்தன்மை கொண்டதாகும்*
>
> **(வ.ரா., தமிழ்ப் பெரியார்கள், ப. 101)**

என்னும் வ.ரா.வின் கூற்றைப் படிப்பவர்களுக்கு ரெங்கசாமி ஐயங்கார் தொடர்பான நிகழ்ச்சியில் நாவிதர், சலவைத் தொழிலாளி, குதிரை வண்டி ஓட்டுபவர், உணவு விடுதி நடத்துபவர் ஆகியோரின் நடவடிக்கைகள் வியப்பை ஏற்படுத்தா; மாறாக, அவர்கள் செயல்கள் சரியானவையே என்ற உணர்வையே ஏற்படுத்தும் தனித்தன்மை வாய்ந்த தம்முடைய மடைதிறந்த வெள்ளமெனும் பேச்சால் மக்களைத் தாம் விரும்பியவாறெல்லாம் ஆட்டுவித்த பேராற்றல் வாய்ந்தவரான வ.உ.சி.யைப் 'பேச்சுக்குச் சிதம்பரம்' என்று சுத்தானந்த பாரதியார் போற்றியுள்ளது பொருத்தமானதேயாகும் (வீர விளக்கு வ.வே சு. ஐயர், ப.5).

வ.உ.சி யின் மேடைப்பேச்சை நேரில் கேட்கும் அரிய வாய்ப்பைப் பெற்ற பலரும் அவருடைய பேச்சாற்றலை - வெளிப் பாட்டுத் திறனை அவரவரின் அனுபவ நிலையில் இருந்து வியந்து பாராட்டியுள்ளனர். விடுதலைப் போராட்ட வீரரும் காந்தியவாதி யுமான எஸ்.என். சோமையாஜலு பார்வையில் சொற்பொழிவாளர் வ உ சி பின்வருமாறு வெளிப்படுகிறார். "வ.உ.சி.யின் சொற் பொழிவை அப்படியே எழுதிப் படித்தால் சிறந்த உரைநடையாக அமையும். அவருடைய வாதம் தருக்க நெறியோடு பொருத்த மானதாக இருக்கும். மெல்லிய குரலில் தொடங்கும் அவருடைய பேச்சு போகப்போக வலிமையோடு ஓங்கி ஒலிக்கும்; உணர்ச்சிமய மானதாக மாறும்; இடிமுழக்கமாக வெளிப்படும். அவருடைய பேச்சைக் கேட்பவர் யாராக இருந்தாலும் - கற்றவர்களாயினும் பாமரர்களாயினும் அவர் பேசி முடிக்கும்வரையில் அவ்விடத்தை விட்டு அகலமாட்டார்கள்; தம்மை மறந்து வ.உ.சி.யின் சொற் பொழிவிலேயே ஆழ்ந்து விடுவார்கள்" (R.N. Sampath and Pe.Su.Mani, V.O. Chidambaram Pillai, P.35).

> *சிதம்பரனாரின் பேச்சுத் தமிழ், ஆழமும் வேகமும் உள்ள ஓர் ஆறு கரை புரண்டு வெள்ளமிட்டு வரும் அழகை நினைவூட்டும்*
>
> **('வ.உ.சி. - சில நினைவுச் சுடர்கள்', சுடர் - வ.உ.சி. மலர் ப.54)**

என்பது பி.ஸ்ரீ.யின் வாக்கு. தூத்துக்குடியிலும் திருநெல்வேலி மாவட்டத்திலும் வ.உ.சி. பேச வேண்டும் என்பது மக்களின் பெருவிருப்பாக இருந்தமைக்கும் வ.உ.சி. பேசிய கூட்டங்களுக்கு மக்கள் பெரும் எண்ணிக்கையில் வந்ததற்கும் பி.ஸ்ரீ. குறிப்பிடும் தனித்தன்மை வாய்ந்த - கேட்டாரைப் பிணிக்கும் வ.உ.சி.யின் சொற்பெருக்கே காரணமாகும்.

அச்சம், அறியாமை, வறுமை ஆகியவற்றில் ஆழ்ந்து கிடந்த மக்களைப் போராட்ட குணம் கொண்டவர்களாகவும் அரசியல் விழிப்புணர்வு பெற்றவர்களாகவும் வ.உ.சி. தம் சொற்பொழிவுகளால் உருவாக்கினார் என்பது வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒரு நிகழ்வாகும்.

இதுவே,

> ***இந்தியாவின் எதிர்காலம் வழக்கறிஞர்களிடமோ ஆங்கிலப் பட்டதாரிகளிடமோ இல்லை. தூத்துக்குடி சிதம்பரனார், பந்தர்பூர் திலகர், வங்கம் தந்த விபின் சந்திரபால் முதலிய தலைவர்கள் ஆணைப்படித் திரண்டெழுந்து அவர்கள்***

உதட்டசைவுக்கு உயிரையும் கொடுக்க முன்வருபவர்களின் கையில்தான் இருக்கிறது

(Political thoughts of Aurobindo, P.18; மேற்கோள்: பெ.சு.மணி, 'ஆங்கிலம் புகுந்த விதமும் ஆதிக்கம் வளர்ந்த கதையும்', செங்கோல் - வார இதழ், 13.6.1965, ப.5)

என்று ஆழ்ந்த நம்பிக்கையோடும் நிறைந்த எதிர்பார்ப்போடும் அன்றைய மகத்தான இந்தியத் தலைவர்களில் ஒருவராகப் போற்றப்பெற்ற அரவிந்தரையே எழுதத் தூண்டியிருக்க வேண்டும்.

செசன்சு நீதிபதி பின்ஹே 7 7 1908 அன்று தமது தீர்ப்பில் வ.உ.சி.க்கு இரட்டை ஆயுள் தண்டனை வழங்கினார். அதற்கான காரணங்களாக முதன்மைப்படுத்தப்பெற்ற வ உ.சி.யின் சொற்பொழிவுகள் பற்றிய பின்ஹேயின் கருத்துகள் குறிக்கத் தக்கன.

*சிதம்பரம்பிள்ளை தொழில் அபிவிருத்திக்குப் பாடுபடுவதாகச் சொல்லிக் கொண்டு சுயராஜ்யப் பேற்றை அடைவதற்கான வழிகளை எடுத்துச் சொல்லிப் பிரசங்கித்தார். கோரல் மில் வேலை நிறுத்தத்தை உண்டாக்கியவர் அவரே.*

*திருநெல்வேலியிலும் தூத்துக்குடியிலும் உள்ள சாமானிய ஜனங்களுக்கு ஓட்டு இல்லை. ஆகையால் ஒருவன் ஜனங்களை நதிமணலில் கூட்டி வைத்துப் பேசக் கனவிலும் நினைக்க மாட்டான். ஏனெனில், தன்னுடைய விருப்பத்தை நிறைவேற்ற அவர்களுக்குச் சக்தியில்லை. ராஜீயப் பிரசங்கம் செய்வதாக ஒருவன் வெளிவரும்போது ஏன் ஜனங்களைக் கூட்டிப் பேசுகிறான் என்று கவர்ண்மெண்ட் உத்தியோகஸ்தர்கள் கவலைப்படுகிறார்கள்.*

*அவன் யாரைப் பார்த்துப் பேசுகிறானோ அவர்களுக்குச் சட்டப்படி அமைந்திருக்கும் சக்தி எதையும் உபயோகிப்பதற்கு இல்லை. என்ன எண்ணத்தோடு அவன் கூட்டத்தைப் பார்த்துப் பேசுகிறான்?*

*ஜனக் கூட்டத்துக்குள்ள ஒரே சக்தியைப் பிரயோகிக்க வேண்டுமென்றுதான் பேசக்கூடும். அதாவது, ஜனக் கும்பலுக்கும் பிரதி மனிதனுக்கும் உள்ள சரீர பலத்தை உபயோகிக்கும்படித் தூண்டித்தான் பேசுகிறான்.*

கும்பலைப் பார்த்து, சரீர பலத்தை உபயோகிக்கும்படி பேசுவது மகா அபாயகரமான காரியம். அதனாலேதான் அமைதிக்கும் ஒழுங்குக்கும் பொறுப்பேற்ற உத்தி யோகஸ்தர்கள், சாமானிய ஜனங்கள் கும்பலாய்ச் சேர்ந்திருக் கபிரசங்கங்கள் செய்யப்படும்போது இயற்கையாக ஜாக்கிரதையுடன் இருந்து சமுசயமும் கொள்ளுகிறார்கள்.

அந்நிய வியாபாரத்தை விலக்கு என்று பேசலாம். ஆனால், சாமானிய ஜனக் கும்பலைப் பார்த்து இப்படிப்பட்ட கொள்கைகள் பேசப்படும்பொழுது கேட்கும் ஜனங்கள் அவற்றோடு நிற்பார்களா? கவர்ண்மெண்ட்டை பாய்காட் செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டது. கோர்ட்டுகளை பாய்காட் செய்யும்படி சொல்லப்பட்டது.

இது 124 A பிரிவின் கீழ் அபாயகரமான தூரத்துக்குப் போவதாக மாட்டாதா? சட்டத்துக்குக் கீழ்ப்படிந்து நடப்பதற்கு ஒத்ததாகுமா?

**(எம். கிருஷ்ணசாமி ஐயர்,**
**வி. ஓ. சிதம்பரம் பிள்ளை சரித சுருக்கம், பக். 32-34, 36)**

தூத்துக்குடியிலும் திருநெல்வேலியிலும் அந்நாளில் ஏற்பட்ட ஆங்கில எதிர்ப்புணர்விற்கு அடிப்படை வ.உ.சி.யின் சொற் பொழிவுகளே என்ற எண்ணம் நீதிபதி பின்ஹேயின் மனத்தில் ஆழப் பதிந்திருந்ததன் வெளிப்பாடே மேற்கண்ட தீர்ப்பு விவரம். 'சாமானிய' மக்களைச் சிந்திக்கப் பயிற்றுவித்த - அரசியல் விழிப்புணர்வு பெறச் செய்த வ.உ.சி.யின் தன்னிகரற்ற வெற்றிதான் பின்ஹேயின் பார்வையில் மாபெரும் குற்றமாகத் தென்பட்டது; இரட்டை ஆயுள் தண்டனை வழங்க முதன்மைக் காரணமாக அமைந்தது.

பொதுக் கூட்டத்தில் சிதம்பரனாரின் பேச்சைக் கேட்டது ஒரே முறைதான். சுயராஜ்ய கட்சியின் பிரசாரத்திற்காகத் தூத்துக்குடிக்கு 1923இல் வந்திருந்தார்.

வட்டக்கிணறு மைதானத்தில் மாபெரும் பொதுக்கூட்டம். அதில் சிறிது குழப்பம் ஏற்பட்டது. அதை அடக்குவதற்காக எழுந்த குரல்தான் வ.உ.சி.யின் குரல். கூச்சலும் குழப்பமும் அடங்கியது. சாதாரணக் குரலில் மெல்ல ஆரம்பித்த பிள்ளை அவர்களது பேச்சு சிறிது நேரத்தில் சங்கநாதமாக மாறியது. அவரது வார்த்தைகள் இன்னும் என் காதுகளில் ஒலித்த வண்ணமாகவே இருக்கின்றன.

*வலுவிழந்து, ஊக்கம் குன்றி, அரசியலில் தன் பங்கு என்னவென்று முடிவு பெறாத நிலையிலேயே பிள்ளையின் பேச்சு இவ்வளவு சக்தி வாய்ந்ததாக இருந்தால், 1905-1908 வரை அவரது வீரக்கனல் நிறைந்த விரிவுரைகள் தமிழ் மக்களைத் தட்டி எழுப்பிச் சுதந்திரக் கனலைச் சுடர்விட்டுப் பிரகாசிக்கச் செய்ததில் வியப்பு ஒன்றுமில்லை.*

**(மு.சி. வீரபாகு, 'நானறிந்த சிதம்பரனார்', விடுதலை வீரர் வ.உ.சி., பக்.35-36)**

தளர்ந்து, சோர்ந்து, ஒதுங்கி வாழ்ந்த காலத்திலும் (1923) வ.உ.சி.யால் ஒரு மாபெரும் பொதுக்கூட்டத்தைக் கட்டுப்படுத்தவும் தம்மை மறக்கச் செய்யவும் முடிந்தது என்றால், அவருடைய சுதேசி இயக்கக் காலத்துப் பேச்சாற்றலின் தன்னேரில்லாத் தகைமையை மீண்டும் ஒருமுறை எண்ணிப் பார்த்து மகிழலாம். மக்களைத் திரட்டி, குறிப்பாகப் பாமர மக்களை ஒன்று சேர்த்து அவர்களுக்கு அரசியலைப் புரியவைத்தவர் வ.உ.சி. அரசியல் வழியாகச் சிந்திக்கவும் செயல்படவும் பாமர மக்களைப் பயிற்றுவித்தவர் அவர். 'முரசம் போன்ற தம் பேச்சால்' (சுத்தானந்த பாரதியார், **சோதனையும் சாதனையும்-** இரண்டாவது பாகம், ப.451) - சொற்பெருக்கால் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ் நாட்டில், சிறப்பாகத் திருநெல்வேலி மாவட்டத்தில் அரசியல் எழுச்சியை ஏற்படுத்திய பெருமை வ.உ.சி.யின் தனி உடைமை.

தமிழ்நாட்டு வரலாற்றில் தம்முடைய மேடைப் பேச்சாற்றலால் பெரும் மாற்றங்களை - அரசியல், சமுதாய மாற்றங்களை ஏற்படுத்தியவர்கள் வரிசையில் முதலிடம் பெறுபவர் வ.உ.சி. அவருடைய தமிழ்ப் பணிகளுள் முத்திரை பதித்த ஒன்று மேடைப் பேச்சு. அதை முறையாகத் தொடங்கி, திட்டமிட்டு வளர்த்து, பின்னாளில் அது ஒரு கலையாக - இலக்கிய வகையாகத் தழைப்பதற்கு வித்திட்டவர் வ.உ.சி. என்பது இதுவரையில் கண்ட செய்திகளால் தெளிவாகப் புலனாகும்.

# 8
# படைப்பிலக்கியங்கள்

வ உ.சி யின் கவிதைப் படைப்புகள் நான்கு. 'மெய்யறம்', 'மெய்யறிவு', 'பாடல் திரட்டு', 'சுயசரிதை' என்பவை அவை. முதல் இரண்டும் அறம் பேசுவன; பாடல் திரட்டு வ உ.சி.யின் பல்வேறு அனுபவங்களின் தெறிப்பு சுயசரிதை அவருடைய வாழ்க்கை வரலாற்றைக் கூறுவது இனி, வ உ சி. என்னும் கவிஞரை அவர் படைப்புகள் வழி அறியலாம்

## மெய்யறம் (1914)

மெய்யறம் என்பது வ.உ.சி. எழுதிய மூன்றாவது நூலாகும். முதலில் வெளிவந்த 'மனம் போல வாழ்வு', 'அகமே புறம்' ஆகிய இரு நூல்களும் ஆங்கில மொழியினின்றும் மொழிபெயர்க்கப் பெற்றவை. மெய்யறம் திருக்குறளை - திருக்குறள் விளக்கும் நீதிக் கருத்துகளை மையமாக வைத்து எழுதப் பெற்றதாகும்.

தமிழ் இலக்கியங்களுள் வ.உ.சி யின் மனத்தை மிகவும் ஈர்த்தது திருக்குறளே ஆகும் மாக்களைப் போல மனம்போனபடி வாழ்க்கை நடத்தும் மக்கள் மனந்திருந்தி நல்வாழ்வு வாழத் துணைபுரிவது திருக்குறளே என்பது வ உ.சி.யின் அசைக்க முடியாத நம்பிக்கை. மக்கள் மனநலம் பேணி நல்வாழ்வு பெறவேண்டும் என்பதற்காகக் குறளின் அடிப்படையில் மெய்யறம் என்னும் இந்நூலை இயற்றி யுள்ளார். இதனைத் திருக்குறளின் வழிநூல் என்றே வ.உ சி. குறிப்பிடுகின்றார் (மெய்யறம் -முதல் பதிப்பு, பாயிரம், ப.iii).

இராஜாஜி மெய்யறத்தைக் கீழ்க்கண்டவாறு பாராட்டிக் கூறியுள்ளார்:

> இந்நூலிற் கூறியுள்ள பொருள்களை யான் இனிதுணர்ந்தேன். இந்நூலை யான் பெரிதும் மதிக்கின்றேன். முற்காலத்திய திருவள்ளுவர் குறளை, இக்காலத்திய கருத்துகளால் மணப்படுத்தி அற்பக் கல்வியுடையாரும் உணரத் தக்கவாறு செய்யலாமென்பதை இந்நூல் காட்டுகின்றது.

(வ.உ.சி., பாடல் திரட்டு, ப.vi)

மெய்யறம் என்னும் இந்நூல் மாணவவியல், இல்வாழ்வியல், அரசியல், அந்தணவியல், மெய்யியல் என்னும் ஐந்து இயல்களைக் கொண்டது. ஓர் இயலுக்கு இருபத்தைந்து அதிகாரங்கள் என்று மொத்தம் நூற்றிருபத்தைந்து அதிகாரங்களைத் தன்னகத்தே கொண்டது.

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் மாணவர், இல்வாழ்வார், அரசர், அந்தணர் எனப் படிப்படியாய் வாழ்க்கையில் உயர்ந்து இறுதியில் மெய்ந்நிலையை அடையலாம் என்பது வ.உ.சி.யின் நம்பிக்கையாகும்.

ஒரு நாடு முன்னேற வேண்டுமென்றால், அந்நாட்டின் அங்கங்களாகிய மாணவர், இல்வாழ்வார், அரசர், அந்தணர் ஆகியோர் அவரவர்களுக்குரிய கடமைகளைச் செவ்வனே செய்ய வேண்டும். ஆகவேதான் முதலில் இந்நால்வருடைய கடமைகளைப் பற்றிக் கூறிப் பின்னர் அனைத்து மக்களுக்கும் பொதுவானதாகிய மெய்ப்பொருள்பற்றிக் கூறியுள்ளார் வ.உ.சி. என்பார் சுப்பிரமணிய சிவம்.

''இதனை வாசிக்கும் ஒவ்வொருவரும் தத்தம் நிலைக்கு உயர்ந்ததாயுள்ள நிலைக்குரிய ஒழுக்கங்களைக் கைக்கொண்டு அவ்வுயர்ந்த நிலையை அடைந்து அவ்வாறே ஒவ்வோர் உயர்ந்த நிலையையும் அடைந்து மேம்படுவார்களாக'' (மெய்யறம், பாயிரம், ப.iii) என்று கூறுவதன்மூலம் வ.உ.சி. தனிமனித ஒழுக்க மேம்பாட்டின் வளர்ச்சிக்காக எழுதப் பெற்றதே இந்நூல் என்பதை உணர்த்துகிறார்.

மாணவவியலில் முதலாவது அதிகாரத்தில் மாணவரது கடமைகளுள் ஒன்றாக, 'ஒழுக்கமுங் கல்வியும் ஒருங்கு கைக்கொளல்' (மெய்யறம், ப. 3) என்பதை வ.உ.சி குறிப்பிட்டுள்ளார் இதுபற்றிய தம்முடைய கருத்தை விரிவாக எழுதியுள்ளார் சிவம். அது, பல அரிய செய்திகளைக் கொண்டுள்ளது அதனால், அப்படியே இங்கு எடுத்தாளப் பெற்றுள்ளது

> *இந்த சூத்திரத்தை மாணவர் கடமைகளுள் ஒன்றாகக் கூறாது, இதுவே மாணவர் கடமை என்று கூறினும் மிக நன்றா யிருக்கும். கல்வி, கல்வியென்று தற்காலத்தில் கதறப்படுகிற தெல்லாம் எழுதப்படிக்கக் கற்றலேயாகும். இத்தகைய கல்வியால் மனிதன் நிர்மலனாகின்றதில்லை; தீய சிந்தனைகளையும் செயல்களையும் விடுவதில்லை; வீழ்ந்த பள்ளத்திலேயே வீழ்ந்து கிடக்கிறான்; மேலேற வழி அறிகின்றானில்லை. ஏதோ சில காலத்திற்கு இக்கல்வியால் சுகமடைகின்றதாகப் பாவித்துக் கொண்டிருந்தபோதிலும்,*

இக்கல்வி மாத்திரத்தால் பயனில்லையென்று ஒவ்வொரு வரும் ஒப்புக் கொள்ளும் காலம் கூடிய சீக்கிரம் வந்துவிடும்.

கல்வி மூளையைப் பலப்படுத்திக் கூர்மைப்படுத்துவது; ஒழுக்கம் ஹிருதயத்தைச் சுத்தம் செய்வது. பரமேஸ் வரனாகிய யோகீஸ்வரன் ஹிருதய குகையில் வாசம் செய் கிறாரே யொழிய, மூளையின் முரட்டுக் குதர்க்கங் களிலும் யுக்திகளிலும் வாசம் செய்வதில்லை. நாம் ஈஸ்வரனை அடைய வேண்டுமானால், ஈஸ்வரன் நம்மிடத்தில் எப்பொழுதும் குடியிருக்க வேண்டுமென்று விரும்புவோ மானால் ஹிருதய வாசலை அடைத்துக் கொண்டிருக்கும் குப்பைக் குவியல்களை யெல்லாம் நன்றாய் அகற்றிவிட்டு நிஷ்களங்கமாக்கிக் கண்ணாடிபோல் சுத்தமாய் வைத்தி ருந்தால் போதும், ஈஸ்வரனை வருந்தியழைக்க வேண்டிய தில்லை. தனக்கு உகந்த இடம் ஏற்பட்டு விட்டவுடன் அவர் தானே அந்த ஹிருதயத்திற்குள் புகுந்து கொள்வார். கல்வி, துச்சமாகிய இகலோக சுகத்தைக் கொடுக்கும்; ஒழுக்கம் என்றென்றும் அழியா இன்ப நிலையை அளிக்கும்; கல்வியும் ஒழுக்கமும் ஒருவனிடத்தில் ஒன்று சேருமாயின், அவன் இகத்திலும் பரத்திலும் சுகமுறுவானென்பதற்குச் சந்தேகம் என்ன?

(ஞானபாநு, செப்டம்பர்1914, பக்.141-142)

என்று வ.உ.சி.யின் ஒற்றை அடிக்குச் சிவம் தரும் நெடிய விளக்கம் இன்றும் பொருந்துவதாக உள்ளது. நெடியதொரு விளக்கம் தருமாறு சிவத்தைத் தூண்டிய அந்த ஒற்றை அடியை எழுதியவரான வ.உ.சி.யின் மனித நல மேம்பாட்டுச் சிந்தனை இதன் பின்புலம் என்பது இன்றியமையாதது.

ஆசிரியர் கடமைகள் பற்றிக் குறிப்பிடும்போது 'மாணவர் தமைத் தம் மகாரெனப் பேணல்; 'அறிந்தவையெல்லாம் செறிந்திடச் சொல்லல்'; 'சொல்லிய செய்யவும் வல்லுநராக்குதல்' (மெய்யறம், ஆசிரியரை அடைதல், ப.6) என்று அழுத்தந்திருத்தமாகக் கூறுகிறார். 'உடம்பை வளர்த்தல்' என்னும் அதிகாரத்தில் 'நினைந்தபடி உடல் வளைந்திட வளர்க்க' (ப 7) என்று கூறுகிறார்; நினைத்தபடி உடல் வளைந்தால்தான் அறிவை அனுபவத்தில் கொண்டுவர முடியும்; மனம் விரியும், உன்னத நிலைகளை எய்த இயலும் என்னும் வாழ்வியல் சார்ந்த உண்மைகளைக் கூறும் இது, படித்துப் பின்பற்றத்தக்கது

இல்வாழ்வியலில், 'உயிர்த்துணை கொள்ளல்' என்னும் அதிகாரத்தில் 'துணையிழந்தாரை மணப்பது புண்ணியம்' (ப 19) என்று குறிப்பிடுகின்றார் வ உ சி. 'உடன்கட்டை ஏறுதல்', 'குழந்தை மணம்' ஆகிய கருத்துகள் பரவலாக மக்களால் ஏற்றுக் கொள்ளப் பட்டிருந்த அக்காலகட்டத்தில் வ.உ.சி. கூறும் விதவைத் திருமணம் என்பது வெகு சிலரே ஏற்கத் தக்கதாகும். வ.உ.சி.யின் இச்சீர்திருத்த நோக்கு, எதிர்ப்பையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. வ.உ சி.யின் இக்கருத்துக்கு, சுப்பிரமணிய சிவம் தெரிவித்துள்ள மறுப்பு இங்குக் குறிக்கத்தக்கது.

> *இல்வாழ்வியலில், 'உயிர்த்துணை கொள்ளல்' என்னும் அதிகாரத்தில் 'துணையிழந்தாரை மணப்பது புண்ணியம்' என்று பிள்ளையவர்கள் எழுதியிருக்கின்றனர். இதனால் இவர் 'விதவா விவாகம்' செய்யலாம் என்ற கொள்கையைப் பின்பற்றுபவர் என்று தெரிகிறது. விதவா விவாகம் செய்யலாம் என்று மாத்திரம் அன்று; புண்ணியமென்றும் கூறியிருக்கின்றனர். ஆதலால் நமது தேச நன்மைக்கு விதவா விவாகம் அவசியம் என்பது இவர் கருத்துப் போலும். நாம் இவ்வபிப்பிராயத்திற்கு முற்றிலும் மாறுபடுகின்றோம்.*

**(ஞானபாநு, செப்டம்பர் 1914, ப. 143)**

அந்நாளில், விடுதலை இயக்கத் தலைவர்கள் சமகாலத்தில் வாழ்ந்தவராயினும் நெருங்கிய நட்புக்கு உரியவராயினும் பொதுநோக்கம் என்று வரும்போது விடுதலை உணர்வில் ஒன்றுபட்டும் சமுதாய உணர்வில் மாறுபட்டும் தாம் தக்கது என்று கருதும் நிலைப்பாட்டில் உறுதியோடு நின்றதை, வ.உ சி.யின் பாடல் கருத்தும் அதற்கான சிவத்தின் மறுப்பும் உணர்த்தவல்லன.

நாடாள்வோர், நாட்டை நன்முறையில் ஆளவேண்டும் என்னும் கருத்து 'அரசியல்' பகுதியில் சொல்லப் பெற்றுள்ளது.

*'அரசுயிர் கட்டுச் சிரசென நிற்பது'*

**(மெய்யறம், ப. 33)**

என்னும் அடிமூலம் நாடாள்வோரின் இன்றியமையாமையை உணர்த்தும் வ.உ.சி. அரசர்களின் முதன்மையான கடமை குடிபுரத்தலே என்பதை,

*'குடியெலா மகவெனக் கொண்டுமன் னோம்புக'*

**( ப.56)**

என்னும் அடியால் விளக்குகிறார். இவ்வியலில் வ.உ.சி கூறும் கருத்துகள் பலரும் ஏற்றுக் கொள்ளத் தக்கனவாய் அமைந்துள்ளன.

இல்லறவியலில் வ.உ.சி.யின் கருத்துகள் சிலவற்றை மறுத்துக்கூறிய சுப்பிரமணிய சிவம், அரசியல்பற்றிக் கூறும் கருத்து, இங்கு நினைவு கூரத் தக்கது.

> 'அரசியல்', ராஜாங்க விவகாரங்களில் மனத்தைச் செலுத்துகின்ற ஒவ்வொருவரும் பார்த்து மனனம் பண்ணத் தக்கது. நாம் பிள்ளையவர்களுடன் நெடுநாளாக நெருங்கிப் பழகியிருக்கின்றோமாயினும் அவருக்கு ராஜ தர்மத்தில் இவ்வளவு அறிவிருக்குமென்று நாம் நினைக்க வில்லை. 'அரசியல்' படிக்கப் படிக்க ஆனந்தத்தைத் தருகின்றது; அறிவைப் பெருக்குகின்றது.

**(ஞானபாநு, செப்டம்பர் 1914, ப.143)**

வ உ சி யின் அரசியலறிவை - எழுத்தாற்றலை - ஆளுமைப் பண்பைப் பறைசாற்றும் விதத்தில் அமைந்துள்ள சிவத்தின் மதிப்பீடு ஓர் ஆவணமாகக் கருதத்தக்கது

மெய்யறத்தின் 'அரசியல்' பகுதியில் கூறப்பெற்றுள்ள கருத்துகள் அன்றைய அன்னிய அரசின் ஆட்சியாளரிடையே மாறானதொரு தாக்கத்தை ஏற்படுத்தியது. வியப்புக்குரிய அத்தாக்கம் அறியப்பட வேண்டிய ஒன்றாகும்.

இந்த அறநூலிலும் அரசாங்க விரோதச் செய்திகள் இருக்குமோ என்று ஐயமுற்றது ஆங்கில அரசு; அதனால், தெளிவு பெறுதற்கு அரசாங்கத் தமிழ் மொழிபெயர்ப்பாளரிடம் இந்நூலை அனுப்பியது. குறிப்பாகப் பின்வரும் அடிகள் ('தொழில் அறிதல்' அதிகாரத்தில் வருவன) கோடிடப்பெற்று விளக்கம் கேட்கப் பெற்றது

'அரியநற் றொழில்சில வறிதலோர்க் கடனாம்'
'படைக்கல மனைத்தும் பண்பொடு பயில்க'
'படைவகுத் தமர்செயு நடையெலா மறிக'
'புவிகடல் விண்மிசை போவன வூர்க'
'எவ்வகை யுருவு மெடுத்திடப் பழகுக'
'உழவுவா ணிகங்கைத் தொழில்சில வறிக'

இந்த அடிகளிலும் பிறவற்றிலும் அரசாங்கத்திற்கு எதிரான கருத்துகள் இல்லையென்றும் அதனால் மேல் நடவடிக்கைகளுக்கு அவசியம் இல்லையென்றும் அரசின் தமிழ் மொழிபெயர்ப்பாளர் தம் கருத்துரையில் தெரிவித்துள்ளார் (என். சம்பத் - பெ.சு மணி, வ.உ.சிதம்பரம்பிள்ளை, ப 237).

வ உ சி.யின் அரசியல் ஞானம்பற்றிய சிவத்தின் மதிப்பீடு எத்துணைப் பொருத்தமானது என்பதையே அன்னிய அரசின் கலக்கமும் தெளிவுபெற மேற்கொண்ட முயற்சியும் விளக்குகின்றன

அந்தணவியலில் அரசருக்கும் அந்தணருக்கும் உள்ள வேறுபாடு எடுத்துரைக்கப் பெற்றுள்ளது

அதிகாரம் அமைத்தலில் ஒரு புதுமையைக் கையாளுகின்றார் வ.உ.சி. இல்வாழ்வியலில் 'இல்லமமைத்தல்', 'உயிர்த்துணை யாளுதல்', 'பொதுமகனை விலக்கல்', 'தன்னைப் பேணல்', 'முன்னோரைப் பேணல்' முதலான அதிகாரங்களையும் அரசியலில் 'உரை நூலாளுதல்' என்னும் அதிகாரத்தையும் புதுமையாகப் படைத்துக் காட்டியுள்ளார். எந்த அறநூலிலும் சொல்லப்பெறாத கருத்தமைந்த 'இல்லமமைத்தல்' என்னும் அதிகாரத்தை வ.உ.சி படைத்தளித்துள்ளார். இது அவரது தனிச்சிறப்பாகும். 'பொது மகனை விலக்கல்', 'தன்னைப் பேணல்' - இவை வ.உ.சி.யின் மாறுபட்ட சிந்தனை வெளிப்பாடுகள்.

''சுருங்கச் சொல்லின், இப்புத்தகம் மிகச் சிறந்தது என்பதிலும் அனைவரும் படிக்க வேண்டியது என்பதிலும் சந்தேகம் இல்லை. பள்ளிக்கூடங்களில் மாணவர்கட்கு இந்நூல் பாடப்புத்தகமாக வைக்கப்படுதல் நன்று'' என்பார் சிவம் (ஞானபாநு, செப்டம்பர் 1914, ப.143).

இந்நூலின் தனித்தன்மை பற்றிய செல்வக் கேசவராயர் கருத்து குறிக்கத் தக்கது:

> *முதுமொழிக் காஞ்சி போன்று திட்பமும் நுட்பமுஞ் சிறந்த இழுமென்மொழியால் விழுமிய பொருள் உரைத்தலால் இந்நூல் 'தோல்' என்னும் வனப்பு வாய்ந்தது. தமிழ்ப் புலவரேயன்றி இங்கிலீஷ் படித்த புலவரிற் பலரும் இந்நூலின் திறத்தை மெச்சுவர் என்பது துணிவு. ஒருமுறை கண்ணுறுவோர்க்கு இந்நூலின் அருமை தானே புலப்படுமாதலால், அதனை இங்கு விரிப்பது மிகையாம். இந்நூல் நின்று நிலவுக என்பது என் வேண்டுகோள்.*
>
> **(மனம் போல வாழ்வு - ஐந்தாம் பதிப்பு, ப.70)**

ஒரு சிறந்த கவிஞன் தனக்கு முன்னே வாழ்ந்த கவிஞர்களின் கருத்துகளை ஏற்றுக்கொண்டு நயம்படத் தம் மொழியில் வழிமொழிந்து பேசுதல் இயல்பு இவ்வாறே சங்க இலக்கியங்களில் - குறிப்பாக நீதி நூல்களில் ஆழ்ந்த பற்றுடையவரான வ.உ.சி. தம் முன்னோர் கூறிய கருத்துகளை உள்வாங்கிக் கொண்டு, தம் காலத்து மக்களுக்கு விளங்கும் வகையில் 'மெய்யறம்' என்னும் இந்நூலாகப் படைத்திருக்கிறார். வ.உ.சி என்னும் மனிதநேய, சமூகச் சீர்திருத்தச் சிந்தனையாளரை இந்நூல் நன்கு வெளிப்படுத்திக்காட்டுகிறது

## மெய்யறிவு (1915)

நீதிநெறி ஒழுக்கப் பண்புகளை வலியுறுத்தும் நோக்கில், வ.உ.சி. இயற்றிய மற்றொரு செய்யுள் நூல் மெய்யறிவு. இந்நூலில் தாம் கற்றுத் தேர்ந்து தெளிந்த சமய, மெய்யுணர்வு, அறஇயல் உண்மைகளை அவர் வடித்துத் தந்துள்ளார். இந்நூலின் தோற்றம் குறித்து நூலின் முன்னுரையில் வ.உ.சி. கூறியுள்ளதாவது:

> இராஜநிந்தனைக் குற்றத்திற்காக யான் நாடு கடத்தல் தீர்ப்புப் பெற்றுக் கண்ணனூர்ச் சிறையில் வசித்த காலத்தில் என் பக்கத்தில் வசித்துக் கொண்டிருந்த மற்ற குற்றவாளி களுக்குப் பல பாவங்களையும் அவற்றால் இம்மையிலும் மறுமையிலும் விளையும் கேடுகளையும் அவற்றை நீக்குதற்குரிய மார்க்கங்களையும் அடிக்கடி யான் எடுத்துக் கூறுவதுண்டு. ஒருநாள் அக்குற்றவாளிகளிற் சிலர், ''பல பாவங்களையும் தொகுத்துச் சில பாக்களாகச் செய்து கொடுத்தால் அவற்றை நாங்கள் மனப்பாடம் செய்துவைத்து அடிக்கடி நினைத்துக் கொள்வோம்'' என்று கூறினர். அவர் சொற்படி அன்றிரவு அந்நூலின் 'மறங் களைதல்' என்னும் அதிகாரத்திலுள்ள பத்து வெண்பாக்களையும் பாடி மறுநாள் அவர்களுக்குச் சொன்னேன். அவற்றை அவர்கள் மனப் பாடம் செய்த பின்னர் அவர்களது விருப்பப்படியே இந் நூலின் 'அறம் புரிதல்' என்னும் அதிகாரத்திலுள்ள பத்து வெண்பாக்களையும் பாடி மறுநாள் அவர்களுக்குச் சொன்னேன்.
>
> பின்னர் இவ்விருபது வெண்பாக்களையும் இரண்டு அதிகாரங்களாக்கி, அவற்றிற்கு முன்னும் பின்னும் சில அதிகாரங்களைச் சேர்த்து மொத்தம் நூறு வெண்பாக்களாக்கி அவற்றை 'மெய்யறிவு' என்னும் பெயருள்ள இந்நூலாக உருவகப்படுத்தினேன்.

**(வ.உ.சி., மெய்யறிவு - இரண்டாம் பதிப்பு, முதற் பதிப்பின் பாயிரம், ப.V)**

'தன்னையறிதல்', 'விதியியல் அறிதல்,' 'உடம்பை வளர்த்தல்', 'மனத்தையாளுதல்', 'தன்னிலையில் நிற்றல்', 'மறங்களைதல்', 'அறம்புரிதல்', 'தவஞ்செய்தல்', 'மெய்யுணர்தல்', 'மெய்ந்நிலை யடைதல்' என்னும் பத்து அதிகாரங்களையும் அதிகாரத்துக்குப் பத்து வெண்பாக்கள் வீதம் மொத்தம் நூறு வெண்பாக்களையும் கொண்டது மெய்யறிவு.

> அறம், பொருள், வீடு என்பவற்றைப் பற்றித் தற்காலத்து மாந்தரிற் பலர் கொண்டுள்ள பொய்யறிவைப் போக்கு

> கின்றமையால், இந்நூல் 'மெய்யறிவு' என்னும் பெயரைக்
> கொண்டது

என்று நூலின் பெயர்க்காரணத்தைச் சுட்டும் கலியாண சுந்தர யதீந்திரர், இந்நூல் தி. செல்வக்கேசவராயர் முன்னிலையில் அரங்கேற்றப் பெற்றது என்னும் அரிய செய்தியையும் குறித்துள்ளார் (ப vii).

> அறத்தைச் சரியாகப் புரிதலும், பொருளை நியாயமாக ஈட்டலும், வீட்டை நேராக அடைதலும், அவற்றிற்கு அனுகூலமான நிலைகளை எய்தலும் இந்நூலைக் கேட்போர் பெறும் பயன்களாம்
>
> ( ப.8)

என்று குறிப்பிடும் கலியாண சுந்தர யதீந்திரர், இந்நூல் சில புதிய கோட்பாடுகளைக் கூறுகிறது என்றும் சுட்டுகிறார். வ.உ.சி இந்நூலின் பாயிரத்தில் "அறத்தையோ, பொருளையோ, வீட்டையோ, அவற்றை எய்தற்கு ஏற்ற நிலைகளையோ அடைய அவாவுகின்ற ஆண்பாலரும் பெண்பாலரும் இந்நூலைக் கேட்டற்கும் கற்றற்கும் உரியர்" என்று குறிப்பிடுகின்றார் ( ப 6)

'உடல், உள்ளம், உயிர் என்ற மூன்றின் சேர்க்கைதான் நாம்', 'உடலைப் புறக்கணித்தல் தவறு', 'ஒருவன் முதலில் தான் யார் என்பதை அறிதல் வேண்டும்', 'மறம் களையவேண்டும்' என்பன போன்ற பல்வேறு கருத்துகள் இந்நூலில் விளக்கப் பெற்றுள்ளன

சமயம், மெய்யுணர்வியல், அறவியல் பற்றிய உண்மைகள் சிதம்பரனாரின் உள்ளத்தோடும் உயிரோடும் ஒன்றிக் கலந்தவை அதனால்தான் அவர் சிறையிலிருந்தபோது, பிற குற்றவாளிகளின் அவல நிலைக்குத் தாழ்ந்துவிடாமல், அவர்களையும் உயர்த்தும் பணியில் ஈடுபட முடிந்தது.

தன்னை உயர்ந்த நிலைக்கு உயர்த்துபவன் தான்தான்- தன்னுடைய முயற்சிதான் - தன்னுடைய ஆளுமைப் பண்புதான் என்னும் கருத்தை வாய்ப்பு அமையும் போதெல்லாம் எடுத்துரைப்பது வ உ.சி.யின் அடிப்படை இயல்பாகும். அதை இந்நூல் முழுவதும் காண முடியும்.

ஒருவன் உயர்ந்த குடியில் பிறக்கவில்லை என்றாலும் தான் இருக்கும் சூழல் முன்னேறுவதற்கு வாய்ப்பானதாக இல்லை யென்றாலும் அதை விதி என்று விட்டுவிடாமல், அந்தச் சூழலை முயன்று எதிர்த்து முன்னேற வேண்டும் என்னும் கருத்தை,

*விதிவிதியென் றாழ்கின்றார் வீணாகத் துன்பில்*
*விதிவிதிக்கத் தம்மையன்றி வேறு - பதியொருவன்*
*உண்டென்று நம்பி யொருசிலரிங் கண்ணாரிற்*
*கண்டறியேன் பேதையரைக் காண்.*

**( விதியறிதல், பாடல்-1, ப.9)**

என்னும் செய்யுள் உணர்த்துகிறது. நம் விதியை முடிவு செய்ய வேண்டியவர்கள் நாம்தான் என்னும் உயர்ந்த கருத்தை இதன் வழி விளக்குகிறார் வ உ.சி

இவ்வுலகத்திலுள்ள எல்லா உயிர்களும் கடவுளின் குழந்தைகள், எல்லா உயிர்களின் உடல்களும் கடவுளின் வீடுகள் எனவே, எவ்வுயிர்க்கும் தீங்கு செய்யக்கூடாது என்னும் கருத்தை விளக்கும்,

*இவ்வுலகி னிற்கின்ற வெவ்வுயிரு மீசன்மக*
*வெவ்வுடலு மீசனில மென்றெண்ணி - யெவ்வுயிர்க்கு*
*மூறொன்றுஞ் செய்யா துயர்வடைவாய் மெய்சேர்க்கு*
*மாறென்று காண்பா யது.*

**( தவஞ்செய்தல், பாடல்-8, ப.68)**

என்னும் செய்யுள் படித்து மகிழத்தக்கது.

'டர்பன் விவேகபாநு' என்னும் இதழில் வெளிவந்த இந்நூலைப் பற்றிய மதிப்புரை, இந்நூலின் சிறப்பினைச் சீர்தூக்கிக் காட்டுகிறது. ''இந்நூல் போன்ற தெளிவான நூல்களே இக்காலத்துக்கு அவசியம் வேண்டப்படுவனவாம். இந்நூலை ஓதி உணர்ந்து, அவ்வாறே நடக்கப் பயிலுதல் தமிழ் மக்கள் கடனாம் ஏனெனில், இந்நூல் பயிலப்பெற்ற தமிழ் மக்களே தமிழ் மக்கள். அவர்கள் அனுபவிக்கும் இன்பமே இன்பம்'' (மனம் போல வாழ்வு - ஐந்தாம் பதிப்பு, ப.72)

உலகம் மேம்படுநாளே நாம் வீடடையும் நாள்; பல்லுயிரனைத்தையும் உயர்த்தப் பாடுபடுபவரே சமயம், மெய்யுணர்வு, அற இயல் ஆகியவற்றின் விழுமிய பொருளைத் தேர்ந்து தெளிந்தவர்கள் என்று கூறியதோடு அமையாது வாழ்ந்தும் காட்டியவர் வ.உ.சி தம்மைப் போலவே, தம் நூலைப் பயில்பவர்களும் ஒழுக்க நெறிகளைக் கடைப்பிடித்து ஒழுக வேண்டும் என்ற உயரிய எண்ணத்தின் வெளிப்பாடாகிய இந்நூல் வ உ சி யின் படைப்பிலக்கிய ஆற்றலைப் பல்லாற்றானும் வெளிப்படுத்தியுள்ளது.

## பாடல் திரட்டு (1915)

வ உ.சி யின் 'பாடல் திரட்டு' என்னும் நூல் அவர் எழுதிய தனிப் பாடல்களின் தொகுப்பாகும் சிறை செல்வதற்குமுன் வ.உ சி எழுதிய பாடல்கள் இதன் முதல் பகுதியாகவும் சிறையிலிருந்த காலத்தில் எழுதிய பாடல்கள் இரண்டாம் பகுதியாகவும் அமைந்துள்ளன.

இந்நூலில் இடம் பெற்றுள்ள பாடல்கள் வ உ.சி.யின் பல்வேறு உணர்வுகளின் தெறிப்புகளாக விளங்குகின்றன அப்பாடல்கள் வெளிப்படுத்தும் செய்திகள் பற்றி வ.உ.சி பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

*யான் என்ன சமயத்தைச் சேர்ந்தவனென்பதையும், எனது மனம் எதனை முதன்மையாகப் பற்றி நிற்கின்ற தென் பதையும் யான் சிறையில் எனது காலத்தை எவ்வாறு கழித்தேன் என்பதையும், எனது சுற்றத்தார்களிலும் நண்பர் களிலும் யார் யாரை எவ்வெவ்வாறு நேசித்து வருகிறே னென்பதையும் எனக்கு அவர்கள் என்ன என்ன உதவிகள் செய்துள்ளார்களென்பதையும் யான் எனது சிறைவாசத்தில் எவ்வித மேம்பாட்டை அடைந்துள்ளேன் என்பதையும் வெளிப்படுத்தும்.*

**(வ.உ.சி., பாடல் திரட்டு, பாயிரம், பக். iii - iv)**

பாடல் திரட்டில் இடம்பெற்றுள்ள பாடல்கள் பல திறத்தன இறை நெறிப் பாடல்கள், அறநெறிப்பாடல்கள், வாழ்த்துப் பாடல்கள், இரங்கற் பாடல்கள், புலம்பல் பாடல்கள், தன்னுணர்ச்சிப் பாடல்கள், பல்சுவைப் பாடல்கள் என்று அவற்றை வகைப்படுத்தலாம். சிறையில் இருந்த காலத்தில் பாடியவையே மிகுதியாக உள்ளன அவற்றில் பல உயிரோட்டமானவை; கவித்துவம் நிறைந்தவை சில காண்போம்

வ.உ சி தம் முதல் மனைவியான வள்ளியம்மையை மிகவும் நேசித்தவர். அவருடைய மறைவு வ.உ.சி.யைப் பெரிதும் பாதித்தது. அந்தத் துயரம் பல பாடல்களாக மலர்ந்தது நல்லியல்புகளால் நிறைந்தவரான வள்ளியம்மை பற்றி வ உ சி எழுதிய இருபது பாடல்கள் பாடல் திரட்டில் இடம் பெற்றுள்ளன. அவருடைய உயரிய பண்புகளையும் மேன்மையான செயல்களையும் அவை புலப்படுத்துகின்றன

''என்னுடைய நேயர்களு மேழைபர தேசிகளு
மென்னுடைய வீடுவந்தா லேந்திழைதான் - தன்னுடைய
பெற்றோர்வந் தார்களெனப் பேணி யுபசரிப்பாள்
*கற்றோரு முள்ளுவக்கக் கண்டு.''*

**(பாடல் திரட்டு, ப.10)**

வாழ்ந்த காலம் குறைவு என்றாலும் - வ.உ.சி யோடு வாழ்ந்த வாழ்க்கை சில ஆண்டுகளே என்றாலும் வரலாற்றில் பதிவான வாழ்க்கை வள்ளியம்மைக்குரியது. அன்பால் கசிந்து உருகி, கண்ணீர் மல்கி வ.உ.சி. பாக்கள் புனைந்தமை பொருந்தும் என்பதையே மேற்குறித்த அழகிய பாடல் உணர்த்துகிறது.

சிறை வாழ்க்கையில் ஒருநாள் - கேழ்வரகுக் கூழை உண்ண நேர்ந்த நாள் - வ.உ.சி.யின் மனத்தில் பின்னோட்டமாகக் கடந்த காலத்தின் இனிய நினைவுகள் - அந்த நினைவுகளின் தாக்கத்தில் வ.உ.சி.யின் கவியுள்ளம் பதிவு செய்துள்ள கவிதை அழிவற்றது.

''*முக்கனியின் சாறெடுத்து முந்திரிஏ லம்வாதம்*
*அக்காரம் தேன்பாலோ டட்டூட்டக் - கக்குமென்னா*
*கேழ்வரகின் கூழுண்டல் கேடறியாய் நின்மலர்த்தாள்*
*வாழ்வதொக்கும் கற்காட்டில் வந்து.''*

(பக். 45 - 46)

தம் இரண்டாவது மனைவியாகிய மீனாட்சி அம்மைக்கு வ.உ.சி. எழுதிய இக்கவிதை, அவருடைய கசப்பான சிறை அனுபவங்களில் ஒரு துளி, ஒரு சிறிய வெளிப்பாடு. முக்கனிச் சாறு, தேன் கலந்த பால் என்று சுவையூட்டப் பெற்ற அமிழ்தை மறுத்த மனம், சுவையற்ற கேழ்வரகின் கூழை உண்ண நேர்ந்த அவலம் கண்களைப் பணிக்கச் செய்கிறது.

''*தமிழ் வித்வான்கட்குத் தாய் போன்ற பரோபகாரி*''

என்று கந்தசாமிக் கவிராயரால் போற்றப் பெற்றவர் வ.உ.சி. (விவேகபாநு, சனவரி 1905, ப.6). இது, இருபதாம் நூற்றாண்டின் தொடக்க ஆண்டுகளில் வ.உ.சி.யின் வாழ்க்கை நிலை.

''எனது தேயத்தார்களிலும் எனது நண்பர்களிலும் பலர் என்னிடத்திற்கு வரவும் என்னைக் காணவும் என்னோடு பேசவும் அச்சப்பட்டோ, அச்சப்பட்டதாக நடித்தோ என்னைக் கனப்படுத்தச் செய்ததும்'' (மெய்யறம் - முதல் பதிப்பு, 1914, 'நன்றி கூறல்', பக்க எண் இல்லை) - இது, வ.உ.சி.யின் குரல். கனத்த நெஞ்சோடு அவர் வெளிப்படுத்தும் துயரம் நிறைந்த அனுபவம். இருபதுகளில் இதுவே வ.உ.சி.யின் வாழ்க்கை.

காலம்தான் எத்துணை வேகமாக மாறுகிறது. ஒரு காலத்தில் வள்ளலாகப் போற்றிய அதே மனிதரைக் கண்டும் காணாமலும் ஒதுங்கும் அல்லது ஒதுக்கும் மனநிலை; மனிதர்கள் எவ்வளவு எளிதாகக் கடந்த காலத்தை மறந்து விடுகிறார்கள். அந்தப் புறக்கணிப்பும் அவமதிப்பும் ஏற்படுத்திய பாதிப்பு, வ.உ.சி என்னும்

கவிஞரின் நெஞ்சின் சோகத்தையெல்லாம் சுமந்து கொண்டு கவிதையாக வெளிப்பட்டது

*''வந்தகவி ஞர்க்கெல்லாம் மாரியெனப் பல்பொருளும்*
*தந்த சிதம்பரமன் தாழ்ந்தின்று - சந்தமில் வெண்*
*பாச்சொல்லிப் பிச்சைக்குப் பாரெல்லாம் ஓடுகிறான்*
*நாச்சொல்லும் தோலும் நலிந்து.''*

(ப.57)

கொடுத்துச் சிவந்த கரங்கள், எடுத்துச் சிவக்கப் பாரெல்லாம் ஓடிய அவலத்தை அறியும்போது, நெஞ்சம் கலங்கித் தவிக்கிறது. வ உ சி யின் நொறுங்கிய உள்ளத்தின் துயர வெளிப்பாடான இப்பாடல் படிப்பவர் மனங்களில் ஆழ்ந்த பாதிப்பை ஏற்படுத்துகின்றது

கல்லுடைத்து, செக்கிழுத்து நிமிர்ந்தபோது, கப்பல் கம்பெனியின் கடன் சுமை தோள்களை அழுத்த, வ உ.சி யின் சோர்ந்த உள்ளம் உறுதிப்படுகிறது. தொடர்ந்து வந்த இடர்கள் மனத்தை வலிமையாக்குகின்றன வ.உ.சி.யின் உறுதி கொண்ட உள்ளம் உரத்த குரலில் பாடுகிறது.

*''என்மனமும் என்னுடம்பும் என் சுகமும் என்னறமும்*
*என்மனையும் என்மகவும் என்பொருளும் - என்மணமுங்*
*குன்றிடினும் யான்குன்றேன் கூற்றுவனே வந்திடினும்*
*வென்றிடுவேன் காலால் மிதித்து.''*

( ப. 81)

கூற்றுவனையே எதிர்கொள்ளும் துணிவு கொண்ட வ உ.சி.யின் மனநிலை நமக்குப் புரிகிறது என்றாலும், அனைத்தும் இழந்த அவல நிலையையும் எது அழிந்தாலும் நான் அழியேன், வீழேன் என்ற நெஞ்சின் உரத்தையும் ஒருங்கே காட்டும் இப்பாடலைப் படிக்கும் போது, வ உ சி.யின் மனத்திண்மை சிலிர்ப்பை ஏற்படுத்தும் அதே நேரத்தில் பாடலில் இழையோடும் சோகம் நம்மை நெகிழ்த்துகிறது.

அன்புக்குரிய மனைவி மக்களின் பிரிவால் நேர்ந்த தனிமை வ.உ.சி யைப் பெரிதும் வருத்தியது அவர் பாடல்களில் பல அவ்வருத்தத்தின் எதிரொலியாக அமைந்தன.

*''கூட்டினை விட்ட குரீஇஇக் குஞ்சேநீ*
*வீட்டினை விட்ட மிகையால்இக் -காட்டினில்*
*துன்பமுறு கின்றேன்போல் துன்பமுறு கின்றனையோ*
*இன்பமுறும் சுற்றம் இழந்து.''*

( ப. 83)

இன்பம் தரும் சுற்றத்தைப் பிரிந்து தான் வருந்துவதைப் போலவே இக்குருவியும் வருந்துகிறதோ என்று மனமுருகிப் பாடும் பாடலில் நிறைந்துள்ள ஏக்கம் நம்மையும் பற்றுகிறது; வ உ.சி.யிடம் பரிவு கொள்ளச் செய்கிறது.

மீனாட்சி சுந்தரம் - வ.உ.சி.யின் தம்பி. அவரை மிகவும் நேசித்தவர். தூய அன்பால் இணைந்த அன்புடை நெஞ்சங்களிடையே நிலவும் உன்னதமான நட்புணர்வைச் சகோதர உறவில் காட்டிய மேலோன்.

*''சோதரனே மீனாட்சி சுந்தரனே எற்கரிய*
*ஆதரவா வந்துதித்த அப்பனே - காதலரின்*
*நட்பருமை காட்டற்கு நம்அரணுள் உற்றனையோ*
*...... .... .... .... .... ....''*

(ப. 51)

வ.உ.சி.யின் பாடல் அடிகள் மீனாட்சி சுந்தரம் என்னும் அன்பால் நிறைந்த - உடன் பிறந்தோருடனும் நட்பு 'கொள்ளுதல் கூடும் என்பதை நிலைநாட்டிய மாமனிதரை நமக்கு அறிமுகம் செய்கின்றன. 'காதலரின் நட்பருமை' என்பது நுட்பமான சொல்லாட்சி.

வ.உ சி.க்கு விதிக்கப்பெற்ற 'இரட்டை ஆயுள் தண்டனை' என்னும் கொடிய தீர்ப்பைத் தாங்கும் மனவலிமை அந்த அன்பு நெஞ்சத்திற்கு இருக்கவில்லை. தன்னை மறந்தார்; தன் நாமம் கெட்டார்; அண்ணனுக்கு விதிக்கப்பெற்ற தண்டனை ஒன்றே நினைவானார்; அறிவு திரிந்தார். அன்புத் தம்பியின் நிலை அறிந்த வ.உ.சி அதிர்ந்தார். அவர் உள்ளம் கலங்கித் தவித்தது; கவிதை பிறந்தது.

*''அண்ணன் பகைவர் அரணுள் அழிவனெனும்*
*எண்ணம் உனதறிவை ஏய்த்ததோ - கண்ணன்*
*பகைவர் அரண்புகுந்து பற்பலமுன் செய்த*
*வகையை மறந்தனையோ மற்று.''*

(ப.51)

பாடலில் பொதிந்துள்ள ஆழ்ந்த துயரம் நம்மைத் தடுத்து நிறுத்துகிறது. கண்களில் நீர்ப் பெருக்கு; இப்படியும் ஓர் அன்பா என்ற வியப்பு, நம்மை மறக்கின்றோம். மீனாட்சி சுந்தரம் என்னும் அன்பே உருவான மனிதர் நம் மனத்தில் மெல்ல நுழைகிறார்; நெடிதோங்கி நிற்கிறார்.

மனநலம் திரிந்தவரான மீனாட்சி சுந்தரம் இறுதிவரையில் பித்தராகவே இருந்து, வ உ.சி.யின் மறைவுக்குப் பிறகு 1943இல் காலமானார் (வ.உ.சி , சுயசரிதை, அடிக்குறிப்பு, ப.5).

சிறை - வ.உ.சி.யின் போதிமரம். அது, வாழ்க்கையைப் புதிய கோணத்தில் கற்றுத் தந்தது. கடந்த காலத்தின் இனிய நினைவுகளும் நிகழ்காலத்தின் கசந்த அனுபவங்களும் கலந்த நிலை அவருடைய சிறை வாழ்க்கை. 'உள்முகம் நோக்கும் உபாயம்' அறிந்த வ.உ.சி.யை அவை புடம் போட்டன; சுடச் சுட ஒளிர்ந்தார். உள்ளத்தின் உண்மை ஒளி வாக்கினிலே பட்டுத் தெறித்துக் கவிதைகளாய்ச் சிதறியது. அவற்றில் சிலவே இங்குச் சான்றுகளாயின.

## சுயசரிதை (1946)

சுயசரிதை இரு பகுதிகளாக அமைந்துள்ளது. முதல் பகுதி வ.உ.சி. கோவைச் சிறையில் இருந்தபோதும் இரண்டாம் பகுதி விடுதலைக்குப் பிறகும் எழுதப் பெற்றவை. பிறப்பு முதல் கோவைச் சிறைக்குச் செல்லுதல் வரையிலான செய்திகள் முதல் பகுதியில் இடம் பெற்றுள்ளன. கோவைச் சிறை வாழ்க்கையும் கண்ணனூர்ச் சிறை அனுபவங்களும் பகுதி இரண்டில் விளக்கப் பெற்றுள்ளன. 'லோகோபகாரி' இதழின் ஆசிரியராக இருந்த பரலி. சு. நெல்லையப்பரின் வற்புறுத்தலினால் உருவானதே முதல் பகுதி. 'காந்தி', 'தினமணி' 'தினசரி' முதலிய புகழ் மிக்க இதழ்களின் ஆசிரியராக விளங்கிய டி.எஸ். சொக்கலிங்கம் வேண்டிக் கொண்டதற்கு இணங்கி இரண்டாம் பகுதியை எழுதி முடித்தார் வ.உ.சி. (சுயசரிதை, பக். 1, 113).

வ.உ.சி.யின் பிறப்பு முதல், கண்ணனூர்ச் சிறையில் இருந்து அவர் விடுதலையானது வரையிலான - ஏறக்குறைய நாற்பது ஆண்டுக்கால வரலாறு (1872-1912) சுயசரிதையில் இடம் பெற்றுள்ளது.

விடுதலை இயக்கத்தின் உன்னதமான காலத்தில் வாழ்ந்தவரான வ.உ.சி. சுதேசி இயக்கத்தில் முழுமையாகத் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர்; வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்வுகள் பலவற்றில் பங்கு கொண்டவர்; அவருடைய வாழ்க்கை வரலாறு என்பது ஒரு காலகட்டத்து அரசியல், சமுதாய நிகழ்வுகளோடு பின்னிப் பிணைந்தது. மதிப்பு மிக்க அந்த வாழ்க்கை வரலாறு பல அரிய செய்திகளின் தொகுப்பாகி தகவல் களஞ்சியமாக விளங்குகிறது.

வ.உ.சி. வழக்கறிஞரானமை, குற்றவியல் (கிரிமினல்) வழக்குகளில் வாதாடுவதில் அவருக்கு இருந்த வல்லமை, அவருடைய ஆன்மிக நாட்டம், சென்னை இராமகிருஷ்ணர் திருமடத்தின் தலைவரான இராமகிருஷ்ணானந்தர் சந்திப்பும்

சுதேசியம் பற்றிய சிந்தனையும், தூத்துக்குடியில் அபேதானந்தரையும் பிரமானந்தரையும் வரவேற்றமை, 'கைத்தொழில் வளர்சங்கம்', 'சுதேசிய நாவாய்ச் சங்கம்', 'சுதேசியப் பண்டகசாலை', 'தரும சங்க நெசவு சாலை' முதலியன தொடங்கி நடத்தியமை, கப்பல் ஓட்டியமை, சூரத் காங்கிரசில் கலந்து கொண்டமை, புதிய கட்சியின் (தீவிரவாத இயக்கம்) தொடக்கம், அதன் சென்னைக் கிளையின் செயலாளராதல், கோரல் ஆலைத் தொழிலாளர்கள் வ.உ.சி தலைமையில் நடத்திய வேலை நிறுத்தம், இவருடைய சொற்பொழிவுகள் ஏற்படுத்திய மக்கள் எழுச்சி, சுதேசி இயக்கம் மக்கள் இயக்கமாதல், வெள்ளையரின் அச்சம், விபின் சந்திர பால் விடுதலை நாள் விழா, வ உ.சி, சுப்பிரமணிய சிவம் கைது, வ.உ.சி.க்கு விதிக்கப்பெற்ற இரட்டை ஆயுள் தண்டனை, சிறை அனுபவங்கள் - என்று வளரும் சுயசரிதை வ.உ.சி யின் அரசியல் வாழ்க்கையைப் பல கோணங்களில் வெளிப்படுத்துகிறது

வ.உ.சி.யின் மறைவுக்குப் பிறகு, அவர் மகன் வ.உ.சி. சுப்பிரமணியத்தின் முயற்சியால் சுயசரிதை நூலாக வெளிவந்தது.

''வ.உ.சி.யின் சுயசரிதை என்ற நூல் அவரது சொந்தச் சரிதை மட்டுமன்று; திலகர் சகாப்தத்தின் முற்பாதியில் தமிழகத்தில் நடந்த விடுதலைப் போரின் வரலாறுமாகும். அந்த வகையில் அதனை அரசியல் தஸ்தாவேஜு என்றும் கருதலாம். கவிதை வடிவம் பெற்றுள்ளதால் தமிழ் இலக்கியக் களஞ்சியத்திலேயும் சேர்க்கப்படத் தக்கதாகும்'' (விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாறு, ப 101) என்னும் ம.பொ.சி.யின் கருத்து இங்குக் குறிப்பிடத்தக்கது

தன்னுணர்வு, பெருமித உணர்வு, நகைச்சுவை, நையாண்டி, எனப் பல்வேறு வகைப்பட்ட உணர்வுகள் நிறைந்த தரமான இலக்கியப் படைப்பாக வ.உ.சி.யின் சுயசரிதை விளங்குவதைச் சான்றுகளின்வழி அறியலாம்.

மனைவி, தமக்குத் தோழியாக விளங்கிய தன்மையை வ.உ.சி சுயசரிதையில் அழகுற விளக்குகிறார்.

*''வடுக்கண் டொழிக்கும் மந்திரி யனையாள்*
*இத்தகை அறிவினள் என்னரும் பிழைகளை*
*எத்தகை உரியர் இயம்பினும் தன்னுடை*
*பொறிகளே காணினும் பொய்யெனும் பேதமை*
*செறிவுறக் கொண்டனள்; சிறப்புற நின்றனள்.''*

**(வ.உ.சி., சுயசரிதை, ப.32)**

(முதல்) மனைவியைத் தம் மனமுணர்ந்த தோழியாகக் காட்டும் நயத்தகு நாகரிகமும் அக்கருத்தைப் படிப்பவர்க்கு மிகச் சரியாகப் புலப்படுத்தும் கவிதை அடிகளும் நம்மை வியக்க வைக்கும் தன்மையனவாய்த் திகழ்கின்றன 'வடுக்கண் டொழிக்கும் மந்திரியனையாள்' என்பதன்மூலம் மனைவியின் அறிவுச் சிறப்பையும் 'பொறிகளே காணினும் பொய்யெனும் பேதமை செறிவறக் கொண்டனள்; சிறப்புற நின்றனள்' என்னும் அடிகள்வழி தமக்கும் தம் மனைவிக்கும் இடையே இருந்த நம்பகத்தன்மை நிறைந்த நட்புணர்வையும் வெளிப்படுத்திக் காட்டும் நயம் உணர்ந்து மகிழத் தக்கது

வ.உ.சி சிறையில் இருந்தபோது, சிறை அதிகாரி ஒருவன் வந்து அவருடைய ஆடையை அகற்றிச் சோதிக்கிறான்; பிறகு சென்றுவிடுகிறான். மீண்டும் வந்து உதவிகள் செய்கிறான். இந்நிகழ்ச்சி விவரிப்பு படித்தற்குரியது

*"........................................இவர் உடுத்திய*
*ஆடையை அவிழெனஅறைந்தனன்; தடியரென்*
*ஆடையை அவிழ்த்தனர்; 'அரைஞாண்' என்றனர்.*
*'அரைஞாண் எங்ஙனம் அங்குற்ற' தென்றான்*
*'அரைஞாண் என்றும் அங்குள' தென்றேன்*
*சென்றான் அத்துடன்; சிரித்தோம் நாங்கள்.*
*நின்றான், பார்த்தான், நினைந்தான், போயினான்."*

**(வ.உ.சி., சுயசரிதை, ப. 86)**

'நின்றான், பார்த்தான், நினைந்தான் போயினான்' என்னும் அடி சிலப்பதிகாரத்தில் ஊர்சூழ்வரிக் காதையில், 'நின்றாள் நினைந்தாள் .' என்று கண்ணகி பற்றி இளங்கோ கூறும் அடிகளை நினைவூட்டும் வகையில் அமைந்துள்ளது. சிலப்பதிகாரம் போன்ற இலக்கியங்களை ஆழ்ந்து கற்று அவற்றைத் தம் கவிதைகளில் பயன்படுத்தக்கூடிய ஆற்றல் கைவரப் பெற்றவர் வ.உ.சி. என்பதை இவ்வடி விளக்கி நிற்கிறது.

பின்னர் அதே சிறை அதிகாரி அவருக்கு உதவிகள் செய்கிறான். அவன் செய்த உதவிகளுக்கு ஒப்புமை கூறும்போது அழகிய உவமையைக் கையாள்கின்றார் வ.உ.சி.

*"பிறகெமை நெருங்கிப் பேணிப் பணிந்தெம்*
*சிறகென நின்று செய்தனன் உதவிகள்"*

(ப.86)

'எம் சிறகென நின்று' என்று கூறும்போது வள்ளுவர் காட்டும் 'உடுக்கை இழந்தவன் கை' நம் நெஞ்சில் நிழலாடுகிறது 'எம் சிறகென' என்னும் சொற்றொடர் மிகச்சிறந்த சொல்லாட்சியாக அமைந்து வ.உ சி யின் கவித் திறனைப் புலப்படுத்துகிறது

தமிழிலக்கியத்தில் தோய்ந்தவரான வ உ சி , மிகச் சிறந்த ஒப்புமைகளைத் தம் சுயசரிதையில் படைத்துக் காட்டுகிறார்.

வ.உ சி.க்கும் விஞ்சுவிற்கும் இடையே நடைபெற்ற உரையாடல், நாட்டுப்பற்றுக்கும் அதிகார மோகத்திற்கும் இடையே நடந்தது என்பதை உணர்த்த அவர் காட்டும் ஒப்புமை நினைக்கத் தக்கது

''அவனைக் கண்டிட அன்பொடு வருகென
அவனொரு கடிதம் அனுப்பினன் சிலர்க்கு
நானும் ஒருவனா நண்ணினேன் நிகழ்ந்தன
தேனும் சீயும் சேர்ந்த தொக்கும்''

( ப. 64)

அருந்தேனும் அருவருக்கும் சீழும் சேர்ந்ததை ஒத்தது அந்நிகழ்ச்சி என்று கூறும் அக்கவிதை அடிகள் சொற்சுருக்கம், உணர்வுப்பெருக்கம் ஆகிய இரண்டின் கலவையாய் நின்று படிப்பவரை மகிழ்விக்கின்றன.

வீரம் செறிந்த தம் வரலாற்றை வீறு கொண்ட சொற்களால் எழுதும்போது பல்வேறுவிதமான உணர்வுகளை வ உ.சி.யின் கவிதை அடிகள் வெளிப்படுத்துகின்றன.

சிறையில் அடைக்கப் பெற்ற வ உ.சி.யின் வலதுகாலில் விலங்கு பூட்டப்படுகிறது. துன்பம் நிறைந்த அந்த நிகழ்ச்சியைக்கூட நகைச்சுவையோடு வெளிப்படுத்துகின்றன அவருடைய எழுத்துகள்

தந்தான் வலதுகால் தண்டைகள் எமக்கே;
அரும்பொன் காலிடல் அபசார மாதலால்
இரும்பினை அணியுமென் றீந்ததைப் போன்றே

( ப.106)

நாட்டு விடுதலைக்காக எத்தகைய துன்பத்தையும் இன்முகத்தோடு தாங்கும் நல்லிதயத்தை அக்கவிதை அடிகள் நமக்குக் காட்டுகின்றன.

வ.உ.சி.யின் பெருமித உணர்வை வெளிக்காட்டும் பகுதிகளும் அவருடைய சுயசரிதையில் காணக்கிடக்கின்றன.

''மரத்தின் பட்டையென, வரையத் தக்க
உரத்த துணியில் உருப்படுத் தியநல்

காால்களில் லாத கைகளில் லாத
கால்சட்டை யொன்றும் கைச்சட்டை யொன்றும்
..................................................
தலைக்குல் லாவெனச் சாற்றுவ தொன்றும்
..................................................
மூன்றையும் அணிந்திடின் முண்டமே யாகத்
தோன்றுவ தல்லது சொரூபம் தோன்றா
..................................................
..................................................
..................................................
எம்பெயர் உயரவும் எம்முருத் தாழவும்
உடுத்தேம் அவற்றை உளங்கொடு....''

(ப.105)

'எம் பெயர் உயரவும் எம்முருத் தாழவும்' என்னும் அடி, ஆங்கிலேயரின் அடக்குமுறைக்கு ஆளாகியிருக்கும் நிலையிலும் வ.உ.சி என்ற தனிமனிதரின் மான உணர்வுக்கு ஊறு ஏற்படாத வகையில் அவருடைய எண்ணங்கள் இருந்தமையை மிகச் சரியான முறையில் புலப்படுத்துகின்றது.

தரம்குறைந்த ஆடையை அணியும் நிலை ஏற்பட்டதே என்று தம்மைத் தாமே தாழ்வாகக் கருதாமல், ஆடையின் தரம்தான் குறைந்ததே தவிர அதை அணியப்போகும் தான் தரத்திலே உயர்ந்தவன் என்றும் தான் அணிவதால் அந்த ஆடை உயர்வு பெறுகிறது என்றும் கருதும் ஊக்கமிகு மனிதனை நமக்கு அடையாளம் காட்டி நின்று வ.உ.சி.யின் சுயசரிதை என்னும் இப்படைப்பிலக்கியம் புதுப்பொலிவைப் பெறுகிறது

கொடூரமான சித்திரவதைகளைக் கூட எளிதாக எடுத்துக் கொள்ளும் உறுதி கொண்ட நெஞ்சினராக வ உ.சி.யைக் காட்டும் நிகழ்ச்சிகள் பல சுயசரிதையில் இடம் பெற்றுள்ளன.

சணல்கிழி இயந்திரத்தில் வேலை செய்ததால் வ உ சி.யின் கைத்தோல் உரிந்தது. அதைக் கண்ட சிறை அதிகாரி நடந்து கொண்ட முறையைக் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்.

''திங்கட் கிழமை ஜெயிலர்என் கைத்தோல்
உரிந்ததைப் பார்த்தான் உடன்அவன் எண்ணெய்
ஆட்டும் செக்கினை மாட்டிற்குப் பதிலாப்
பகலெலாம் வெயிலில் நடந்து தள்ளிட
அனுப்பினன்; அவனுடை அன்புதான் என்னே!''

(ப.116)

மாட்டிற்குப் பதிலாகத் தான் செக்கில் பூட்டப்பெற்ற நிகழ்ச்சியை விவரிக்கும்போது அக்கொடிய செயலின் துயரம் நிறைந்த உணர்வு களை வெளிப்படுத்தாமல், 'அவனுடை அன்புதான் என்னே' என்று ஜெயிலரின் மிருகத்தனமான செயற்பாட்டைக் கேலி செய்கிறார். அதன் மூலம் சிறை அதிகாரிகளின் கீழ்மைப் பண்புகளை வரலாற்றில் பதிவு செய்கிறார். தம் துன்பத்தைவிடவும் கொடுமைகள் நிறைந்த அந்நாளைய சிறை வாழ்க்கையின் அவலங்களை நாடறியச் செய்வதைக் காலத் தேவையாக அவர் கருதினார்.

ஆனால், சிறையில் வ.உ.சி. செக்கிழுத்த செய்தி அறிந்தோர் அதிர்ந்தனர். நெஞ்சு பொறுக்காத பாரதி,

*''மேலோர்கள் வெஞ்சிறையில் வீழ்ந்து கிடப்பதுவும்*
*நூலோர்கள் செக்கடியில் நோவதுவுங் காண்கிலையோ''*

**(சுதந்திரப் பயிர், பாரதியார் கவிதைகள்)**

என்று இறைவனிடம் முறையிடுகிறார். அத்துடன், வ.உ.சி. செக்கிழுத்த நிகழ்ச்சியை 'இந்தியா' இதழில் வெளியிட்டு அந்நிகழ்வை வரலாற்றில் பதிவு செய்தார்.

> கைகளிலும் கால்களிலும் விலங்கிடப்பட்ட நிலையில் வ.உ.சி. செக்கிழுத்தார் என்ற செய்தியைப் பாரதியார் 'இந்தியா' இதழில் (28.11.1908) வெளியிட்டார். இவ்வாறு கொடுமையாக நடத்தப்பட்டதை நினைத்தால் உள்ளம் துடிக்கிறது; எழுதும்பொழுது கைநடுங்குகிறது என்று பாரதியார் உணர்ச்சி அலைமோதச் சித்திரித்துள்ளார்.

**(என். சம்பத் - பெ.சு.மணி, வ.உ.சிதம்பரம்பிள்ளை, ப. 185)**

சுயசரிதையில் இடம்பெறும் வ.உ.சி.யின் சிறை அனுபவங்கள் தனியே - விரிவாக ஆராயப்பட வேண்டியவை. விடுதலைப் போரின் தொடக்க காலத்தில் அன்னிய ஆட்சியாளரால் இந்திய அரசியல் தலைவர்கள் எந்த அளவிற்குக் கொடுமையாக நடத்தப்பட்டனர் என்பதை அறிதற்கு அது பயன்படும்.

# 9
# ஆளுமைத்திறன்

**வ.**உ.சி.யின் தமிழ்ப்பணிகளை - அவற்றின் ஊடே புலப்படும் தமிழ் ஆளுமை வீச்சின் திறத்தை எண்ணும்போதெல்லாம் தவிர்க்க இயலாமல் அவர் வாழ்ந்த காலத்தையும் நினைவில் கொள்ள வேண்டியுள்ளது.

அறியாமை இருளில் முடங்கிக் கிடந்த மக்கள் கூட்டத்தை நீண்ட உறக்கத்தில் இருந்து விழித்தெழச் செய்தவர் வ உ.சி தம்முடைய வலிமை மிக்க பேச்சாற்றலால் தமிழகத்தில் புதியதொரு எழுச்சியை ஏற்படுத்தியவர், பாமர மக்களுக்கு அரசியல் அறிவை ஊட்டி அவர்களைச் சிந்திக்கப் பழக்கியவர்; விடுதலை இயக்க வரலாற்றில் தமிழகத்தைப் பொறுத்தவரையில் முதன் முறையாக 'பொது மக்கள் கருத்து' என்ற ஒன்றை உருவாக்க முனைந்தவர்; தம்முடைய பேச்சாற்றலை முழுவீச்சில் அதற்குப் பயன்படுத்தி வெற்றி கண்டவர். **தம்முடைய 'முரசம் போன்ற பேச்சால்', 'மேடைப் பேச்சு' என்ற ஒரு புதிய கலையைத் தமிழுக்கு உருவாக்கி வழங்கியவர். இது வ.உ.சி.யின் தமிழ் ஆளுமையின் தலையாயதொரு கூறு.**

வ.உ.சி. தனி மனித மேம்பாட்டில் அக்கறை கொண்டவர்; ஒவ்வொரு மனிதனும் தன்னை நெறிப்படுத்திக் கொள்ள வேண்டும், அதன்வழி அவன் வாழ்வு நலம்பெற வேண்டும் என்று விரும்பியவர். தனிமனித ஒழுக்க மேன்மை அவன் சார்ந்த குடும்பத்தையும் அவன் வாழும் நாட்டையும் சென்றடையும் வலிமை சேர்க்கும் என்பது அவருடைய அசைக்க முடியாத நம்பிக்கையாக இருந்தது.

இளவயது முதலே அவருள் கனன்றுகொண்டிருந்த ஆன்மிக நாட்டம் தனிமனித வாழ்வின் உயர்வுபற்றிச் சிந்திக்கத் தூண்டியது. ஆன்மிக உணர்வுகளில் தோய்ந்த அவர், அதில் ஆழ்ந்த கவனம் செலுத்தினார். 'எண்ணங்களே வாழ்க்கை' என்பதை உணர்ந்து தெளிந்த அவர், மக்களை நெறிப்படுத்துவது தம் தலையாய கடமை என்று கருதினார்

அதன் வெளிப்பாடே அவருடைய ஆன்மிகக் கட்டுரைகள். எளிதில் புரிந்துகொண்டு, நடைமுறைப்படுத்தும் வண்ணம் - தம்முடைய பேச்சைப் போன்றே எழுத்தும் இருக்க வேண்டும் என்று விழைந்தவர் அவர் அதனால், எளிமையான - மிக மிக எளிமையான நடையைப பின்பற்றினார் சொல்லும் செய்தி - அது எவ்வளவு கனமானதாக இருந்தாலும் - படிப்பவரை உரியவாறு சென்றடைய வேண்டும்; உரிய பயனைத் தரவேண்டும் என்பது வ உ.சி யின் நோக்கமாக இருந்தது. அதுவே தம்முடைய தமிழ்நடை எளிமையானதாக இருக்க வேண்டும் என்ற உறுதியை அவருள் ஏற்படுத்தியது

வ உ சி பேச்சு மொழியிலுள்ள சொற்கள், சொற்றொடர்கள், இலக்கண அமைதிகள் முதலியவற்றைப் பயன்படுத்தி, சிறுசிறு தொடர்களால் தம் உள்ளத்தில் எழுந்த எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் மக்கள் விரும்பிப் படிப்பதற்கு ஏற்றவாறு தெளிவாக வெளிப்படுத்திக் காட்டியுள்ளார் இது அவருடைய தமிழ்நடையின் ஆற்றலைப் புலப்படுத்தும்.

பேச்சு வழக்கைத் தழுவி எழுதும் இடங்களில் எல்லாம் அவர் நடையில் ஒரு வேகமும் உயிர்த்துடிப்பும் இருத்தலைக் காணலாம் சொற்களே, தொடர்களாகி - தனித்தனித் தொடர்களாக நின்று, கருதிய பொருளை - வ உ.சி. சொல்லக் கருதிய பொருளைத் தெளிவாக உணர்த்துகின்றன; அவருக்குத் தமிழ் உரைநடை வரலாற்றில் ஓர் இடத்தைப் பெற்றுத் தருகின்றன.

தனிமனித ஒழுக்க மேம்பாட்டிற்காக வ உ சி எழுதிய, மொழிபெயர்த்த ஆன்மிகம் சார்ந்த படைப்புகள் வாழும் நெறிகளை மக்களுக்கு அறிவுறுத்தின.

தக்கது - பொருத்தமானது என்று தாம் கருதியதை எவ்விதத் தயக்கமும் இன்றி வெளிப்படுத்தும் துணிவு, திட்பமும் நுட்பமும் செறிந்த தருக்கநெறி சார்ந்த வெளிப்பாட்டுத் திறன், எளிமை - இவற்றை வ உ.சி.யின் உரைநடைத் தமிழின் தனித்த பண்புகளாகக் கொள்ள முடியும்

> தம்முடைய பேச்சாற்றலால் தமிழுக்குப் புதியதொரு கலையை - 'மேடைத் தமிழ்' என்னும் துறையை - வழங்கினார்.
>
> தம்முடைய ஆன்மிக எழுத்துகளால், பின்னாளில் பல்கிப் பெருகித் தழைத்த 'வாழ்வியல் நூல்கள்' என்ற புதிய துறையைத் தமிழில் தொடங்கி வைத்தார்.

இவை வ.உ.சி.யின் தமிழ் ஆளுமையின் தனிச்சிறப்புகளாகக் குறிக்கத் தக்கவை. இவற்றின் வழி, மேடைத் தமிழ் வரலாற்றிலும் தமிழ் உரைநடை வரலாற்றிலும் அவர் தம் தமிழ் முத்திரைகளைப் பதித்தார்; வரலாற்றில் இடம் பெற்றார்.

# பயன்பட்ட நூல்கள்/ மலர்கள்/இதழ்கள்


முதன்மை நூல்கள் — **வ.உ.சி. நூல்கள்**
**வ.உ.சி. கட்டுரைகள்**

**துணை நூல்கள்**

அரசு, மா.ரா., (தொகுப்பாசிரியர்) — **வ.உ.சி. `கட்டுரைகள்** பாரி நிலையம், சென்னை, முதற் பதிப்பு, 1989

........ ................ — **வ.உ.சி. வளர்த்த தமிழ்** உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2002

கிருஷ்ணசாமி, எம்., (தொகுப்பாசிரியர்) — **வி.ஓ.சிதம்பரம் பிள்ளை சரித சுருக்கம்**, சென்னை, 1908

சம்பத், என்., மணி, பெ.சு., — **வ.உ.சிதம்பரம் பிள்ளை** செய்தி ஒலிபரப்பு அமைச்சகம், இந்திய அரசு, புது தில்லி, 1995

சாரங்கபாணி, இரா., — **திருக்குறள் உரை வேற்றுமை - அறத்துப்பால்** அண்ணாமலைப் பல்கலைக்கழகம் சிதம்பரம், முதற் பதிப்பு, 1989

சிதம்பரநாதன், அ., — **தமிழோசை** பழனியப்பா பிரதர்ஸ், திருச்சி, 1959

சிவசுப்பிரமணியன், ஆ., — **வ.உ.சி.யும் முதல் தொழிலாளர் வேலை நிறுத்தமும்** மக்கள் வெளியீடு, சென்னை, முதற் பதிப்பு, 1986

..... . ......... .. . **வ.உ.சி. ஓர் அறிமுகம்**
மக்கள் வெளியீடு, சென்னை,
முதற் பதிப்பு, 2001

சிவஞானம், ம.பொ., **கப்பலோட்டிய தமிழன்**
தமிழ்ப் பண்ணை, சென்னை, 1944

.................. **விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாறு,**
இன்ப நிலையம்,
சென்னை, முதற் பதிப்பு, 1970

சுத்தானந்த பாரதியார் **வீர விளக்கு வ.வே.சு. ஐயர்**
அன்பு நிலையம்,
இராமச்சந்திரபுரம், 1947

.................. **சோதனையும் சாதனையும் - இரண்டாம் பாகம்,**
யோக சமாஜம்,
சென்னை,1975

சுந்தரம் பிள்ளை, குருமலை **ஜி. சுப்பிரமணிய ஐயர் சரித்திரம்**
சுதேசமித்திரன் அச்சுக்கூடம்,
சென்னை,1907

திருநாவுக்கரசு, க.த., **திருக்குறள் நூலடைவு கையச்சேடு,**
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை,1970

பாரதியார் **பாரதியார் கட்டுரைகள்**
வானதிபதிப்பகம், சென்னை,
இரண்டாம் பதிப்பு, 1986

மணி, பெ.சு. **புதிய விழிப்பின் முன்னோடி**
பூரம் பப்ளிகேஷன்ஸ்,
சென்னை, முதற் பதிப்பு, 1987

.................. **வீரமுரசு சுப்பிரமணிய சிவா**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,
சென்னை, முதற் பதிப்பு, 1984

லீலாவதி, தி., **தமிழ் தந்த வ.உ.சி.**
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை, 1986

வ ரா., **தமிழ்ப் பெரியார்கள்**
தமிழ்ப் பண்ணை,
சென்னை, முதற் பதிப்பு, 1943

வேதநாயகம் பிள்ளை, மாயூரம் **பிரதாப முதலியார் சரித்திரம்**
வே ஞா.ச இருதயநாதன்,
சென்னை, 1979

வேங்கடாசலபதி, ஆ இரா **வ.உ.சி.யும் திருநெல்வேலி எழுச்சியும்**
மக்கள் வெளியீடு, சென்னை,
முதற் பதிப்பு, 1987

வையாபுரிப் பிள்ளை, எஸ்., **தமிழ்ச் சுடர் மணிகள்**
பாரி நிலையம்,
சென்னை, நான்காம் பதிப்பு,
1968

ஜகந்நாத ராஜா, மு.கு., **மொழிபெயர்ப்பு - பண்பும் பயனும்** (தொகுப்பு)
வளர்மதி பதிப்பகம்
சென்னை, முதற் பதிப்பு, 1984

**மலர்கள்**

சுடர், வ.உ.சி மலர், தில்லித் தமிழ்ச் சங்கம், 1964

தினமணி, வைரவிழா ஆண்டு மலர், 1994

வ உ சிதம்பரம்பிள்ளை (கட்டுரைகள் தொகுதி), பம்பாய்த் தமிழ்ச்சங்கம், முதற்பதிப்பு, 1951

வ.உ.சிதம்பரனார் நூற்றாண்டு விழா மலர், 1972

விடுதலை வீரர் 'வ உ சி., நூற்றாண்டுவிழாச் சிறப்பு மலர், கோவை, 1972

**இதழ்கள்**

ஆனந்த குணபோதினி, திங்களிதழ், செப்டம்பர் 1926

செங்கோல், வார இதழ், 13.6.1965

செந்தமிழ்ச் செல்வி, திங்களிதழ், சிலம்பு 45, பரல் 11, 1970, செப்டம்பர் 1972

ஞானபாநு, திங்களிதழ், தொகுதி - 1, 1913; தொகுதி-2, 1914; தொகுதி-3, 1915

தமிழ்ப்பொழில், திங்களிதழ், 1929-30; 1930-31

தமிழாய்வு, சென்னைப் பல்கலைக்கழகம், 1973

வித்தியாபாநு, தொகுதி - 6, 1914

விவேகபாநு (குற்றாலம்), திங்களிதழ், தொகுதி-1, 1900-1901

விவேகபாநு (மதுரை), திங்களிதழ், தொகுதி-2, 1902, தொகுதி-5, 1906; தொகுதி-6, 1907

**ஆங்கில நூல்கள்**

Allen, James — **Four Popular Books**
Kazhagam, Chennai, 1967

Bapat, S.V., (Editor) — **Reminiscences of Lokamanya Tilak** - Vol. III,
Poona, 1928

Sampath, R.N., Mani, Pe.Su., — **V.O.Chidambaram Pillai**
Publication Division,
Govt. of India, New Delhi, 1992

# இணைப்புகள்
# வ.உ.சி.யின் நூல்கள்
## (கால வரிசை)

| | | |
|---|---|---|
| 1. | மனம் போல வாழ்வு | 1909 |
| 2. | அகமே புறம் | 1914 |
| 3 | மெய்யறம் | 1914 |
| 4. | மெய்யறிவு | 1915 |
| 5 | பாடல் திரட்டு | 1915 |
| 6. | வலிமைக்கு மார்க்கம் | 1916 |
| 7. | இன்னிலை (பதிப்பு) | 1917 |
| 8. | திருக்குறள் - அறத்துப்பால் - மணக்குடவர் உரை (பதிப்பு) | 1917 |
| 9. | எனது அரசியல் பெருஞ்சொல் | 1927 |
| 10 | தொல்காப்பியம் - இளம்பூரணம் - பொருளதிகாரம் (அகத்திணையியல், புறத்திணையியல்) - இரண்டாம் பதிப்பு | 1928 |
| 11. | தொல்காப்பியம் - இளம்பூரணம் - எழுத்ததிகாரம் (பதிப்பு) | 1928 |
| 12. | சாந்திக்கு மார்க்கம் | 1934 |
| 13. | சிவஞான போதம் | 1935 |
| 14. | திருக்குறள் - அறத்துப்பால் - வ.உ.சி. உரை | 1935 |
| 15. | தொல்காப்பியம் - இளம்பூரணம் - பொருளதிகாரம் (ஒன்பது இயல்களும் அடங்கியது)- எஸ். வையாபுரிப் பிள்ளையுடன் இணைந்து பதிப்பித்தது | 1936 |
| 16. | சுயசரிதை | 1946 |
| 17. | வ.உ.சி. கண்ட பாரதி | 1946 |

# வ.உ.சி.யின் கட்டுரைகள்

## (கால வரிசை)

1. 'கடவுளும் பக்தியும்', விவேகபாநு (குற்றாலம்), செப்டம்பர் 1900
2 'விதி அல்லது ஊழ்', மேலது, அக்டோபர் 1900
3. 'ஈகை', மேலது, டிசம்பர் 1900
4. 'கடவுள் ஒருவரே', மேலது, பிப்பிரவரி 1901
5 'சுதேசாபிமானம்', விவேகபாநு (மதுரை), பிப்பிரவரி 1906
6. 'சுதேச ஸ்டீமர் விக்ஞாபனம்', மேலது, நவம்பர் 1906
7. 'மனிதனும் அறிவும்', ஞானபாநு, ஏப்பிரல் 1913
8 'மனமும் உடம்பும்', மேலது, மே 1913
9 'வினையும் விதியும்', மேலது, ஜூன் 1913
10 'தமிழ் எழுத்துக்கள்', மேலது, செப்டம்பர் 1915
11 'தமிழ்', சுதேசமித்திரன், 29.10 1915
12. 'தமிழ் நூல்கள்', சுதேசமித்திரன் (வருஷ அனுபந்தம்), 1918
13 'திருவள்ளுவர் திருக்குறள்', தமிழ்ப் பொழில், 1929-30, 1930-31
14. 'திலக மகரிஷியின் வரலாறு', வீரகேசரி (ஞாயிறுதோறும் வெளிவந்த தொடர்), கொழும்பு, 1933-34
15 'கடவுளைக் காண்டல்', ஊழியன், சனவரி 1934
16 'சிவஞானபோத ஆறாஞ் சூத்திர ஆராய்ச்சி', தினமணி (நாளிதழ்), 6.12.1935
17 'உலகமும் கடவுளும்', தினமணி (நாளிதழ்), 17.1.1936

# வாழ்க்கைக் குறிப்புகள்

| | |
|---|---|
| 1872 | வ.உ சிதம்பரனார் பிறப்பு<br>செப்டம்பர் 5<br>பிறந்த ஊர் ஓட்டப்பிடாரம்<br>பெற்றோர் உலகநாதர், பரமாயி |
| 1893 | திலகரின் அரசியல் இயக்கத்தால் ஈர்க்கப் பெறுதல் |
| 1894 | வழக்கறிஞர் (பிளீடர்) தேர்வில் வென்று வழக்கறிஞரானமை |
| 1895 | திருமணம் |
| 1898 | வ.உ.சி யின் முதல் அரசியல் சொற்பொழிவு; நிகழ்த்தப்பெற்ற இடம் ஓட்டப்பிடாரம் |
| 1900 | தூத்துக்குடி வாழ்க்கை<br>வழக்கறிஞராகப் பணியாற்றத் தொடங்கியமை<br>வ.உ சி.யும் அவர் நண்பர்களும் ஆன்மிக இதழ் ஒன்றைத் தொடங்க விரும்பி ஆகஸ்டு மாதத்தில் அறிக்கை வெளியிடுதல்<br>வ.உ.சி யும் அவர் நண்பர்களும் வெளிக் கொணர விரும்பிய ஆன்மிக இதழ், 'விவேகபானு' என்ற பெயரில் கணபதியானந்த சுவாமிகள் என்பவரை ஆசிரியராகக் கொண்டு செப்டம்பரில் குற்றாலம் அகத்தியர் ஆசிரமத்தில் இருந்து வெளிவந்தது<br>வ.உ.சி யின் முதல் கட்டுரையான 'கடவுளும் பக்தியும் ' இவ்விதழில் வெளியானது |
| 1901 | வ.உ.சி யின் துணைவியார் வள்ளியம்மையின் மறைவு |
| 1904 | வ.உ சி.யின் முதல் இலக்கியச் சொற்பொழிவு<br>தலைப்பு: திருக்குறள் - ஒழுக்கமுடைமை<br>இடம்: தூத்துக்குடி சைவசித்தாந்த சபை |

1905 மேலைநாட்டுத் தத்துவ அறிஞர்களுள் வ.உ.சி.யைப் பெரிதும் ஈர்த்தவரான ஜேம்ஸ் ஆலனின் நூல்களைப் படிக்கத் தொடங்கியமையும் அவற்றைத் தமிழில் மொழிபெயர்க்க விரும்பியமையும்

1906 வ உ.சி.யின் முதல் அரசியல் கட்டுரை வெளிவருதல் தலைப்பு 'சுதேசாபிமானம்'

இதழ்: மதுரை விவேகபாநு, பிப்பிரவரி 1906

வ உ.சி., பாரதி முதல் சந்திப்பு

இடம்: 'இந்தியா' இதழின் அலுவலகம், சென்னை

இராமகிருஷ்ணரின் சீடர்களில் ஒருவரும் சென்னை இராமகிருஷ்ண மடத்தின் முதல் தலைவருமான இராமகிருஷ்ணானந்தரை வ.உ.சி. சந்தித்தமை

இராமகிருஷ்ணரின் சீடர்களில் ஒருவரான அபேதானந்தர் அமெரிக்கா முதலிய நாடுகளில் தம் ஆன்மிகப் பணிகளை முடித்துக் கொண்டு இலங்கைவழியாக இந்தியா திரும்பியபோது தூத்துக்குடி துறைமுகத்தில் அவரை எதிர்கொண்டு வரலாற்றுச் சிறப்புமிக்க வரவேற்பு அளித்தமை

'சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி' என்ற பெயரில் சுதேசிக் கப்பல் நிறுவனம் அக்டோபரில் முறையாகப் பதிவு செய்யப்படுதல்

1907 சுதேசிக்கப்பல் கம்பெனிக்காக 'காலியா', 'லாவோ' என்னும் இரு கப்பல்களை இயக்கியமை

விடுதலை இயக்க வரலாற்றில் பெரும் திருப்பத்தை ஏற்படுத்திய சூரத் காங்கிரசு மாநாடு நடந்தமை

| | |
|---|---|
| | காங்கிரசில் தீவிரவாத இயக்கம் உருவானமை<br>வ.உ.சி. தீவிரவாத இயக்கத்தின் முதல் நிலைத் தலைவர்களுள் ஒருவராதல் |
| 1908 | வ.உ.சி., சுப்பிரமணிய சிவம் முதல் சந்திப்பு - 3.2.1908இல் சிவம் தூத்துக்குடியில் வ.உ.சி.யைச் சந்தித்தமை |
| | தூத்துக்குடி கோரல் ஆலைத் தொழிலாளர்கள் ஊதிய உயர்வு முதலிய காரணங்களுக்காக வேலைநிறுத்தம் செய்தமை<br>வேலைநிறுத்தம் வ.உ.சி.யின் வழிகாட்டுதலில் நடந்தமை |
| 12.3.1908 | வ.உ.சி. கைது செய்யப்பெற்று விசாரணைக் கைதியாகப் பாளையங்கோட்டைச் சிறையில் அடைக்கப்படுதல் |
| 13.3.1908 | வ.உ.சி. கைது செய்யப்பெற்றதை எதிர்த்து உருவான மக்கள் எழுச்சியும் போராட்டமும் |
| 7.7.1908 | இரட்டை ஆயுள் தண்டனை (நாற்பது ஆண்டுகள்) வழங்கப்பெற்றமை |
| 9.7.1908 | வ.உ.சி.யின் கோவைச் சிறை வாழ்க்கையின் தொடக்கம் - சிறையில் வ.உ.சி. செக்கிழுத்தமை; ஜேம்ஸ் ஆலனின் As a Man Thinketh என்னும் ஆங்கில நூலை 'மனம் போல வாழ்வு' என்ற பெயரில் மொழிபெயர்த்தமை |
| 1909 | வ.உ.சி.யின் முதல் நூலான 'மனம் போல வாழ்வு' அவர் நண்பர் சுவாமி வள்ளிநாயகத்தால் சென்னையில் வெளியிடப் பெற்றமை |
| 1912 | வ.உ.சி.யின் விடுதலை - 24.12.1912 |
| 1914 | ஜேம்ஸ் ஆலனின் Out From The Heart 'அகமே புறம்' என்று வ உ.சி யின் மொழிபெயர்ப்பில் வெளிவந்தமை (கோவைச் சிறையில் எழுதப்பெற்றது)<br>'மெய்யறம்' வெளிவந்தமை (கண்ணனூர்ச் சிறையில் எழுதியது) |

| | |
|---|---|
| 1915 | 'மெய்யறிவு' வெளிவருதல் (கண்ணனூர்ச் சிறையில் எழுதியது) |
| | 'பாடல் திரட்டு' வெளிவந்தமை (வ உ சி எழுதிய தனிப்பாடல்களின் தொகுப்பு) |
| 1916 | ஜேம்ஸ் ஆலனின் From Poverty To Power என்னும் ஆங்கில நூலின் முதல் பகுதியாகிய, The Path of Prosperity 'வலிமைக்கு மார்க்கம்' என்ற பெயரில் வ.உ சி யின் மொழிபெயர்ப்பாக வருதல் |
| 1917 | திருக்குறள் - மணக்குடவர் உரை - அறத்துப்பால் வ.உ. சி யின் பதிப்பாக வெளிவருதல் |
| | 'இன்னிலை' - வ.உ சி உரையுடன் வெளிவருதல் |
| 1927 | 'எனது அரசியல் பெருஞ்சொல்' |
| | (அரசியல் மாநாட்டுத் தலைமைப் பொழிவு) நூலாக்கம் பெற்றமை |
| 1928 | தொல்காப்பியம் - இளம்பூரணம் - பொருளதிகாரம் - அகத்திணையியல், புறத்திணையியல் - இரண்டாம் பதிப்பு வெளி வருதல் (இதன் முதல் பதிப்பு 1920இல் வந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது) தொல்காப்பியம் - இளம்பூரணம் - எழுத்ததிகாரம் வெளிவருதல் |
| 1933 | இலங்கை 'வீரகேசரி' இதழில் திலகரின் வாழ்க்கை வரலாற்றை எழுதத் தொடங்குதல் |
| 1934 | ஜேம்ஸ் ஆலனின் From Poverty To Power என்னும் ஆங்கில நூலின் இரண்டாவது பகுதியாகிய The Way of Peace என்பது 'சாநதிக்கு மார்க்கம்' என்ற பெயரில் மொழிபெயர்ப்பாக வருதல் |
| 1935 | திருக்குறள் - அறத்துப்பால் - வ உ சி உரை வெளியீடு |
| | சிவஞான போதம் - வ உ சி உரை வெளிவருதல் |
| 1936 | தொல்காப்பியம் - இளம்பூரணம் - பொருளதிகாரம் (முழுமையாக) வ உ சி., எஸ். வையாபுரிப்பிள்ளை பெயரில் வெளிவருதல் |
| 18 11 1936 | வ.உ சி யின் பெருவாழ்வின் நிறைவு |

**வ.உ.சி.** (1872-1936) கப்பலோட்டியமையும் செக்கிழுத்தமையும் வ.உ.சி. பொதுவாழ்வின் வீரத் தழும்புகள். நாடு தழுவிய நிலையில் அன்றைய அரசியல் களத்தில் ஒரு சாதனையாளராக - தன்னேரில்லாத் தலைவராக - தலைவணங்கி ஏற்றுக் கொள்ளப்பெற்ற இந்தியத் தலைவர், அவர். தமிழகத்தில் விடுதலை இயக்கத்தின் முதல் மக்கள் தலைவரான வ.உ.சி. விடுதலை இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்றுவதற்குத் தமிழைப் பயன்படுத்தினார். அதுவரையில் தமிழகம் அதிகம் அறிந்திராத மேடைப்பேச்சு என்பதை மக்களுக்கு முறையாக அறிமுகம் செய்தவர் அவர். மக்களை - பாமர மக்களை ஒருங்கிணைத்து அவர்களைச் சிந்திக்கப் பழக்கியவர். 'பொதுமக்கள் கருத்து' என்ற ஒன்றை அரசியல் சார்ந்த நிலையில் உருவாக்குதல் என்னும் அரிய சாதனையை இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நிகழ்த்திக் காட்டியவர்; அதற்கு மேடைப் பேச்சு கருவியாகியது. 'மேடைப்பேச்சு' என்பது ஒரு கலையாக, துறையாக, ஆற்றல் மிக்க படைக்கலனாகப் பின்னாளில் தழைத்தோங்கப் புதுப்பாதை வகுத்தவர். அவருடைய தமிழ்ப் பணிகளின் சிறப்பான தொடக்கமாக மேடைப் பொழிவுகளைக் கொள்ளலாம்.

இந்நூலாசிரியர் முனைவர் **மா.ரா. அரசு** சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்த் துறையில் பணியாற்றுகிறார். இவர் இதழியல், வாழ்க்கை வரலாறு ஆகிய துறைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். தந்தையாரின் நினைவாக அவர் பெயரில் டாக்டர் மா. இராசமாணிக்கனார் இதழியல் ஆய்வு மையம் என்ற அமைப்பை 1983 முதல் நடத்தி வருபவர். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும் டாக்டர் மா. இராசமாணிக்கனார் இதழியல் ஆய்வு மையமும் சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை வானொலி நிலையம், பச்சையப்பன் கல்லூரி முதலியவற்றுடன் இணைந்து பதினொரு இதழியல் கருத்தரங்குகள் நடத்தியுள்ளன (1997-1999, 2001). அவற்றுள், 'தமிழில் இதழியல்' என்னும் தலைப்பில் அமைந்த பன்னாட்டுக் கருத்தரங்கம் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

Wa. Woo. Cee (V. Woo. Chidhambaranar) *(Tamil)* Rs.25

ISBN-81-260-1713-9